REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜூலை 12 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY
வரு. 92 இல. 165 | Friday 12, July, 2024 | 24 பக்கங்கள் | 50/-

### மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தும்
## ஜனாதிபதி புலமைப்பரிசில்கள் இன்று முதல் வழங்க ஏற்பாடு
**விண்ணப்பிக்காதோர் அவசரமாக விண்ணப்பிக்கவும்**

தரம் 01 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் பெற இதுவரை விண்ணப்பிக்காத பாடசாலைகளுக்கு அவசரமாக விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

க.பொ.த உயர் தரம் மற்றும் முதலாம் தரம் முதல் 11 ஆம் தரம் 08




## சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க சட்ட மா அதிபராக நியமனம்
**அரசியலமைப்பு சபை அங்கீகாரம்**

ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட்ட மாஅதிபராக நியமிக்க அரசியலமைப்புச் சபை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சட்ட மாஅதிபராக செயற்பட்ட சஞ்ஜய் ராஜரத்தினத்தின் சேவைக்காலம் கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து கடந்த சில நாட்களாக சட்ட மாஅதிபர் 08

## விவசாய ஓய்வூதிய கொடுப்பனவுக்கு இவ்வருடம் 5,386 மில். ரூபா ஒதுக்கீடு



**அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2024 ஆம் ஆண்டிற்கான விவசாய ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்குவதற்காக அரசாங்கம் 08

## கொம்பனித்தெரு மேம்பாலம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு



போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் (5,278 மில்லியன்) 527 கோடியே 80 இலட்சம் ரூபா செலவில் கொம்பனித் தெருவுக்கும் நீதிபதி அக்பர் மாவத்தைக்குமிடையில் நிர்மாணிக்கப்பட்ட மேம்பால திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (11) திறந்து வைத்தார்.

நாளாந்தம் 109 ரயில் பயணங்களுக்கு புகையிரத கடவை மூடப்படுவதால் ஏற்படும் தாமதம் மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் நோக்கில் வீதி அபிவிருத்தி அதிகார சபை இந் திட்டத்தை 08

# பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள
# ரயில் நிலைய அதிபர்கள் 1000 பேருக்கு சேவையிலிருந்து விலகியதாக கடிதம்
## ரயில்வே பொது முகாமையாளரால் அனுப்பிவைப்பு

### கடிதங்கள் திரும்ப பெறப்பட மாட்டாதென அமைச்சர் பந்துல அறிவிப்பு

பயணிகளுக்கு பாரிய அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட ரயில் நிலைய அதிபர்கள் சேவையிலிருந்து விலகியதாக கடிதங்களை வழங்க, ரயில்வே பொது முகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்திய போதிலும் இவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதாலேயே இக்கடிதங்களை வழங்க பொது முகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் பிரகடனம் செய்த போதிலும் நாட்டின் பொதுச் சட்டத்துக்கு தொழிற்சங்க பயங்கரவாதிகளால் சவால் விடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன நேற்று (11) தெரிவித்தார்.

தொழில்சார் கோரிக்கைகளெனக் கருதி நாட்டு மக்களை துன்புறுத்துவதற்கு எந்தவொரு தொழிற்சங்கத்துக்கும் இடமில்லை எனவும், இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்தி ரயில்வே சேவைகளை முடிந்தவரை வழங்க முயற்சிப்பதாகவும் அவர் கூறினார். இரண்டு தடவைகள் முன்னெடுத்த வேலை நிறுத்தங்கள் காரணமாக இருவர் இதுவரை பலியாகியுள்ளனர்.

அந்த கொலைக் குற்றச்சாட்டுக்கு முற்றிலுமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ரயில் நிலைய அதிபர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

இவ்வாறான நாசகார செயற்பாடுகளினால் இந்நாட்டில் இலட்சக்கணக்கான சாதாரண நிராயுதபாணிகளும் அப்பாவிகளும் நாளாந்தம் அவதியுறுவதாகவும் அமைச்சர் கூறினார். இந்த அரசியல் செயற்பாடுகளை முன்னரே அறிந்திருந்ததால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தாம், கடிதம் 08

## டயனா கமகேவுக்கு எதிராக மற்றொரு வழக்குத் தாக்கல்



குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு போலியான தகவல்களைச் சமர்ப்பித்து கடவுச்சீட்டை பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில், முன்னாள் அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று (11) வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிணையிலுள்ள டயனா கமகே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகிய பின்னர், கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுலுவெல குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு ஆகஸ்ட் முதலாம் திகதி வழக்குரைஞர்களிடத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்து குற்றச்சாட்டுகளை வாசிக்குமாறு அறிவித்தார்.

பிரதம நீதிவான் நேற்று விடுமுறையில் இருந்ததால் 08

## பாதாளக் குழுக்களை ஒழிக்க முறையான சட்டங்கள் அவசியம்
**அரகலயவுக்கு பிரியாணி வழங்கியோரும் இவர்களே**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மனித உரிமை என்ற போர்வையில் பாதாள உலகம் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு துணை போகாமல், பாதாள உலகக் குழுவை முழுமையாக ஒழிப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதேவேளை, 08

## டிஜிட்டல் மயமாகும் நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை



தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, JICA நிறுவனம் மற்றும் Cyclomax International (Pvt) Ltd ஆகிய நிறுவனங்கள் இணைந்து 08

### எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்கு அரசு தயார்
## மக்களை பணயம் வைத்து போராடும் ஸ்டாலின் குழுவினரும் பயங்கரவாதிகளே

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார். இவ்வாறான பின்னணியில் நாட்டு மக்களின் கவனத்தை திசை திருப்பவே எதிர்க்கட்சியினர் இச்சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை கொண்டு வந்துள்ளதாக, அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப் போடுவதற்கான எந்த வித தீர்மானத்தையும் அமைச்சரவை மேற்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் காணப்படும் சிக்கலை தீர்ப்பதற்காகவே யோசனை முன்வைக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார். 08


### பிரச்சினைகளின் போது ஓடி ஒளிந்தவர்கள்
## இன்று மேடைகளில் வீரவசனம் பேசும் அளவுக்கு நாட்டின் நிலைமை மாற்றம்



நாட்டில் நெருக்கடி ஏற்பட்ட போது ஓடி ஒளிந்தவர்கள் இன்று தேர்தல் மேடைகளில் வீர வசனம் பேசுமளவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பியுள்ளதாக வர்த்தக, சுற்றுச்சூழல் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தைரியமாக சவாலை ஏற்று நாட்டை கட்டியெழுப்ப பாடுபட்டதால், நாடு இந்த நிலைக்கு வந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். 08

## மட்டு. கரடியனாறு பகுதியில் தோட்டாக்கள், மிதி வெடிகள் மீட்பு



மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைக்காடு பிரதேசத்திலுள்ள தனியார் காணியிலிருந்து பெருந்தொகையான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. காரைக்காடு பகுதியில் விசேட 08

## மழையுடனான கால நிலை இன்று முதல் அதிகரிக்கும்
**மின்னல் தாக்கங்கள் குறித்தும் எச்சரிக்கை**




அடுத்த சில நாட்களில் நாட்டின் தென் மேற்கு பகுதிகளில் மழையுடனான கால நிலை அதிகரிக்குமென, எதிர் பார்க்கப் படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் 08

## ஹிருணிக்காவின் பிணை மனு திங்கட்கிழமை பரிசீலனைக்கு



கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர, தாக்கல் செய்த மனுவை, எதிர்வரும் (15 )திங்கட்கிழமை, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. தம்மை பிணையில் விடுவிக்குமாறு கோரி 08

## மலையகத்தில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவதில் அவதானம்



மலையகத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு, அவர் இதனைக் 08

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்


காசநோய் ஆராய்ச்சியில் திருப்புமுனை:

# நுரையீரல் கட்டமைப்பை பிரதிபலிக்கும் 3டி அமைப்பை உருவாக்கிய SSI



காசநோய் (TB) ஆராய்ச்சிக்கான குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில், இந்திய அறிவியல் நிறுவனத்தின் (IISC) விஞ்ஞானிகள் மனித நுரையீரல் கட்டமைப்பினை துல்லியமாக பிரதிபலிக்கும் ஒரு புதுமையான 3 டி ஹைட்ரோஜெல் சோதனை முறையை உருவாக்கியுள்ளனர்.

இந்த முன்னேற்றம் காசநோய் பாக்டீரியா நுரையீரல் கலங்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கவனிக்கவும், காசநோய் சிகிச்சையின் செயல்திறனை மதிப்பிடவும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகிறது.



மைக்கோபாக்டீரியம் காசநோய்க்கான ஒரு வலிமையான நோய்க்கிருமியாக உள்ளது, இது 10.6 மில்லியன் நபர்களை பாதிக்கிறது மற்றும் 2022ஆம் ஆண்டில் உலகளவில் 1.3 மில்லியன் இறப்புகளை ஏற்படுத்துகிறது என்று WHO தெரிவித்துள்ளது.

உயிர் பொறியியல் துறையின் இணை பேராசிரியர் ரச்சித் அகர்வால் தலைமையில், IISc குழு பாரம்பரிய 2D கலாசார மாதிரிகளின் வரம்புகளை நிவர்த்தி செய்தது.

இந்த பழைய மாதிரிகள் நுரையீரல் திசுக்களின் சிக்கலான 3D கட்டமைப்பை மீளுருவகம் செய்ய தவறிவிட்டன, இது ஆராய்ச்சி முடிவுகளை பக்கச்சார்பாக மாற்றுகிறது. அட்வான்ஸ்டு ஹெல்த் கேர் மெட்டீரியல்ஸில் வெளியிடப்பட்ட ஆய்வின் இணை ஆசிரியரான அகர்வால், காசநோயின் பரிணாம தழுவல் தன்மையைக் குறிப்பிட்டார், இது ஒரு நீண்டகால சவால் என்று விவரித்தார்.

புதிதாக உருவாக்கப்பட்ட ஹைட்ரஜல் கொலாஜனைப் பயன்படுத்துகிறது, இது ஒரு முக்கிய நுரையீரல் திசுக் கூறு. இந்த 3 டி அமைப்பு மனித நோயெதிர்ப்பு உயிரணுக்களுடன் காசநோய் பாக்டீரியா தொடர்புகளை நீண்டகாலமாக கண்காணிக்க அனுமதிக்கிறது, இது வழக்கமான அமைப்புகளின் 47 நாட்களுடன் ஒப்பிடும்போது மூன்று வாரங்கள் வரை நீடிக்கும். குறிப்பிடத்தக்க வகையில், ஆர்.என்.ஏ வரிசை முறை, ஹைட்ரோஜெல்லில் வளர்க்கப்பட்ட செல்கள் உண்மையான மனித நுரையீரல் திசு மாதிரிகளை டிரேடிட்டில் உள்ளதை விட நெருக்கமாக ஒத்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியது

மருந்து சோதனையியல் அமைப்பின் செயல்திறனையும் குழு நிரூபித்தது.

பொதுவான காசநோய் மருந்தான பைராசினமைடு, கணிசமாக குறைந்த அளவுகளில் செயல்திறனை வெளிப்படுத்தியது, 2டி கலாசாரங்களுடன் ஒப்பிடும் போது மருத்துவ தேவைகளுடன் மிகவும் நெருக்கமாக ஒத்துப்போகிறது என்பதை அவர்கள் கண்டறிந்தனர்.

2டி ஆய்வு விறைப்புக்கும் நுரையீரல் திசுக்களின் மென்மைக்கும் இடையிலான அப்பட்டமான வேறுபாட்டை அகர்வால் எடுத்துக்காட்டினார், இது தொற்று நிலைமைகளின் ஹைட்ரோஜெல்லின் உயர்ந்த பிரதிபலிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தொழில்துறை மருந்து சோதனைக்கான தங்கள் கண்டுபிடிப்பை பரவலாக ஏற்றுக்கொள்வதற்கும் அளவிடுவதற்கும் வசதியாக ஆராய்ச்சியாளர்கள் இந்திய காப்புரிமைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

எதிர்கால முயற்சிகள் நோயாளிகளிடையே காசநோயின் பல்வேறு வெளிப்பாடுகளை ஆராய்வதற்கும் மாதிரியைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது

இந்த முன்னேற்றம் காசநோய் ஆராய்ச்சியை விரைவுபடுத்துவதாக உறுதியளிக்கிறது, இது இந்த நீடித்த உலகளாவிய சுகாதார சவாலுக்கு மிகவும் பயனுள்ள சிகிச்சைகளுக்கு வழிவகுக்கும்.

முன்னோக்கிப் பார்க்கும்போது, மறைந்த காசநோய் மற்றும் ஆக்கிரமிப்பு அறிகுறி பற்றிய நுண்ணறிவுகளை ஆழப்படுத்த அவர்களின் 3 டி ஹைட்ரோஜெல் கலாசாரத்தில் பாதிக்கப்பட்ட வெள்ளை இரத்த அணுக்களின் கொத்தான கிரானுலோமாக்களைப் பிரதிபலிக்க குழு திட்டமிட்டுள்ளது.

ஆய்வின் முதல் எழுத்தாளரும் பி.எச்.டி மாணவருமான விஷால் குப்தா, புதிய, சமமான பயனுள்ள மருந்துகளுக்கு வழி வகுக்கும் பைராசினமைடின் செயல்பாட்டு வழிமுறையை அவிழ்ப்பதில் ஆர்வம் காட்டினார்.

# தென் கொரியாவில் தற்கொலை செய்துகொண்ட ரோபோ



தென் கொரியாவில் ரோபோ ஒன்று தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

தென் கொரியாவில் ரோபோ ஒன்று வேலைப் பளு காரணமாக மன அழுத்தத்திற்கு உள்ளாகி தற்கொலை செய்து கொண்டிருக்கிறது. குமி நகர சபை அலுவலகத்தில் ஊழியர்களுக்கு உதவுவதற்காக, இந்த ரோபோ பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டிருந்திருக்கிறது. கலிபோர்னியாவில் உள்ள ரோபோடிக்ஸ் நிறுவனம் தயாரித்த இந்த ரோபோ, கடந்த 2023ம் ஆண்டு அக்டோபரில் இந்த அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டிருக்கிறது.

இந்த ரோபோவுக்குத் தென்கொரிய அரசு ஊழியர் என்ற அடையாள அட்டையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வேலை நேரமாகக் கொண்ட இந்த ரோபோ, அலுவலகம் வரும் உள்ளூர்வாசிகளிடம் இருந்து தினசரி ஆவணங்களைப் பெற்று, அதிகாரிகளிடம் வழங்குவது போன்ற பணிகளைச் செய்து வந்திருக்கிறது.

இந்நிலையில், அந்த ரோபோ திடீரெனத் தற்கொலை செய்து கொண்டதாக வெளியான செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இரண்டாவது தளத்தில் இருந்து முதல் தளத்திற்கு இறங்கும் படிக்கட்டில் விழுந்து நொறுங்கி இருக்கிறது.

சேதமடைந்த பாகங்கள் சேகரிக்கப்பட்டு, ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்கொலை செய்துகொள்வதற்கு முன்பு ரோபோ, அந்த அலுவலகத்தின் இரண்டாவது தளத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்ததாகவும், மிகவும் குழப்பத்துடன் காணப்பட்டதாகவும் அங்கிருந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

# சங்கநாத இணைய வானொலியின் மூன்றாம் ஆண்டு துவக்க விழா

## ஆகஸ்ட் 23ஆம் திகதி சென்னையில்



மறைந்த தென்னிந்திய பிரபல இஸ்லாமிய பாடகர் சங்கநாத செம்மல் காயல் ஷேக் முஹம்மது நினைவில் வெளிவரும் சங்கநாத இணைய வானொலியின் மூன்றாம் ஆண்டு துவக்க விழா சென்னை தியாக ராய நகரில் அமைந்திருக்கும் சர்பிடி அரங்கத்தில் ஆகஸ்ட் 23ஆம் திகதி நடைபெறுகின்றது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கலை துறையைச் சார்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறையைச் சார்ந்த சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெறுகின்றது, மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்டங்களும் காணப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியை தலைமை ஏற்றி நடத்துபவர் சங்கநாத செம்மல் காயல் ஷேக் முகமதுவின் புதல்வன் சங்க நாத வானொலியின் நிர்வாக இயக்குனர் டாக்டர் எஸ் எம் ரஷ்மி ரூமி.







புதிய தலைமுறை, இலங்கை தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்து நடத்திய இளைஞர்களுக்கான சிறந்த சாதனைகள், தலைமைத்துவம் மற்றும் பொருளாதாரம் சமூகத்திற்கான பங்களிப்புக்கான யூத்டாப் 40 (youth top 40) 'புதிய தலைமுறை ஆசியா விருதுகள் 2024' கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் கலந்துகொண்டார். இதன்போது பிளாட்டினம் அனுசரணையாளர் சூர்யா தேசிய வெற்றியாளர் மற்றும் 9 மாகாண வெற்றியாளர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் யுவதிகள் அணியின் தலைவரும் பிரதம அமைப்பாளருமான திருமதி கனிஷ்டா மைக்கல் இவ்வருடத்துக்கான சிறந்த இளைஞர் தலைவருக்கான விருதை பெற்றுக்கொண்டார். அது மாத்திரமின்றி, மாகாணங்களுக்கான வெற்றியாளர் தெரிவின் மத்திய மாகாண வெற்றியாளராகவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேலணை கதிர் வேலாயுத சுவாமி திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழா

**கோப்பாய் குறூப் நிருபர்**

வேலணை சரவணை தேவபுரம் கதிர் வேலாயுத சுவாமி திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை(12) தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6.00 மணிக்கு சிவநெறிபிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சொற்பொழிவு நடைபெறும். இதில், சைவப்புலவர்கள் சி. கா. கமலநாதன், செ.த. குமரன், ச. முகுந்தன், பொன். சந்திரவேல், கந்த. சத்தியதாசன், இளம் சைவப்புலவர்கள் ச.நவநீதன், நித்திய பாபுதரன், க.கயிலைவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்.



நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 29 ஆவது ஆண்டு நினைவுதினம் அண்மையில் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

# இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர் 13பேர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 13 தமிழக கடற்றொழிலாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களையும் , அவர்களின் படகுகளையும் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு கடற்படையினர் கொண்டு சென்றுள்ளனர். கடற்றொழிலாளர்களை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பக்தர்கள் பெருமளவில் வந்து அருளாசி பெறும்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

1967 ஆம் ஆண்டிலிருந்து அடுத்த தலைமுறையினரான அவரது மகன் வி.கே. ரவீந்திரசோதி, மருமகன்களாகிய எஸ். ஆர். நல்லையா, கு. சிவகணநாதன் ஆகியோர் பொறுப்பேற்று நடத்தினர். ஏதிர்பாராத விதமாக 1974 ஆம் ஆண்டு தேயிலைத் தொழிற்சாலை உட்பட தனியார் தோட்டங்கள் அரச உடைமையாக்கப்பட்டன. மிகுதியாக இருந்த அவர்களது தேயிலைத் தோட்டத்தை குடும்பத்தினர் பராமரித்தனர். தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு கலவரத்தால் பாதிப்பு ஏற்பட்டதால், கிருஷ்ணபிள்ளை தொழிலில் இருந்து ஓய்வு பெற்று யாழ்ப்பாணத்தில் உள்ள 'ஊரெழு' என்ற தனது சொந்த ஊருக்குச் சென்று குடியேறினார்.

1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தால் இப்பகுதி மீண்டும் பாதிக்கப்பட்டதால் குடும்பத்தினர் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே கோயிலையும் பங்களாவையும் அதனுடன் சேர்ந்த காணியையும் குடும்பச் சொத்தாக வைத்துக் கொண்டு ஏனைய தோட்டத்தை விற்க வேண்டி வந்தது. இவற்றைப் பராமரிப்பது மற்றும் கோயில் காரியங்களைக் கொண்டு நடத்துவது போன்ற பொறுப்புக்கள் உறவினரான நவசோதியிடம் ஒப்படைக்கப்பட்டன.

2002 ஆம் ஆண்டு அமரர் ஏ.வி. கிருஷ்ணபிள்ளையின் மூன்றாம் தலைமுறையினரைச் சேர்ந்த, கொழும்பில் வசிக்கும் பேரப்பிள்ளைகள் பிரணவன் சிவகணநாதன் மற்றும் அருள் சிவகணநாதன் ஆகியோர் கோயிலைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் புனரமைப்புப் பணிகளைத் தொடங்கி 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் கும்பஅபிசேகம் செய்வித்தனர்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு 2015 ஆம் ஆண்டு மீண்டும் கோயில் புதுப்பிக்கப்பட்டு புதிதாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்று உலகம் முழுவதிலும் இருந்து பக்தர்கள் இந்தக் கோயிலின் பெருமை தெரிந்து அருள் பெறுவதற்காக வருகை தந்த வண்ணம் இருக்கின்றார்கள். கவியோகி சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகளார், பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள், யோகிராமையை சுவாமிகள், கோலாலம்பூர் சத்தியானந்த சுவாமிகள், நல்லூர் சுவாமிநாத தம்பிரான், மகாதேவா ஆச்சிரமம் ஸ்ரீ வடிவேல் சுவாமிகள், தபோவனம் சச்சிதானந்த சுவாமிகள், ஆத்மஜோதி முத்தையா , அருமைநாயகம், தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற ஆன்மீக பெரியோர் பலர் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சொற்பொழிவு ஆற்றிச் சென்றிருக்கிறார்கள். சமீபத்தில் பெரிய சரவணபவ சுவாமிகள் இங்கிலாந்தில் இருந்து வந்து கோயிலைத் தரிசனம் செய்தார்.

கோயிலின் தினசரி நான்குகால பூசைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. திங்கள் வெள்ளி இரண்டு நாட்களும் விசேட அபிஷேகம், பூசையோடு அன்னதானமும் வழங்கப்படுகின்றது. திருவிழாக் காலங்களிலும் அன்னதானம் வழங்கப்படுகின்றது. தீபாவளி, தைப் பொங்கல், தைபூசம், சிவராத்திரி, நவராத்திரி, திருவெண்பா, தமிழ் புத்தாண்டு, வைகாசி விசாகம், வெசாக் போன்ற தினங்களில் பூசைகள் பெரிய அளவில் நடைபெறுகின்றன. கோயில் ஸ்தாபகர் அமரர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் வாக்குறுதி அளித்தபடி, கோயில் தற்போது மூன்றாவது தலைமுறைக் குடும்பத்தால் நடத்தப்படுகின்றது.

**குரு அரவிந்தன்**

# அதிபர் சேவையிலிருந்து ஓய்வு

வட மத்திய மாகாண அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள அநு/நேகம முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எச்.ராஜி ஜனுல் ஹக், 35 வருட கல்விச் சேவையிலிருந்து (2024.07.05) ஓய்வு பெற்றுள்ளார். இவர்,இதே பாடசாலையில் 1989 முதலாவது ஆசிரியர் நியமனத்தை பெற்றார்.இதன் பின்னர் பல பாடசாலைகளில் பணியாற்றிய இவர்,2015.05.01 முதல் 2024.07.08 வரை, அநு/ நேகம் முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினார். அகில இலங்கை சமாதான நீதவானாகவும், கல்நேவ பொலிஸ் ஆலோசனை சபை உறுப்பினராகவும், கல்நேவ மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், சமூக சேவை டிப்ளோமாதாரியாகவும் விளங்கிய இவர், பல்வகை ஆளுமை கொண்டவர். 35 வருட கல்விச் சேவையில் மாணவர்களின் கல்விக்கு அயராது உழைத்த பெருமை இவரைச்சாரும்.

# பண்ணிசை சான்றிதழ் கற்கைநெறி விண்ணப்பம் கோரல்

**கோப்பாய் குறூப் நிருபர்**

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துக் கற்கைகள் நிறுவகத்தின், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையத்தின் ஊடாக முன்னெடுக்கும் பண்ணிசை சான்றிதழ் கற்கை நெறியின் இணைய வழிக் கற்கைநெறி மூன்றாம் அணிப்பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது வாட்ஸப் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பிராந்திய அலுவலகம், 'குருகுலம்' ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு 0776776249 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்புகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# 1,700 ரூபா சம்பளம் வழங்குவதற்கு 09 பெருந் தோட்டங்கள் இணக்கம்

## அமைச்சர் மனுஷ தலைமையில் விசேட பேச்சுவார்த்தை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க ஒன்பது நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தாம், முகநூலில் அரசியல் செய்யும் வாய்ச்சொல் வீரரல்ல என குறிப்பிட்ட அவர்,செயல் வீரனாகவே செயற்படுவதாகவும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இன்று (நேற்று) மதியம் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் சந்திப்பொன்று நடைபெற்றது.



செவ்வாய்கிழமை நான் சபையில் உரையாற்றும் போது ஆர்ப்பாட்டங்களின் பின்னார் 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க ஏழு நிறுவனங்கள் இணங்கியுள்ளதாக தெரிவித்தேன்.

இன்று (நேற்று) ஒன்பது நிறுவனங்கள் 1700 ரூபா சம்பளத்தை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. இதை மகிழ்ச்சியுடன் இச்சபையில் தெரிவித்துக் கொள்கிறேன். இதே போன்று கூடிய விரைவில் ஒரு சிறந்த தீர்வு வரும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

நான் சபையில் இல்லாத வேளையில் என் மீது சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சபையில் ''1700 ரூபாவுக்கு நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்த பின்னர், நான் பொகவந்தலாவை பெருந்தோட்ட நிறுவனத்தில் உள்ள துரைமார்கள் அனைவரையும் என் வீட்டுக்கு அழைத்து பேசியதாக குற்றம் சாட்டியிருந்தார். இது முழுமையான பொய் .பொகவந்தலாவை பெருந்தோட்ட நிறுவனத்தில் இருக்கும் துரைமார்களையும் கூப்பிடடேன். ஹற்றன், தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தில் இருக்கும் துரைமார்களையும் நான் கூப்பிடடேன்.

நாம்தான், மக்களுடன் வேலை செய்து கொண்டிருக்கின்றோம். சில முகாமையாளர்கள், மக்களை எப்படி துன்புறுத்துகின்றார்கள் என்பதை சொல்லியிருந்தேன்.

# இலங்கையின் பொருளாதார மீட்சி ; நியூசிலாந்து சபாநாயகர் பாராட்டு



இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சியை நியூசிலாந்து சபாநாயகர் கெர்ரி போன்லீ (Gerry Brownlee) பாராட்டியதுடன், இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும் உறுதி செய்தார்.

நியூசிலாந்து பாராளுமன்றத்தின் சபாநாயகர் (Gerry Brownlee) கெர்ரி போன்லீ (10) அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்துப் பேசினார் இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1958 ஆம் ஆண்டு நியூசிலாந்து பிரதமர் வால்டர் நாஷ் மற்றும் அப்போதைய விவசாயம் மற்றும் உணவு அமைச்சர் பிலிப் குணவர்தன ஆகியோர்,

08

# உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டு அக்.17க்கு முன்னர் ஜனாதிபதி தெரிவாவார்

## அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு அக்டோபர் 17 க்கு முன்னர் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.

அதில் எவரும் எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லையென, அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அனைத்து தகைமைகள் கொண்ட பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் புதிய ஜனாதிபதி அரசியலமைப்புக்கு ஏற்ப ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் உரிய தினத்தில் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாகக் கூறியுள்ளார். முதலாவதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அதற்காக வரவு செலவு திட்டத்தில் 1,000 கோடி (10 பில்லியன்) ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதனால் தேர்தல் ஆணையாளருக்கு உரிய திகதியில் தேர்தல் நடத்த முடியும். இதனை நான் அமைச்சரவை பேச்சாளரென்ற வகையில் மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே தெரிவித்து வருகின்றேன்.

08

# தம்புள்ளையில் ஐ.தே.கவின் அலுவலகம் மீது தாக்குதல்

தம்புள்ளையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் அலுவலகமும், அங்கிருந்த அனைத்து பதாதைகளும் பாரியளவில் சேதமடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் தம்புள்ளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், அவர்கள் சம்பவம் தொடர்பில் தீவிரமாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுதந்திர கட்சி தலைமையிலான புதிய கூட்டணி; மூன்றாவது மக்கள் பேரணி பதுளையில்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணியின் பதுளை மக்கள் பேரணி (14 ) வில்ஸ் பார்க் மைதானத்தில்நடைபெறுகிறது.இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன.இம்மாநாடு பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

“நாட்டுக்கு வெற்றி எதிர்காலத்துக்காக ஒன்றிணைவோம்” என்ற தொனிப்பொருளில் நடத்தப்படும் மூன்றாவது பேரணியாக இது உள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோரின் ஏற்பாட்டில் பதுளை மக்கள் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய கூட்டணியின் கட்சி ஆரம்பத்துடன், கம்பஹா, கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பேரணிகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

# குழந்தைகள் மத்தியில் ‘இன்ஃப்ளுயன்ஸா’ நோய்

நாட்டில் தற்போதைய நிலையில் குழந்தைகள் மத்தியில் இன்ஃப்ளுயன்ஸா நோய் அறிகுறிகள் தென்படுவது அதிகரித்துள்ளதாக, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளை பெற வேண்டுமென, வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழ்.போதனா வைத்தியசாலை குறித்து பொறுப்புணர்வோடு நடப்பது அவசியம்

யாழ்.போதனா வைத்தியசாலை தொடர்பில் ஊடகங்கள் மற்றும் எல்லோரும் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டுமென, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி கேட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையையில் தினமும் விடுதிகளிலும், வெளி நோயாளர் பிரிவுகளிலும், மற்றும் பல்வேறு கிளினிக் பகுதிகளிலும் 5,000 பேர் சிகிச்சை பெறக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலை இயக்குவது மிகவும் சிரமமான விடயம். இவ்வைத்தியசாலை பொதுமக்களின் நம்பிக்கைக்கும் அவர்களுடைய சுகாதாரம் சம்பந்தமான சிக்கலான விடயங்களுக்கும் பதிலளிக்கின்ற ஒரு நிறுவனம்.

இங்கே 2,500க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கடமையிலே உள்ளனர். இவ்வாறு சுறுசுறுப்பாகவும் அர்ப்பணிப்போடும் கடமையாற்றும் இந்நிறுவனம் பற்றிய உங்கள் கருத்துக்களை பொறுப்போடு எடுத்துரைப்பது மிகவும் முக்கியம்.

தனிப்பட்ட நபர்களின் கருத்தை இந்நிறுவனத்தின் மீது பாரிய குற்றச்சாட்டாக முன்வைத்து இதன் சேவையை மழுங்கடித்தால், சேவையை சிறப்பாக பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொள்வார்கள். ஆயிரக்கணக்கான ஊழியர்கள் சோர்வடைந்தால் அவர்களால் சிறப்பாக கடமையாற்ற முடியாத நிலை ஏற்படும்.

வேலைப்பளு காரணமாக சமூக ஊடகங்களில் வருகின்ற எல்லா விடயங்களையும் பார்வையிட்டு இவற்றுக்கெல்லாம் பதிலளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

# நெருக்கடியை சமாளித்த தலைவரை மீண்டும் ஜனாதிபதியாக்குங்கள்

## கெஸ்பேவ ஐ.தே.க பிராந்திய அமைப்பாளர்

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை உரிய முறையில் நிர்வகித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக நியமிக்க வேண்டுமென, கெஸ்பேவ ஐக்கிய தேசியக் கட்சியின் பிராந்திய அமைப்பாளர், வர்த்தகர் ரணில் வில்லத்தரகே தெரிவித்துள்ளார்.

கெஸ்பேவ, தும்போவில ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அலுவலகத்தை (09) திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு



தெரிவித்தார்.இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ரணில் வில்லத்தரகே,

“எனது அரசியல் பயணத்தில் புதிய அத்தியாயம் தொடங்கும் நாள் இதுவாகும். சுமார் 15 வருடங்களாக ஒரு தொழில்முனைவோராக பணியாற்றி, கிடைத்த அனுபவத்துடன் இன்று எனது அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு இந்த வாய்ப்பை வழங்கினார்.

08

# மலேசிய இந்திய காங்கிரஸுக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் பாராட்டு



வெளிநாட்டு வாழ் இந்திய தமிழர்களின் வாழ்வியலை மேம்படுத்துவதில் மலேசிய இந்திய காங்கிரஸ் கடுமையாக உழைத்துள்ளதாக, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பாராட்டு தெரிவித்தார்.

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு மலேசியா சென்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் உட்பட அந்நாட்டின் முக்கிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தினார்.

08

# தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை எப்போதும் தயாராகவே உள்ளோம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை, எப்போதும் தயாராகவே உள்ளோம். அதற்கிணங்க ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பான, சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர் ,

இலங்கையானது எத்தகைய குறைபாடுகள் உள்ள போதும் 1931ஆம் ஆண்டிலிருந்து சர்வஜன வாக்குரிமையை தொடர்ச்சியாக பயன்படுத்தி வரும் நடாகும்.

உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன .

ஒரு தடவை மட்டுமே உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படவில்லை. 1981ஆம் ஆண்டிலேயே தேர்தல் நடத்தப்படாது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

08

# கொக்குத்தொடுவாய் அகழ்வில் புலிகளின் தகட்டிலக்கம் மீட்பு

**(ஓமந்தை விஷேட நிருபர்)**

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் ஏழாவது நாளான நேற்று, மூன்று மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கபட்டதுடன் இலக்க தகடொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இரண்டு கட்டங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட அகழ்வு நடந்தது.இப்பணியின் போது ஏழு மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதிலிருந்து மூன்று உடலங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின், ஏழாம் நாள் அகழ்வாய்வு செயற்பாடுகள் நேற்று (11) தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன .

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் இந்த ஏழாம் நாள் அகழ்வாய்வுகள் இடம் பெற்றிருந்தன.

08

# பிலிப்பைன்ஸில் 7.1 ரிக்டர் சக்திவாய்ந்த நில நடுக்கம்

## சுனாமி எச்சரிக்கையும் விடுப்பு

பிலிப்பைன்ஸில் 7.1 ரிக்டர் அளவில் பதிவாகிய சக்திவாய்ந்த நிலநடுக்கத்தையடுத்து, அந்நாட்டில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸின் நேரப்படி காலை 10.13 மணியளவில் 7.1 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவாகியுள்ளது

பிலிப்பைன்ஸின் Soccssargen என்ற இடத்திலிருந்து 106 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள Celebes ஆழ்கடலில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், நிலநடுக்கம் 620 கிமீ ஆழத்தில் உணரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் அல்லது பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளப் வசந்தவின் சடலத்தை அஞ்சலிக்காக வைக்க வேண்டாமென அச்சுறுத்தல்

## மலர்ச்சாலைக்கு மிரட்டல் தொலைபேசி அழைப்பு

அத்துருகிரிய துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களால் கொல்லப்பட்ட வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேராவின் சடலத்தை பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்க வேண்டாமென பொரளையில் உள்ள பிரபல மலர்சாலைக்கு (10) மிரட்டல் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அங்குள்ள ஊழியர்களுக்கு இரவு 11.50 மணிக்கு வந்த அழைப்பில் ஊழியர்களுக்கு , உடலை வைத்திருந்தால் பின்விளைவுகள் ஏற்படுமென மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொரளை பொலிஸாரிடம் ஊழியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

மலர்சாலையில் பொருத்தப்பட்ட தொலைபேசியில் வெளியிலிருந்து வந்த தொலைபேசி எண் பதிவாகவில்லை என்றும், அதுகுறித்து உண்மைகளை ஆராய நீதிமன்றத்தில் தெரிவித்து,

08

# தினகரன்

THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 05


### குறள் தரும் சிந்தனை



கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி

ஒருவர்க்கு வாழ்வும், தாழ்வும் உலக இயற்கை; அந்த இரு நிலைமையிலும் நடுவுநிலையாக இருந்து உறுதி காட்டுவதே பெரியோர்க்கு அழகாகும்.

## அரச ஊழியர் சம்பளத்துக்கு வரி வருமானத்தின் பெரும்பகுதி

சம்பள உயர்வு கோரிக்கையை சில அரச தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு கடந்த இரண்டு தினங்களாக சுகவீன தொழிற்சங்க நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தொழிற்சங்க நடவடிக்கையின் விளைவாக வழமையான அரச சேவைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. சேவைகள் பெற்றுக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் முகம் கொடுத்திருந்தனர்.

ஆனால் இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா படி அரசாங்கம் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அந்த சம்பள உயர்வு வழங்குதல் நடைமுறைக்கு வந்துள்ள சில மாதங்களில் மற்றொரு சம்பள உயர்வைக் கோரியே இவர்கள் இத்தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இது நியாயப்படுத்தக்கூடிய தொழிற்சங்க நடவடிக்கை அல்ல என்பது தான் மக்களின் கருத்தாகும்.

ஏனெனில் ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படக்கூடிய நடைமுறை வேறு நாடுகளில் இருக்குமென நம்ப முடியாது.

இலங்கை என்பது கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கும் நாடாகும். ஆனாலும் பொருளாதார வீழ்ச்சியின் தாக்கங்கள் மற்றும் அழுத்தங்களின் செல்வாக்கு இன்னும் காணப்படவே செய்கிறது. அப்படி இருந்தும் இவ்வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பத்தாயிரம் ரூபாப்படி சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அரச ஊழியர்களின் நலன்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதன் வெளிப்பாடாகும்.

ஆனால் பொருளாதார வீழ்ச்சிக்குள்ளாகி மீட்சி பெற்ற வேறு எந்தவொரு நாடும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்குமென எதிர்பார்க்க முடியாது. அப்படியிருந்தும் அரச ஊழியர்களுக்கு இந்த சம்பள உயர்வை அரசு பெற்றுக்கொடுத்திருக்கிறது.

அரசு தங்கள் நலன்கள் மீது கொண்டுள்ள அக்கரை குறித்து பொருட்படுத்தாத தொழிற்சங்கங்கள் தான் இத்தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

அதேநேரம் தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் நாட்டுக்கோ, மக்களுக்கோ நன்மைகள் கிடைக்கப் பெறப் போவதில்லை. அந்நடவடிக்கைகள் பிழையானதும், தவறானதுமான செய்தி வழங்கக்கூடியதாக அமையலாம். குறிப்பாக அந்நிய முதலீடுகள் வருவதையும் கூட தொழிற்சங்க நடவடிக்கைகள் அடிக்கடி இடம்பெறுவது தவிர்க்க வழிவகுக்கும்.

இந்நிலையில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, இத்தொழிற்சங்க நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை மீண்டும் அதிகரிப்பதாயின் 300 பில்லியன் ரூபாவை மேலதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றுள்ளார். அது முற்றிலும் உண்மையதாகும். அவ்வாறு பாரிய தொகை நிதியை ஒதுக்கீடு செய்யக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதாரம் இல்லை.

இலங்கை வருடமொன்றுக்கு பெற்றுக்கொள்ளும் வருமானம் எவ்வளவு என்பதை மக்கள் அறிய மாட்டார்கள். ஆனால் 'அரசாங்கம் அறவிடும் வரியின் மூலம் பெறப்படும் மொத்த வருமானத்தில் 50 சதவீதம் முதல் 86 சதவீதம் வரை அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஒய்வூதியக் கொடுப்பனவுக்காக செலவிடப்படுகிறது' என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டின் வரி வருமானத்தில் பெரும்பகுதி அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும் ஒய்வூதியக் கொடுப்பனவுக்குமாகச் செலவிடப்படுகிறது. ஆனால் வேறுநாடுகள் வரி வருமானத்தில் தான் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

2019 இல் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 1,891 பில்லியன் ரூபாவாகும். இது 2020 இல் 1,450 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்தது. இது மொத்த தேசிய உற்பத்தியில் 10 சதவீத வீழ்ச்சியாகும். 2019 இல் மேற்கொள்ளப்பட்ட வரிகள் நீக்கமும் 2020 இல் நாடு முகம் கொடுத்த கொவிட் 19 பெருந்தொற்றும் இதற்கு காரணமாக அமைந்திருந்தன. ஆனாலும் 2022 இல் வரி மூலம் 1,751 பில்லியன் ரூபா வருமானமாகக் கிடைக்கப்பெற்றது. அதில் 72 சதவீதத்தை அதாவது 1,265 பில்லியன் ரூபா அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வுக்காக செலவிடப்பட்டது. மேலும் கடந்த ஆண்டு அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் செலவுகளுக்காக 04 டிரில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆனால் வரி மற்றும் வரி அல்லாத வருவாய்கள் மூலம் மூன்று டிரில்லியன் ரூபா வருமானம் தான் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு நிதி நிலை காணப்பட்டும் கூட அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு பெற்றுக்கொடுத்தது.

அப்படியிருந்தும் அரச ஊழியர்கள் மீண்டும் சம்பள உயர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக்கூடிய விடயமல்ல. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை கருத்தில் கொண்டு செயற்படுவது அரச ஊழியர்களின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# பக்தர்கள் பெருமளவில் வந்து அருளாசி பெறும் தொலஸ்பாகை தாமரவல்லி ஸ்ரீமுருகன் ஆலயம்

கண்டியில் இருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில், கடல் மட்டத்தில் இருந்து 3.500 அடி உயரத்தில் தாமரவல்லி தேயிலைத் தோட்டம் அமைந்துள்ளது. தாமரவல்லி தேயிலைத் தோட்டத்தின் மையப்பகுதியில் அமைந்திருப்பதுதான் தொலஸ்பாகை தாமரவல்லி ஸ்ரீமுருகன் ஆலயம். இங்கே வள்ளி, தெய்வானை சமேதரராய் எழுந்தருளி அருள் பாலிப்பவர் புஷ்பஸ்கந்தன் என்றழைக்கப்படும் ஸ்ரீ முருகன். விநாயகரும், அம்மனும் இங்கு எழுந்தருளியிருக்கின்றார்கள்.



1948 ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றதைத் தொடர்ந்து பிரித்தானியருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களை அவர்கள் விற்கத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஏ.வி. கிருஷ்ணபிள்ளை மலேசியாவில் இருந்து திரும்பிவந்து தேயிலைத் தோட்டத் தொழிலில் முதலீடு செய்ய முடிவு செய்தார். அதன் பலனாக ஆங்கிலேய நிறுவனமான சிம்ஸன் நிறுவனத்திடம் இருந்து 1000 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தையும், அதனுடன் இணைந்த தொழிற்சாலையையும் 1954 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 1 ஆம் திகதி கொள்வனவு செய்து வெற்றிகரமாக நடத்தி வந்தார். தாமரவல்லி தோட்டத்தின் மையப் பகுதியில் தங்களுக்கு மட்டுமல்ல, அப்பகுதியில் வாழும் இந்து மக்கள் பிரார்த்தனை செய்வதற்காகவும் ஒரு சைவக் கோயிலைக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தார். அதன் பலனாக தொலஸ்பாகை ஸ்ரீமுருகன் கோயிலின் கட்டுமானம் 1959 ஆம் ஆண்டு தொடங்கியது. 1960 ஆம் ஆண்டு கோயில் கட்டுமான வேலைகள் முடிவடைந்ததால் இந்தியாவில் இருந்து விக்கிரகங்கள் கொண்டு வரப்பட்டு இங்கே பிரதிட்சை செய்யப்பட்டு பத்து நாட்கள் கும்ப அபிசேகம் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து, நித்திய பூசையும், ஒவ்வொரு வருடமும் 10 நாட்கள் திருவிழாக்களும் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.


ஊரெழு ஸ்ரீ வீரகத்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுருக்கள் சிவஸ்ரீ சோமசுந்த குருக்கள் தலைமையில், யாழ்ப்பாணத்தில் இருந்து வரவழைக்கப்படும். குறைந்தது இரண்டு கூட்ட மேளதாளங்களுடன் வருடாந்த திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு. முதலாவது மற்றும் பத்தாவது திருவிழாக்களில் 108 சங்காபிஷேகமும், ஒன்பதாவது திருவிழாவில் திருக்கல்யாணமும் ஊஞ்சலில் நடைபெறும். பத்தாவது திருவிழாவின் போது சுவாமி மயில்வாகனத்தில் வெளிவீதி வருவார். இக்கோயிலின் அதிசயம் என்னவென்றால், தைமாதம் உதிக்கும் சூரியன் மூலஸ்தானத்திற்கு சில நிமிடங்கள் ஒளி கொடுத்துப் பக்தர்களைப் பரவசப்படுதத்துவதுதான்.

**குரு அரவிந்தன்**

15ஆம் பக்கம் பார்க்க...











# உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு குழுவினர் இந்திய அதிதிகளுடன் சந்திப்பு

இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீட் நெறிப்படுத்தலில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய அதிதிகள் குழுவுடனான உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக் குழு சந்திப்பு சாய்ந்தமருதில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தியன் முஸ்லிம் லீக்கின் பிராந்தியப் பொதுச்செயலாளரும், தமிழ்நாடு சட்டசபை உறுப்பினருமான கே. ஏ. எம். முஹம்மத் அபூபக்கர், தமிழ்நாடு சிரேஷ்ட ஊடகவியலாளர் மணிச்சுடர் மற்றும் மக்கள் குரல் எம். கே. சாஹுல் ஹமீது, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் உதவிப் பொதுச்செயலாளர் எஸ். ஏ. முஹம்மத் மக்கி, தமிழ்நாடு திருநெல்வேலி 'அலி சன்ஸ்' நிறுவனத் தலைவர் எம். நெய்னார் முஹம்மத் கடாபி ஆகியோர் அடங்கிய குழுவை உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுக் குழுவினர் கல்முனையில் சந்தித்தனர்.



இச்சந்திப்பில் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு தொடர்பாகவும் உரையாடியிருந்தனர். இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையிலான கலை கலாசாரம் இலக்கியம் பற்றிப் பேசப்பட்டதுடன், மாநாட்டுக் குழுவினரை இந்தியாவிற்கு வருகை தருமாறும் அதிதிகளால் அழைப்பு விடுக்கப்பட்டது.



அதிதிகளின் அழைப்பை ஏற்று விரைவில் மாநாட்டுக் குழு இந்தியா செல்லவிருப்பதாக மாநாட்டுக் குழுத் தலைவர் கலாநிதி ஏ. எல் அன்சார் தெரிவித்தார்.

சாய்ந்தமருது இக்ரா கலையகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்திய அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவம் வழங்கப்பட்டது.

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

# சர்வதேச விண்வெளி நிலையத்துக்குள் சிக்கிக் கொண்ட இருவரின் கதி என்ன?

சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ் உட்பட இருவர் சிக்கியிருக்கும் நிலையில், தாங்கள் மீண்டும் பத்திரமாக பூமிக்கு திரும்புவோம் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

பூமியிலிருந்து ஏறத்தாழ 400 கி.மீ உயரத்தில் உள்ள சர்வதேச விண்வெளி மையத்திற்கு அடிக்கடி விண்வெளி வீரர்கள் சென்று ஆய்வு செய்வது வழக்கம். போயிங் நிறுவனம் இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அமெரிக்காவின் மற்றொரு விண்வெளி வீரரான புட்ச் வில்மோர் என இருவரையும் சர்வதேச விண்வெளி மையத்திற்கு அழைத்துச் சென்று, மீண்டும் பத்திரமாக பூமிக்குக் கொண்டு வரும் பணியை ஏற்றுக் கொண்டது.

இதற்காக 'ஸ்டார் லைனர்' எனும் விண்வெளி ஓடத்தையும் தயாரித்தது. இந்த விண்கலம் மூலம் கடந்த ஜூன் 5 ஆம் திகதி அமெரிக்காவின் கேப் கனாவெரல் ஏவுதளத்திலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சுனிதாவும், வில்மோரும் அனுப்பி வைக்கப்பட்டனர். இரண்டு நாட்கள் கழித்து, அதாவது ஜூன் 7 ஆம் திகதியன்று ஸ்டார் லைனர் சர்வதேச விண்வெளி மையத்தை அது அடைந்தது. ஆனால் இந்தப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னரே பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டிருந்தன. இரண்டு மூன்று முறை 'ஸ்டார் லைனரின்' பயணம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. இப்படி இருக்கையில் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து சுனிதா வில்லியம்ஸையும், புட்ச் வில்மோரையும் மீண்டும் பூமிக்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

7 ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்ற சுனிதா மற்றும் வில்மோர் ஜூன் 14 ஆம் திகதி மீண்டும் பூமிக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஆனால், ஸ்டார் லைனரில் ஏற்பட்ட ஹீலியம் வாயு கசிவு மற்றும் உந்துவிசை கருவியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு ஆகியவை இந்த பயணத்தை மேலும் ஒரு வாரத்திற்கு தள்ளி போட்டது.

இதன்படி ஜூன் 26 ஆம் திகதி இருவரும் பூமிக்குத் திரும்பியிருக்க வேண்டும்.



ஆனால், ஸ்டார் லைனரின் தொழில்நுட்பக் கோளாறுகள் இன்னும் சரி செய்யப்படாததால், இன்றுவரை இருவரும் பூமிக்குத் திரும்பாமல் சர்வதேச விண்வெளி மையத்திலேயே சிக்கித் தவிக்கின்றனர். இது நாசா விஞ்ஞானிகளிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து பூமிக்குத் திரும்ப 6 மணி நேரம் தேவைப்படும். இந்த 6 மணி நேர பயணத்தில் கோளாறுகள் இல்லாமல் இருக்க வேண்டும்.

இந்நிலையில் விண்வெளியில் தாங்கள் பத்திரமாக பூமிக்கு திரும்புவோம் என்று சுனிதாவும், வில்மோரும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். இம்மாதம் இறுதியில் ஸ்டார் லைனரில் ஏற்பட்டுள்ள கோளாறுகள் சரி செய்யப்படும் என்றும், அப்போது இருவரும் பூமிக்கு திரும்புவார்கள் எனவும் போயிங் தெரிவித்திருக்கிறது. அதேபோல ஒகஸ்ட் மாதத்தில் எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் ஸ்பேஸ் ஷிப் வேறு சில விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்திற்கு அழைத்து செல்ல இருக்கிறது. அதற்குள் சுனிதாவும், வில்மோரும் பூமிக்கு திரும்ப வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொல்கஹவெல அல் இர்பான் மத்திய கல்லூரிக்கு குவைத் நிதியுதவியில் மாடிக்கட்டடம் நிர்மாணம்

குவைத் அரசின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் பொல்கஹவெல அல் இர்பான் மத்திய கல்லூரிக்கு 2 மாடிகளைக் கொண்ட 8 வகுப்பறைகளுக்கான அடிக்கல் நடும் வைபவம் கல்லூரி அதிபர் அஸ்மி ஹவ்பர்சா தலைமையில் நடைபெற்றது.

இக்கட்டடத்திற்காக அடிக்கற்களை இஷாக் ரகுமான் எம்.பி, குவைத் தூதுவராலய அதிகாரி அஷ்ஷேக் எம். பிர்தௌஸ் (நளிமி), அல்ஹிமா இஸ்லாமிக் சேவிஸ் நிறுவன பணிப்பாளர் அஷ்ஆஷேக் நூருல்லாஹ் (நளிமி), அல்ஹிமா நிறுவனத்தின் உபதலைவர் அமினுடீன், குருநாகல் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் சாபி சிஹாப்தீன், பொல்காவலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய குவைத் தூதுவரின் அதிகாரி எம்.பிர்தௌஸ், குவைத் நாட்டின் உதவித் திட்டங்கள் கடந்த ஐந்து தசாப்தங்களாக இலங்கைக்கு தொடர்ந்து உதவி வருகின்றன.

இக்கல்லூரிக்கென கட்டடமொன்றை நிறுவித் தருமாறு குவைத் தூதுவரிடம் கோரிக்கை முன்வைத்த போது 2 மாடிகள் கொண்ட 8 வகுப்பறைகளை பெற்றுக் கொடுத்தார். அதற்காக குவைத் தூதுவருக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்" என்றார்.

**(அஷ்ரப் ஏ சமத்)**







# புலமைக் கதிர்



தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான




திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

01. கீழுள்ள தாயக்கட்டைகளில் தவறாகப் புள்ளியிடப்பட்ட தாயக்கட்டை எது?




i. ii. iii.

02. ஒரு காணியில் கமுகு, தென்னை, அகத்தி என அதே ஒழுங்கில் மரங்கள் நடப்பட்டன. இதில் 21 ஆவதாக நின்ற கன்று ஒன்றும் 28 ஆவதாக நின்ற கன்று ஒன்றும் காய்ந்து விட்டன. எனவே காய்ந்த கன்றுகள் முறையே,
i. அகத்தி, கமுகு ii. கமுகு, தென்னை iii. கமுகு, அகத்தி


- **கீழே தரப்படும் கூற்றுக்குப் பொருத்தமான எடுகோளை விடைகளில் இருந்து தெரிவுசெய்க.**

03. மழைக்காலத்தில் வானவில் தோன்றும்,
i. பெரும்பாலும் நிகழும் ii. எப்போதும் நிகழும்
iii. சில வேளையில் நிகழலாம்

04. இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினர் வருகை தரவில்லை.
i. இன்று அவருக்கு சுகவீனமாக இருக்கலாம்.
ii. இன்று அவருடைய வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருக்கலாம்.
iii. அது பற்றி சரியாகக் கூற முடியாது.

05. 
உருவை நன்கு விபரிக்கும் விடை,
i. துளைக்கருவி, விழாக்கள், பாடல்
ii. காற்றுக் கருவி, பாடல், மரண வீடு
iii. தோற்கருவி, விழாக்கள், பாடல்

- **சாருவும், தாருவும் முத்தையாவின் பேரப்பிள்ளைகள் முத்தைய்யா குடும்பத்தின் குடும்ப உறவு முறை பின்வரும் கோட்டுப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.**




06. முத்தைய்யாவின் பிள்ளைகளாக இருக்கக் கூடியவர்களை மட்டும் கொண்ட விடை?
i. C, E, G ii. D, E, F iii. C, F, G, B

07. தாருவின் பாட்டியாக இருப்பவர் யார்?
i. D ii. B iii. G

08. ஒரு மைதானத்தில் அறுகோண வடிவில் தூண்கள் நடப்பட்டு அத்தூண்களுக்கிடையில் இடைவெளியில் சாடிகள் அடுக்கப்பட்டன. இரண்டு தூண்களுக்கிடையில் 5 சாடிகள் வைக்கப்படின், அங்கு மொத்தமாக வைக்கப்பட்ட சாடிகளின் எண்ணிக்கை யாது?
i. 24 ii. 30 iii. 36

09. சதுரவடிவக் காணி ஒன்றிற்கு ஒரு பக்கத்திற்கு 6 தூண்கள் வீதம் 4 பக்கங்களுக்கும் தூண்கள் நிறுத்தத் திட்டமிடப்பட்டது. ஒரு தூணுக்கான செலவு 900/= எனில் மொத்தச் செலவு யாது?
i. 5400/= ii. 21600/= iii. 18000/=


10. ஐங்கோண வடிவத் தாளின் ஓரங்களில் அதன் மூலைகள் உள்ளடங்கலாக மொத்தம் 45 புள்ளிகள் இடப்பட்டதெனில் ஒரு பக்கம் இடப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கை யாது?
i. 9 ii. 8 iii. 10

11. ஒரு மீன் தொட்டியினுள் இருந்த மீன்களின் எண்ணிக்கையின் ¼ பங்கு மீன்கள் இறந்து போயின. மீதியாக இருந்த மீன்களில் ½ பங்கு மீன்கள் விற்கப்பட்டன. தற்போது தொட்டியினுள் 75 மீன்கள் இருந்ததெனில் முதலில் மீன்தொட்டியில் இருந்த மீன்களின் எண்ணிக்கை யாது?
i. 150 ii. 200 iii. 600


12. ஒரு புகையிரத நிலையத்தை தினமும் 5 புகையிரதங்கள் கடந்து செல்லும். கடந்து செல்லும் ஒவ்வொரு புகையிரதமும் ஒவ்வொரு தபால் பொதியை நிலையத்தில் இறக்கிக் கொண்டால் ஒரு நாளில் அப்புகையிரத நிலையத்தில் எத்தனை தபாற்பொதிகள் சேரும்?
i. 20 பொதிகள் ii. 5 பொதிகள் iii. 4 பொதிகள்

13. ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்ட 15 பேர் தமக்குள் நண்பர்களாகினர். அவர்கள் கருத்தரங்கு முடிந்து சென்றதும் தமக்குள் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர். எனவே அவர்களில் ஒருவர் பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை யாது?
i. 14 ii. 15 iii. 225

14. சிறுவர் தினத்தை முன்னிட்டு குறித்த எண்ணிக்கையான சிறுவர்கள் தமக்குள் மிட்டாய்களைப் பரிமாறிக் கொண்டனர். ஒரு சிறுவன் பெற்ற மிட்டாய்களின் எண்ணிக்கை 14 எனில் மிட்டாய்களைப் பரிமாறிய சிறுவர்களின் எண்ணிக்கை யாது?
i. 15 ii. 14 iii. 196

15. 
அருகிலுள்ள உருவினுள் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 7
ii. 8
iii. 10

16. ஒரு விழா அலங்காரத்திற்காக கொடிகள் நடப்பட்டிருந்தன. சிவப்புக் கொடிக்கு முன்னால் 17 கொடிகளும் நீலக் கொடிக்குப் பின்னால் 12 கொடிகளும் இரண்டுக்கும் இடையில் 7 கொடிகளும் நடப்பட்டனவெனில் அங்கு மொத்தமாக நடப்பட்ட கொடிகளின் எண்ணிக்கை யாது?
i. 37 ii. 36 iii. 38

17. 
உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிற மை பூசப்பட்டுள்ள ஒரு திண்ம மரக்குற்றி தரப்பட்டுள்ளது. அதனைக் கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. எனின் ஒரு பக்கத்தில் மட்டும் நிற மை பூசப்பட்டுள்ள எத்தனை சிறிய மரக்குற்றிகள் கிடைக்கும்?
i. 12 ii. 8 iii. 6

18. கமல் தினமும் தனது தந்தையிடம் ரூபாய் 50.00 வாங்கி ரூபாய் 30.00 ஐ செலவழிப்பான். ஐந்தாம் நாள் முடிவில் அவனிடம் எவ்வளவு பணம் இருக்கும்?
i. ரூபாய் 120.00 ii. ரூபாய் 80.00 iii. ரூபாய் 100.00

19. நானும், நீயும், மேரி, சாந்தனும் என்னுடைய பெற்றோரும் கடற்கரைக்குச் சென்றிருந்தோம். அங்கு சென்றோரின் மொத்த எண்ணிக்கை,
i. 7 ii. 6 iii. 5

20. எனக்கு 9 வயதாக இருக்கும் போது அக்காவின் வயது 33 ஆகும். எனின் இன்னும் எத்தனை ஆண்டுகளில் எனது வயதின் 3 மடங்காக இருக்கும் அக்காவின் வயது?
i. 2 ii. 3 iii. 4

21. $1l$ பாலை மாணவர்கள் சமனாகப் பகிர்ந்து அருந்தினர். எனின், ஒரு மாணவன் அருந்திய பாலின் அளவு யாது?
i. $250ml$ ii. $200ml$ iii. $300ml$

22. உயரமான ஆண்கள் சிலர் நன்றாக விளையாடுவார்கள்.
தேவன் உயரமான மாணவன் அல்ல.
i. தேவனின் விளையாட்டுத் திறமை பற்றி எதுவும் கூறமுடியாது.
ii. தேவன் நன்றாக விளையாட மாட்டான்.
iii. தேவன் நன்றாக விளையாடுவான்.

23.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 91 | 84 | 39 | 64 | 15 | 12 |


இங்குள்ள மிகப்பெரிய இரட்டை எண்ணில் இருந்து மிகச் சிறிய ஒற்றை எண்ணை கழிக்க வரும் விடை,
i. 79 ii. 64 iii. 69

- **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**


**சோற்றை வழங்கும் கரங்கள்**
**சேற்றில் உழும் கால்கள்**
**உழைப்பே எமது பணியாகும்**
**சோம்பல் மக்களின் பிணியாகும்.**

24. இப்பாடல் எத்தொழில் செய்வோர் பற்றி விபரிக்கப்படுகிறது
i. உழவுத் தொழில் ii. கடற்றொழில் iii. தச்சுத்தொழில்

25. இப்பாடலில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்
i. சோம்பல் கூடாத பழக்கமாகும். ii. உழைப்பு சிறந்த பணியாகும்.
iii. ஒற்றுமை சிறந்த பண்பாகும்


26. 
இவ்வுருவில் அரைப்பகுதியை நிழற்ற இன்னும் எத்தனை முக்கோணிகள் நிழற்றப்பட வேண்டும்?
i. 2
ii. 3
iii. 4

- நீரில் வாழ்வன, நிலத்தில் வாழ்வன, பிராணிகள், மீன் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைக் குறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.




27. மீனை வகைக் குறிக்கும் எழுத்து
i. Y ii. W iii. Z

28. Z இனால் வகைக்குறிக்கப்படும் பிராணி பின்வருவனவற்றில் எதுவாக இருக்கலாம்?
i. கணவாய் ii. மரஅணில் iii. தவளை

29. 
இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை
i. 23
ii. 21
iii.22

30. இரு வெற்றுக் கூடுகளுக்கும் பொருத்தமான கணிதச் செய்கைகள் முறையே,

**16 ☐ 8 = 8 ☐ 3**

i. X , − ii. + , X iii. + , ÷

(06ஆம் பக்கம் பார்க்க)

# வேகக் கட்டுப்பாடு விதிமுறைகள் இரண்டு வாரங்களுக்குள் வர்த்தமானி

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன



தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு, உண்மையான தொழிற்சங்க உரிமைகளுக்காக அன்றி, அரசியல் தேவைகளுக்காகவே முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

வீதி விபத்துக்களை குறைப்பதற்கு வேகக் கட்டுப்பாடு தொடர்பில், தேவையான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானியை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் லநந்த அழகியவன்ன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன,

“போக்குவரத்துத் துறையில் செயல்திறனை உருவாக்க பல திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். இதேவேளை, கடவத்தை பேரூந்து நிலையம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தப் பேருந்து நிலையங்களில் நவீன போக்குவரத்து முகாமைத்துவ முறைகளும், நவீன தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 2023 இல் 2214 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அந்த வீதி விபத்துகளில் 2321 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டும் கடந்த மாதம் (30) வரை 1103 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அந்த வீதி விபத்துக்களால் 1154 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, இந்நிலைமையைக் குறைக்க எமது அமைச்சு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டுக்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 50 மில்லியன் ரூபாவை இலங்கை பொலிஸாருக்கு வழங்க வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ளது. அத்துடன், போக்குவரத்து அமைச்சின் தலையீட்டுடன், வீதி வேகக் கட்டுப்பாடு தொடர்பில் தேவையான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்பட உள்ளது.

மேலும், பாடசாலை மட்டத்தில் வீதிப் பாதுகாப்பு கழகங்களை (Road Safety Club) நிறுவுவதற்கு தேவையான கையேடுகளை, ஆசிரியர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு இணைச்செயற்பாடாக பாடசாலைக் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அதற்கு இணையாக பதக்கம் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், புகையிரத பணிப்பகஷ்கரிப்பு தொடர்பான தீர்வுகளை வழங்குவதில் தற்போது ஈடுபட்டுள்ளோம். 05 வருடங்களுக்கு ஒருமுறை நிலைய அதிபர்களின் பதவி உயர்வுக்கு தேவையான அனுமதியை அரச சேவை ஆணைக்குழு ஏற்கனவே வழங்கியுள்ளது. அதற்கான அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான அமைச்சரவைப் பத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஆனால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்பகஷ்கரிப்பு வெறும் அரசியல் நோக்கத்திற்காகவே என்பது தற்போது மக்களுக்கு தெளிவாகியுள்ளது.

# ஹோமாகம – மத்தேகொட பொலிஸ் நிலையம் திறப்பு



புதிய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹோமாகம மத்தேகொட பொலிஸ் நிலையத்தின் திறப்பு விழாவில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உள்ளிட்ட அதிதிகள் மற்றும் பல விருந்தினர்கள் கலந்து கொண்டனர். .

பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கில், ஹோமாகம, மத்தேகொட புதிய பொலிஸ் நிலையம், அதிக வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.


நாரஹேன்பிட்டிய அபயாராமாதிபதி, மேல்மாகாண பிரதம சங்கநாயக்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே, பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன், மேல் மாகாணத்துக்கு பொறுப்பான

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மகிந்த குணரத்ன உள்ளிட்ட இலங்கை பொலிஸின் சிரேஷ்ட அதிகாரிகள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


05 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்


26. 
இவ்வுருவில் அரைப்பகுதியை நிழற்ற இன்னும் எத்தனை முக்கோணிகள் நிழற்றப்பட வேண்டும்?
i. 2
ii. 3
iii. 4

- நீரில் வாழ்வன, நிலத்தில் வாழ்வன, பிராணிகள், மீன் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைக் குறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.




27. மீனை வகைக் குறிக்கும் எழுத்து
i. Y ii. W iii. Z

28. Z இனால் வகைக்குறிக்கப்படும் பிராணி பின்வருவனவற்றில் எதுவாக இருக்கலாம்?
i. கணவாய் ii. மரஅணில் iii. தவளை

29. 
இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை
i. 23
ii. 21
iii.22

30. இரு வெற்றுக் கூடுகளுக்கும் பொருத்தமான கணிதச் செய்கைகள் முறையே,

16 ☐ 8 = 8 ☐ 3


i. X , – ii. + , X iii. + , ÷

31. ஒரு குறித்த நகரில் நூலகத்திற்கு கிழக்கே பாடசாலையும் பாடசாலைக்கு கிழக்கே வங்கியும் உண்டு எனின், பின்வருவனவற்றுள் சரியான கூற்று,
i. வங்கிக்கு மேற்கே நூலகம் உண்டு.
ii. நூலகத்திற்கு மேற்கே வங்கி உண்டு.
iii. பாடசாலைக்கு மேற்கே வங்கியும் கிழக்கே நூலகமும் உண்டு.

32. ஒரு சதுர வடிவக் காணியினைச் சுற்றி 40 தூண்கள் இருந்தன. எனின், ஒரு பக்கத்தில் இருந்து பார்க்கும் போது எத்தனை தூண்கள் தெரியும்,
i. 9 ii. 10 iii. 11


33. 100m நீளமான பாதை ஒன்றைத் துப்புரவு செய்வதற்காக முதல் நாள் 15m நீளமும் இரண்டாம் நாள் 16m நீளமும் மூன்றாம் நாள் 17m நீளமும் துப்புரவு செய்யப்பட்டது. இன்னும் துப்புரவு செய்யப்பட வேண்டிய பாதையின் நீளம்,
i. 48m ii. 52m iii. 50m

34. உரு நிரையில் உள்ள கோலத்திற்கு ஏற்ப வெற்றிடங்களில் இருக்க வேண்டிய உருச்சோடியைத் தெரிவு செய்க.





35. தேவி முதல் நாள் உண்டியலில் ரூபாய் 20ஐ இடுகிறாள். அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் முதல் நாள் இட்ட பணத்தின் இருமடங்கு பணத்தை இடுகிறாள். இவ்வாறாக உண்டியலில் சேரும் பணம் எத்தனையாம் நாளில் ரூபாய் 600 இலும் கூடுதலாக இருக்கும்?
i. 4 ii. 5 iii. 3

36. எண் கோலத்தில் இடைவெளிக்குப் பொருத்தமான எண்,




i. 3 ii. 4 iii. 5

37. ஒரு பென்சில் வாங்கும் பணத்திற்கு 2 பேனா வாங்கலாம். 3 பேனா வாங்கும் பணத்திற்கு 10 கொப்பி வாங்கலாம். எனின், அவற்றுள் சரியான கூற்று எது?
i. பேனாவின் விலையின் 2 மடங்கு பென்சிலின் விலையாகும்.
ii. பென்சிலின் விலையின் 6 மடங்கு கொப்பியின் விலையாகும்.
iii. கொப்பியின் விலையின் 3 மடங்கு பேனாவின் விலையாகும்.

38. 
இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை
i. 8
ii. 14
iii. 10

39. அரசனாயினும், உழவனாயினும் தன்னுடைய வீட்டில் அமைதியையும், ஆனந்தத்தையும் கண்டால் அவனே மகிழ்வான வாழ்க்கை வாழ்கிறான். இவ்வரிகள் மூலம் உணர்த்தப்படுவது,
i. அரசன், உழவனின் சிறப்பு ii. மகிழ்வான வாழ்வு
iii. அமைதி, ஆனந்த வாழ்வு

40. மூன்று நாட்களுக்கு ஒரு தடவை கணினி வகுப்புக்குச் செல்லும் மோகன் முதன் முதலில் கணினி வகுப்புக்குச் சென்றது திங்கட்கிழமை ஆகும். எனின் அவன் ஐந்தாவது தடவை கணினி வகுப்புக்குச் செல்லும் நாள்,
i. புதன்கிழமை ii. வெள்ளிக்கிழமை iii. சனிக்கிழமை

# கடந்த வார (05.07.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. காலை வேளை
02. மென்மையான பட்டுக்கம்பள விரிப்பில் நடப்பது போன்று
03. மூடப்பட்டிருந்த தரை
04. இறந்த காலத்துக்குரியது
05. சென்றன
06. ஆரம்பிப்பதற்கு
07. i. பழைய ii. சிறிய iii. முடிவு
08. i. பார் ii. நூல் iii. பள்ளிக்கூடம்

**II.**
09. புல்லாங்குழல்
10. நீலம்
11. அரிசி
12. அறிவுண்டாதல்
13. உதவி செய்தல்
14. மிக மகிழ்தல்
15. i. மாணவி ii. அரிசி iii. பாடகி iv. மனைவி
16. உழத்தி வயலுக்குச் சென்றாள்.
17. மாணவன் பாடம் படித்தான்.
18. மாமா வீட்டுக்கு வந்தார்.
19. i. I help to my mother cook ii. She lives in Colombo

**III.**
20. i. பேருந்து நிலையம் ii. இங்கே குடிக்கும் தண்ணீர் உண்டு
21. XVIII
22. 5 மணி 30 நிமிடம்
23. i. 36 ii. 4, 49
24. 118
25. 49, 56
26. i. மோட்டார் சைக்கிள் ii. லொறி iii. 8 iv. 10
27. 38kg 650g
28. 4kg 650g
29. i. கூம்பு ii. வட்டம் iii. 1 iv. 0 v. 4

**IV.**

| | | |
|---|---|---|
| 30. 3 | 39. 1 | 49. 3 |
| 31. 3 | 40. 2 | 50. 1 |
| 32. 1 | 41. 2 | 51. 3 |
| 33. 3 | 42. 3 | 52. 3 |
| 34. 2 | 43. 1 | 53. 2 |
| 35. 2 | 44. 3 | 54. 1 |
| 36. 3 | 45. 2 | 55. 1 |
| 37. 1 | 46. 2 | 56. 3 |
| 38. 2 | 47. 3 | 57. 2 |
| | 48. 1 | 58. 1 |




# அதிசொகுசு பஸ் விபத்து; லபுக்கலையில் 42பேர் காயம்

**(தலவாக்கலை, நானுஓயா, அக்குறணை நிருபர்கள்)**



நுவரெலியாவிலிருந்து திருகோணமலை நோக்கி நேற்று அதிகாலை சுற்றுலா சென்ற அதிசொகுசு பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (11) அதிகாலை நுவரெலியா கண்டி பிரதான வீதியில் லபுக்கலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் தெரியவருகையில், இந்த அதிசொகுசு தனியார் பஸ் பாதையை விட்டு விலகி அருகிலிருந்த பாதுகாப்பு இரும்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்து காரணமாக நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டது.

நுவரெலியா ஹோட்டலொன்றில் தொழில் புரியும் ஊழியர்கள் சுற்றுலா சென்ற வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது பஸ்ஸில் பயணம் செய்த சாரதி மற்றும் நடத்துனர் உட்பட 42 பேர் காயமடைந்துள்ளதாகவும் இவர்கள் அனைவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



**(நானுஓயா நிருபர்)**

நுவரெலியாவை பிறப்பிடமாகவும் நேஸ்பி இல்லம் மேல் தெப்பக்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராம் பாக்கியவதி தம்பதிகளின் மூத்த புதல்வன் வினோத் ஜி அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி என். டபிள்யூ,கே, எல் பிரபுத்திக்கா லங்கானி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் நுவரெலியா மாநகர சபை உறுப்பினரும் நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் செயலாளரும் , நேஸ்பி லேக்சைட் விளையாட்டு சங்கத்தின் தலைவரும் , இந்து கலாசார பேரவையின் கலாசார செயலாளருமாவார்.

## இலவச சத்துணவு வேலைத்திட்டம்

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

சங்கர்ராஜி நினைவு அறக்கட்டளை ஊடாக தலவாக்கலை பாமஸ்டன் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் மற்றும் சிறுவர் முன்பள்ளி நிலையத்துக்கான இலவச சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய அங்குள்ள பிள்ளைகளுக்கு ஒரு மாதம் முழுவதும் உட்கொள்வதற்கு தேவையான முட்டைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் சங்கர்ராஜி நினைவு அறக்கட்டளையின் மத்திய மாகாண இணைப்பாளர் ராஜ்குமார், நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் ஆமஸ்ரோங் மற்றும் சிறுவர்கள்,பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



பிட்டமாறுவ ரோபேரி பிரிவின் காமன் ஆலய வீதி ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரால் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

# கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் சித்திரப் போட்டி

**(நாவலப்பிட்டி தினகரன் நிருபர்,அக்குறணை குறூப் நிருபர்)**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கண்டி தமிழ் வர்த்தகர் சங்கம் ஏற்பாடு செய்த சிறுவர் சித்திரப் போட்டி நிகழ்வுகளின் பரிசளிப்பு வைபவம் கண்டி ஈ.எல். சேனாநாயக்கா சிறுவர் வாசிகசாலை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் ரமேஷ் பாபு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இவ்விழாவில் பரிசு மற்றும் சான்றிதழ்களை மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.



# ஜனாதிபதியின் ஊவா மாகாண அபிவிருத்தி விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியாக அநுர விதானகமகே நியமனம்

**(ஊவா சுழற்ச நிருபர்)**



ஊவா மாகாண அபிவிருத்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண அபிவிருத்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாணசபையில் நீண்டகாலம் அமைச்சராக கடமையாற்றிய அநுர விதானகமகே இராஜாங்க அமைச்சர் தேனுக விதானாவின் மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊவா மாகாண அபிவிருத்தி தொடர்பில் கவனிக்கும் பொறுப்பு இவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மாகாண ஆளுநர் காரியாலயத்தில் பதவியை பொறுப்பேற்று கொண்டார்.

இராஜாங்க அமைச்சர் தெனுகா விதானகம, மாகாண பிரதம செயலாளர் தமயந்தி பரணகம, ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சி.பிரியந்தி மற்றும் மாகாண சபை அதிகாரிகள், பதுளை பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த காண்டேவத்த. போன்றோர் கலந்து கொண்டனர்.

# சிறுமிக்கு மது பருக்கிய தாய்மாமன் கைது

**(மஸ்கெலிய தினகரன் நிருபர்)**

நான்கு வயதான சிறுமிக்கு மதுபானத்தை பருகிய குற்றச்சாட்டில் அவரது தாய் மாமனான 31 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓல்டன் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவிக்கையில்,

குழந்தையின் தாய் குடும்ப வறுமை காரணமாக 18 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடொன்றுக்கு பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

இவர்கள், உலப்பனை பகுதியைச் சேர்ந்தவர்கள். வெளிநாட்டுக்கு தாய் சென்றபோது, தன்னுடைய 9 வயதான மகனையும், 4 வயதான மகளையும், சாமிமலை,ஓல்டன் தோட்டத்திலுள்ள தனது தாயின் வீட்டில் ஒப்படைத்து சென்றுள்ளார். பிள்ளைகளை பார்ப்பதற்காக தாயின் வீட்டுக்கு அடிக்கடி வரும் மகன் (தாய் மாமன்) அந்த சிறுமிக்கு மதுவை பருகியுள்ளார். இதனை சிறுமியின் 9 வயதான அண்ணா கண்டுள்ளார். இதுதொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்தே அந்த நபர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது, சந்தேகநபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.







சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

**சம்பத் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்**

**31-12-2023 ஆம் திகதி வரை கைவிடப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமான சட்டபூர்வமான அறிக்கை**

- வங்கிச் சட்டத்தின் 72ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்ட இரண்டு வகையான கணக்குகள்/சொத்துக்களே கைவிடப்பட்ட சொத்துக்களாக கருதப்படும்.
  - பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக செயற்படுத்தப்படாமல் இருக்கும் கணக்கில் இடப்பட்ட பணம் மற்றும் வேறு வைப்புப் பணங்கள்.
  - தவணைக்காலம் பூர்த்தியாகிய பின்னர் வங்கியினால் அறிவித்தல் அனுப்பப்பட்டு 3 வருடங்களுக்குள் தொடர்பு கொள்ள தவறிய வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு பெட்டகங்களில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள்.
- வங்கிச் சட்டத்தின் பிரிவு 73(i) இன் கீழ் கைவிடப்பட்ட சொத்து என வகைப்படுத்தப்பட்டு, இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்குகள்/சொத்துக்கள் தொடர்பான கிளைகளின் அறிக்கையின் சாரம்சம் கீழே தரப்பட்டுள்ளது.
- அவ்வாறாயின் வாடிக்கையாளர்கள் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள கிளைகளில் தங்களது கணக்கு அல்லது பாதுகாப்பு பெட்டகம் கைவிடப்பட்ட சொத்துப் பிரிவுக்குள் அடங்குவதாக அனுமானித்தால், எங்களது பின்வரும் மாவட்டங்களிலுள்ள கிளைகளில் ஏதேனும் ஒன்றைத் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
- மேலும் 26.07.2024 ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வகையிலான கொடுக்கல் வாங்கல்களையாவது மேற் கொண்டு வங்கியில் உள்ள உங்களது கைவிடப்பட்ட சொத்துக்களை மீள செயற்படுத்துவதற்கான நிலையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
  - பணம் வைப்பிலிடல் அல்லது மீளப்பெறுதல்
  - உங்களது தேவைக்கு ஏற்ப கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை மாற்றிக் கொள்ளல்
  - உங்களது கணக்கை செயற்படுத்துவதற்காக வங்கிக்கு கடிதம் அனுப்புதல்
  - கணக்கின் கொடுக்கல் வாங்கல்களை உங்களது சேமிப்பு புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளல்
  - பாதுகாப்பு பெட்டகம் தொடர்பில் காலாவதியாகியுள்ள தவணைப் பணத்தை மீளச் செலுத்தல்
- இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்து தொடர்பான கணக்கறிக்கை, அதன் இரகசியத் தன்மை மற்றும் உரிமையின் பாதுகாப்பை பேணுவதற்காகவும் மூன்றாம் நபர்களின் உரிமைக் கோரலை தவிர்க்க வேண்டியும் பிரசுரிக்கப்பட மாட்டாது.
- எவ்வாறாயினும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது கைவிடப்பட்ட சொத்து தொடர்பான தனிப்பட்ட விபர அறிக்கை வங்கிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உரிய காலத்தில் அனுப்பப்படும் என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

| மாவட்டம் | கணக்குகளின் எண்ணிக்கை | மாவட்டம் | கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அம்பாறை - 8 கிளைகள் | 146 | குருநாகல் - 10 கிளைகள் | 429 |
| அனுராதபுரம் - 6 கிளைகள் | 76 | மன்னார் - 1 கிளைகள் | 39 |
| பதுளை - 5 கிளைகள் | 191 | மாத்தளை - 4 கிளைகள் | 89 |
| மட்டக்களப்பு - 6 கிளைகள் | 173 | மாத்தறை - 8 கிளைகள் | 223 |
| கொழும்பு - 56 கிளைகள் | 1671 | மொனராகலை - 4 கிளைகள் | 56 |
| காலி - 8 கிளைகள் | 160 | முல்லைத்தீவு - 1 கிளைகள் | 10 |
| கம்பஹா - 24 கிளைகள் | 640 | நுவரெலியா - 3 கிளைகள் | 56 |
| அம்பாந்தோட்டை - 6 கிளைகள் | 88 | பொலன்னறுவை - 3 கிளைகள் | 23 |
| யாழ்ப்பாணம் - 8 கிளைகள் | 114 | புத்தளம் - 8 கிளைகள் | 106 |
| களுத்துறை - 10 கிளைகள் | 265 | இரத்தினபுரி - 6 கிளைகள் | 136 |
| கண்டி - 13 கிளைகள் | 267 | திருகோணமலை - 3 கிளைகள் | 49 |
| கேகாலை - 5 கிளைகள் | 119 | வன்னி - 2 கிளைகள் | 50 |
| கிளிநொச்சி - 1 கிளைகள் | 59 | | |

**மேலதிக விபரங்களுக்கு எமது வாடிக்கையாளர் சேவை நிலையத்தைத் 011 2 30 30 50 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும் அல்லது அருகில் உள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடவும். அல்லது mgr.oper@sampath.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்**

## ஜனாதிபதி புலமைப்பரிசில்கள்...

வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித் தொகையை நாளை (12) முதல் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் மாணவருக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் (ஜூன் 19) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றதுடன் ஏனைய 24 மாவட்டங்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று முதல் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இதன்படி, பதுளை, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் ஜூலை 13 ஆம் திகதியும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஜூலை 14 ஆம் திகதியும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நாளையும் (12), ஜூலை 15 ஆம் திகதியும், கம்பஹா மாவட்டத்தில் ஜூலை 16 மற்றும் 17 ஆம் திகதிகளிலும், காலி மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளிலும், வவுனியா, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும், களுத்துறை, மன்னார், அம்பாறை, குருநாகல், கண்டி மாவட்டங்களில் ஜூலை 17ஆம் திகதியும் முல்லைத்தீவு, திருகோணமலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் ஜூலை 18ஆம் திகதியும் மொணராகலை, மாத்தறை மாவட்டங்களில் ஜூலை 19ஆம் திகதியும், புத்தளம் மாவட்டத்தில் ஜூலை 22ஆம் திகதியும் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட செயலாளர்கள் தலைமையில், அனைத்து வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அதிபர்களின் ஒருங்கிணைப்புடன், இந்த புலமைப்பரிசில் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். முதலாம் கட்டத்தில் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களில் ஒருபகுதியினர் மாத்திரம் புலமைப்பரிசில் வழங்கும் விழாவிற்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் க.பொ.த உயர் தரம் கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் ஏற்கனவே வலய மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் (Facebook) பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

க.பொ.த உயர் தர மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6000/ வீதம், 24 மாதங்களுக்கு வழங்கப்படவிருப்பதோடு ஒரு கல்வி வலயத்திலிருந்து 60 மாணவர்களைத் தெரிவு செய்து 6,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். இந்த மாணவர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுடன் ரூ.30,000/ புலமைப்பரிசில் தொகை புலமை பரிசில் வழங்கும் நிகழ்வில் வழங்குவதற்கும், அடுத்த மாதம் முதல் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதம் ரூ.6000/ புலமைப்பரிசில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை உள்ள நாட்டின் 10,126 பாடசாலைகளையும் உள்ளடக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான 12 மாதங்களுக்கு மாதாந்தம் ரூ.3000/வீதம் உதவித் தொகை வழங்கப்படும். புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்காத பாடசாலைகள் தொடர்பான பட்டியில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இதன்படி, ஏதாவது பாடசாலை புலமைப்பரிசில் பெற விண்ணப்பிக்கவில்லை என்றால், அது தொடர்பில் ஆராய்ந்து விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு பெற்றோர் மற்றும் பிள்ளைகளை ஜனாதிபதி நிதியம் கோருகிறது.

இந்த இக்கட்டான நேரத்தில் யாரையும் கைவிடக்கூடாது என்பது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருத்தாகும். பிள்ளைகளுக்கு அதிக கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கும், நிதி நெருக்கடி காரணமாக பிள்ளையொன்று பாடசாலையை விட்டு விலகும் நிலை இருந்தால் அவ்வாறான நிலைமைகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கமைய புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்காத பாடசாலைகளுக்கு மீண்டும் புலமைப்பரிசில்களைப் பெற விண்ணப்பித்து அதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது.

அதன்படி, மாவட்ட மட்டத்தில் இந்தப் புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் தொடர்பான புதிய தகவல்களைப் பெற ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் (Facebook) பக்கத்தை Follow/ Like செய்யுமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது.

இந்த புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் தொடர்பான மேலதிக தகவல்களை அந்தந்த மாவட்ட செயலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் மாத்திரம் ஜனாதிபதி நிதிய அதிகாரிகளை 0112354354 தொடர் இலக்கம் 4835 மற்றும் 0740854527 (Whatsapp மட்டும்) மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## விவசாய ஓய்வூதிய கொடுப்பனவுக்கு...

(5,386 மில்லியன்) 538 கோடியே 60 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக, விவசாய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இடை நடுவில் தடைப்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இது தொடர்பில் விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில் தயாசிறி ஜயசேகர எம். பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்தும் அது தொடர்பில் தெரிவித்த அமைச்சர்,

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்காக வருடாந்தம் அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்கிறது.

அத்துடன் 18 வயதில் இருந்து 55 வயது வரையானவர்கள் அதற்கு பங்களிப்பு செய்கின்றனர். அறுபது வயதுக்குப் பின்னர் இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

2022 டிசம்பர் மாதம் வரையில் விவசாய காப்புறுதிக்கு பங்களிப்பு செய்வோராக ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 741 பேர் தகைமை பெற்றுள்ளனர். அந்த வருடத்தில் 453 மில்லியன் ரூபா காப்புறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை,2024 ஆம் ஆண்டில் 60 வயது பூர்த்தியாகும் நிலையில் காப்புறுதியை பெற்றுக் கொள்ள ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 528 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

2024 மே மாதமளவில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ள தகுதியான 636 பேர் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். எனினும், எந்த வகையிலும் அவர்களது கொடுப்பனவு நிறுத்தப்படவில்லை. அவர்கள் தொடர்பான ஆவணம் உரிய பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் விரைவில் அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும்.

## இன்று மேடைகளில் வீரவசனம் பேசும்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்,

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த இந்நாடு, தற்போது படிப்படியாக முன்னேறி வருகின்றது. எங்களுக்கு இன்னும் பல சவால்கள் இருக்கின்றன. இந்த சவால்களுக்கு மத்தியில்தான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முடிந்தளவு இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைக் கண்டு வருகிறது. எரிபொருள் வரிசை போன்று கடந்த காலங்களில் காணப்பட்ட பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் கையில் பணமிருந்தாலும் தமக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது.

இன்று அந்நிலை மாற்றடைந்துள்ளது.மேலும், பொருட்களின் விலைகள் தற்போது ஓரளவு குறைந்துள்ளன. அது இன்னும் குறைய வேண்டும். ஏனென்றால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது.

ஆனாலும் நாடு பொருளாதார ரீதியில் எழுச்சி கண்டு வருகின்றது. அந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதற்காகத்தான் நாமும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த போது சிலர் நாட்டை விட்டு ஓடினர். இன்னொரு பிரிவினர் குறிப்பாக அரசியல் தலைவர்கள் சிலர் நாட்டுக்குள் ஒளித்துக்கொண்டனர். இன்னும் சில அரசியல் தலைவர்கள் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் துணிச்சலாக முன்வந்து இந்நாட்டைப் பொறுப்பேற்றார்.

அவ்வாறானதொரு பிரச்சினையான கால கட்டத்தில் நாட்டை விட்டு ஓடியவர்கள், ஒளித்துக்கொண்டவர்கள், பொறுப்பேற்க முன்வராதவர்கள் உள்ளிட்ட இன்னும் சிலர் நாடு பற்றி எரியும்போது, மக்கள் ஒரு பயங்கரமான சூழலில் இருக்கும்போது, தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரினர். குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிப்பது இலகு என்று அவர்களுக்குத் தெரியும்.

அந்தப் பிரச்சினையை வைத்து தமது அரசியல் இலாபத்தை தேடிக் கொள்வதே அவர்களின் எதிர்பார்ப்பு.

## ரயில் நிலைய அதிபர்கள்...

ஒன்றை அனுப்பி அண்மையில் பொதுப் போக்குவரத்து, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை சேவைகளை அத்தியாவசிய சேவையாக்க நடவடிக்கை எடுத்தேன். ரயில் நிலைய அதிபர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள போதிலும், ஏனைய சேவைகளை வழங்கும் எந்தவொரு தொழிற்சங்கமும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவில்லையெனவும், அவர்கள் நாட்டின் பொதுச் சட்டத்துக்கமைவாக செயற்படுவதால், அவர்களின் ஆதரவுடன் ரயில் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எவரேனும் நாட்டின் பொதுச் சட்டத்தை மதிக்காமல், பயங்கரவாதிகள் போல் நடந்து கொண்டால், அது தொடர்பில் கண்மூடித்தனமாக அமைதியாக இருப்பதற்கு ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும்,

எனினும் நாட்டின் சட்டத்தை மீறும் எவருக்கும் எதிராக தீர்மானம் எடுக்கத் தயங்கமாட்டேன் என தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க ...

பதவியில் வெற்றிடம் நிலவியது. இதனையடுத்து, ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க பதில் சட்ட மாஅதிபராக நியமிக்கப்பட்டார். இந்நிலையிலேயே ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட்ட மாஅதிபராக நியமிக்க அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

## பாதாளக் குழுக்களை ஒழிக்க...

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற மூன்று மாத காலங்களும் பிரியாணி வழங்கியது யார் என விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், தாக்குதல்களை மேற்கொண்டாவது பாதாள உலகக் குழுக்களை முழுமையாக அழிக்க வேண்டும் என தெரிவித்தார்.

அந்த வகையில் நாட்டில் அனைத்து பிரஜைகளும் சந்தேகம் பயமின்றி நிம்மதியாக வாழ்வதற்கு, கடும் சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## டயனா கமகேவுக்கு எதிராக...

குற்றச்சாட்டுகள் மீதான வாசிப்பு ஒத்திவைக்கப்பட்டது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரின் கடவுச்சீட்டை. நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## டிஜிட்டல் மயமாகும் நீர் வழங்கல்,...

நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இந்த விசேட நிகழ்வுக்கு அமைச்சின் செயலாளர்ஏ.சி.எம். நபீல், சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க,JICA நிறுவனத்தின் பிரதான பிரதிநிதி யாமதா டெஸ்டிதுயா (Yamada Tetsduya), Cyclomax International (Pvt) Ltd சபையின் பொது முகாமையாளர் T. பாரதிதாசன் உட்பட அதிகாரிகள் பலர் பங்குபற்றினர்.

## மக்களை பணயம் வைத்து போராடும்...

அப்பாவி மக்களை பணயக் கைதிகளாக வைத்து தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கும் ஜோசப் ஸ்டாலின் மற்றும் ரயில்வே தொழிற்சங்கத் தலைவர்களும் பயங்கரவாதிகளே என்றும் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## கொம்பனித்தெரு மேம்பாலம் மக்கள்...

ஆரம்பித்தது. இதன் நிர்மாணப்பணிகள் மாகா பொறியியல் (Maga Engineering) நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், உணவகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைக் கொண்ட வர்த்தக நகரப் பகுதியான கொம்பனித்தெரு பிரதேசத்தில் அமைந்துள்ள ரயில் கடவையால், நாளாந்தம் சுமார் 03 மணி நேரம் விரயம் ஏற்படுகிறது. இதன்படி, இந்த மேம்பாலத் திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் கொம்பனித் தெருவிலிருந்து காலி முகத்திடல் மற்றும் ஜனாதிபதி செயலகம் நோக்கி போக்குவரத்து நெரிசலின்றி பயணிக்க முடியும். வாகன நெரிசல் காரணமாக வீதியில் வீணாகும் மக்களின் நேரத்தை தேசிய பொருளாதாரத்தில் இணைக்க முடிந்துள்ளது.

## மட்டு. கரடியனாறு பகுதியில்...

அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் 20,000 T56 ரக துப்பாக்கி தோட்டாக்கள், 300 மிதிவெடிகள் மீட்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கமைய இந்த அகழ்வுப்பணிகள் நடைபெற்றன.

## மழையுடனான கால நிலை...

தெரிவித்துள்ளது. இந்த மாற்றம் இன்று 12 முதல் நிகழவுள்ளதாக தெரிவித்துள்ள வளிமண்டலவயில் திணைக்களம், மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் ஓரளவு பல தடவைகள் மழை பெய்யக்கூடுமெனவும் தெரிவித்துள்ளது.

## ஹிருணிக்காவின் பிணை மனு...

இவர் இம்மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.இதன் போது, பிணை விண்ணப்பத்துக்கு எதிராக சட்ட மாஅதிபர் எழுத்து மூல சமர்ப்பணங்களை முன்வைத்தார். எனவே, இந்த வழக்கை (15) விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

டிபெண்டர் வாகனத்தை பயன்படுத்தி தெமட்டகொடையில் இளைஞர் ஒருவரை கடத்தி, தாக்குதல் நடத்தியதுடன் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள வழக்கிலேயே, ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றவாளியாகக் காணப்பட்டார்.

ஹிருணிக்கா பிரேமச்சந்திர இந்த வழக்கில் ஒன்பதாவது குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ளார். அவர் குற்றமற்றவர் எனத் தெரிவித்ததால், அவருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## மலையகத்தில் பட்டதாரி ஆசிரியர்...

குறிப்பிட்டுள்ளார். தற்போது வரை பெறப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் 1,700 பட்டதாரிகள் மலையகத்தில் உள்ளனர்.

இது தொடர்பில் தொடர்ந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வரை பெறப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் 1,700 பட்டதாரிகள் மலையகத்தில் உள்ளனர்.

அதேநேரம், தொடர்ந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்கான நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் பொருளா.... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

தேசிய பால் சபையை திறந்து வைத்த போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை நியுஸிலாந்து சபாநாயகர் பார்வையிட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவைக் குறிப்பிட்ட பிரதமர், நியூசிலாந்து, இலங்கைக்கிடையிலான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்கவும் கொழும்பு திட்டத்தின் கீழ் ஆதரவை அதிகரிக்கவும் அழைப்பு விடுத்தார்.

## கிளப் வசந்தவின் சடலத்தை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நீதிமன்ற உத்தரவுப்படி தொலைபேசி ஆய்வு அறிக்கையை பெறவும், அதன் மூலம் தொலைபேசி எண்ணை கண்டுபிடித்து எந்த முகவரியில் இருந்து அந்த அழைப்பு எடுக்கப்பட்டதாக அறிந்து அந்த நபரை அடையாளம் காணவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## மலேசிய இந்திய... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கோலாலம்பூரிலுள்ள மலேசிய இந்திய காங்கிரஸ் தலைமை அலுவலகத்தின் அழைப்பில் அங்கு சென்ற ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசிய மக்களுக்கு மலேசிய இந்திய காங்கிரஸ் வழங்கும் சேவையினால் மிகவும் கவரப்பட்டதாக ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறியுள்ளார்.

## இன்றைய பலன்கள்

### (12.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உங்கள் முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான போக்கு காணப்படும். நண்பர்கள் உதவியுடன் சில காரியங்களில் தீவிரமாக செயல்படுவீர்கள்.

**ரிஷபம் :**
செய்யும் காரியங்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். முக்கிய நண்பர் ஒருவர் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பார்.

**மிதுனம்:**
காரியங்கள் பலவற்றில் வெற்றியைப் பெறுவீர்கள். சிலவற்றில் தடைகள் ஏற்ப்பட்டாலும் அவற்றை தகுந்த நண்பர்களின் உதவியுடன் தகர்த்து எறிவீர்கள்.

**கடகம்:**
தீவிரமான முயற்சிகளோடு செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றியடைவீர்கள். என்றாலும் மனதில் இனம் புரியாது குழப்பமும் தடுமாற்றமும் ஏற்படும்.

**சிம்மம்:**
முக்கியமான சில செயல்களை செய்து நன்மையடைவீர்கள். என்றாலும் சில காரியங்களில் தொல்லைகள் உண்டாகக் கூடும்.

**கன்னி:**
மனதில் சோர்வும் தளர்ச்சியும் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் வரவேண்டிய பணம் திட்டமிட்டபடி கைக்கு கிடைக்கும்.

**துலாம்:**
காரியங்களில் சில சில தடைகள் உண்டாகும். கையெழுத்திடுவதையும் முக்கிய பயணங்களையும் தள்ளி வைப்பது நன்மை தரும் .

**விருச்சிகம்:**
எதிர்பார்த்த பண வரவு இருந்தாலும் வரவுக்கு முன்பாகவே செலவு காத்திருக்கும். வாக்குறுதிகளில் கவனம் தேவை.

**தனுசு:**
அனைத்து காரியங்களிலும் திறமையோடு தீவிர முயற்சியோடும் ஈடுபட்டு நல்ல பலன்களை அடைவீர்கள். தளர்ச்சி அடைந்த செயல்களில் தக்க நண்பர்களின் துணை கொண்டு முன்னேறுவீர்கள்.

**மகரம்:**
ஒவ்வொரு செயல்களிலும் புத்திசாலித்தனமாக நீங்கள் எடுக்க முடிவுகள் உங்களுக்கு வெற்றியை தேடி தரும். சில வேலைகளை அவசரமாக செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் வரலாம்.

**கும்பம்:**
அவசியமான செயல்களில் தீவிர முயற்சியோடு ஈடுபடுவீர்கள். சில காரியங்களில் தளர்வு ஏற்பட்டாலும் அவற்றில் வெற்றி பெற தகுதியான நபரை நாடுவீர்கள்.

**மீனம்:**
பல செயல்களில் முயற்சியோடு செயல்பட்டாலும் சிலவற்றில் முன்னேற்றமும் சிலவற்றில் தொய்வும் காணப்படும். அவசியமான காரியங்களில் நண்பர்கள் கண்ணில் அகப்பட மாட்டார்கள் .

## உரிய நேரத்தில் தேர்தல்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அப்படி இருந்தும் இன்னும் அதில் சந்தேகம் இருப்பதாக சில தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

எந்த ஒரு சந்தேகமும் வைத்துக் கொள்ள வேண்டாம். அக்டோபர் 17 க்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டு புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுவது உறுதி.

ஜனாதிபதி தெரிவுக்கான அனைத்து தகமைகளையும் கொண்ட பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவே இருப்பதால், இந்த நாட்டை மீட்பதற்கு அவரால் மட்டுமே முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கமைய உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் என்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## தேர்தலுக்கு நாம்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த நிலையில் தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது. 19ஆம் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் 5ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. எனினும் 83 (ஆ) சரத்தில் அது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

அதனை மாற்றுவதற்காகவே யோசனை கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் அத் தேர்தல் நடத்தப்படுவது உறுதி. தற்போதைய ஜனாதிபதிக்கு முன்னால் செல்ல முடியும். ரிப்போர்ட் கார்ட் உள்ளது. அதனை முன்வைப்போம். அவர் வேண்டுமா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பர். நாம் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளோம். நாம் தேர்தலுக்கு பயப்பட வேண்டிய எந்தக் காரணமும் எத்தகைய அவசியமும் கிடையாது.

வரிசை யுகத்தை இல்லாது செய்துள்ளோம். 24 மணிநேரமும் மின் விநியோகத்தை வழங்குகின்றோம். சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துள்ளோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம். டொலர் கையிருப்பை அதிகரித்துள்ளோம். இதனால் தேர்தலுக்கு அஞ்சவில்லை. ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நெருக்கடியை சமாளித்த... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

எனது அரசியல் பயணத்தில் முதல் நோக்கம் ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளை மிகச் சிறப்பாக சமாளித்தார். கடந்த இரண்டு வருடங்களில், அரசியல்வாதியாக அல்லாமல், தலைவராகவும், தொழில்முனைவோராகவும் செயற்பட்டு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியை எப்படி வென்றார் என்பதை நாம் அவதானித்தோம்.

ஒரு தொழில்முனைவோராக பார்க்கும் போது, தொழில்முனைவோரின் எண்ணமும், தொலைநோக்கு பார்வையும், முதிர்ச்சியும் கொண்ட ஒரு தலைவரால் மட்டுமே நாட்டை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற முடியும். அத்தகைய திறன் கொண்ட தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை நாம் பார்க்கலாம். நாட்டின் நெருக்கடியை சமாளித்து நாட்டை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல, ரணில் விக்கிரமசிங்கவின் திறமையும் தலைமைத்துவமும் காரணமாக அமைந்தது.

பொருளாதார நெருக்கடியில் இருந்த நாட்டை உரிய முறையில் நிர்வகித்து அதை மாற்றிய தலைவரிடம் இந்த நாடு ஒப்படைக்கப்படுமா அல்லது புரிதல் இல்லாத ஒருவரிடம் மீண்டும் நாடு ஒப்படைக்குமா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். இந்த தலைமைத்துவத்தை மாற்றியமைக்க முயல்வது ஒரு பெரும் வரலாற்றுத் தவறாகும்.

## கொக்குத்தொடுவாய்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

மூன்றாம் நாளாகவும் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகத்தின் மனித உரிமைகள் அலுவலர் செல்றின் அகிலன் அகழ்வுப் பணிகளை கண்காணித்தார்.

அகழ்வு பணியின் போது ஏழு மனித உடலங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் மூன்று மனித எச்சங்கள் முழுமையாக வெளியே எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தமாக 43 எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

எலும்புக் கூட்டுத்தொகுதிகளில் இருந்து பற்கள் பிரித்து எடுக்கப்பட்டு DNA பரிசோதனைக்காக சேமித்து வைக்கப்பட்டுள்ளன .

எலும்புக் கூட்டுத்தொகுதிகளிலிருந்து த.வி.பு ஒ3035 இலக்கத்தகடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் கண்டெடுக்கப்பட்டன.

# புதிய பொருளாதார, அரசியலமைப்பை கட்டியெழுப்ப மகாசங்கத்தினரின் வழிகாட்டல் முக்கியமானது

## அமரபுர நிகாய ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் 44 ஆவது உபசம்பதா நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

தேரவாத பௌத்த நாடுகள் அனைத்தும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் அடிப்படையில் முன்னேற்றமடைந்துள்ளதாகவும், இறக்குமதிப் பொருளாதார முறையைப் பின்பற்றி இலங்கை மட்டுமே வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே, நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்வதற்கு மகாசங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானவை எனவும் தெரிவித்தார்.





காலி, கரந்தெனிய சிறி அபய திஸ்ஸ பிரிவெனாவில் நேற்றுமுன்தினம் (10) பிற்பகல் இடம்பெற்ற அமரபுர மகாநிக்காய ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் 44ஆவது உபசம்பதா நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அமரபுர மகா நிகாய ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் உபசம்பத நிகழ்வுகள் இலங்கை அமரபுர நிகாயாவின் மகாநாயக்க தேரர் வண. கரகொட உயங்கொட மைத்திரி மூர்த்தி மகாநாயக்க தேரர் தலைமையில் நேற்றுமுன்தினம் முதல் ஜூலை 14 ஆம் திகதி வரை நடைபெறுகின்றன. 98 பேர் இதன் போது துறவரத்தை ஏற்றுக்கொள்ளவுள்ளனர்.

600இற்கும் மேற்பட்ட விகாரைகளில் இருக்கும் 4000 இற்கும் மேற்பட்ட பிக்குகள் அமரபுர ஆரியவன்ச சத்தம்ம பீடத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, இரு வருடங்களுக்கு ஒரு முறை உபசம்பதா நிகழ்வு நடத்தப்படும்.

காலி, கரந்தெனிய சிறி அபய திஸ்ஸ பிரிவேனாவின் அதிபதி வண கினிகல பெதெஸ சுதம்ம தேரர், உபசம்பதா நிகழ்விற்காக வெளியிடப்பட்ட நினைவுப் புத்தகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கி வைத்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "துறவற வரலாற்றில் உபசம்பத நிகழ்வு முக்கியமானதாகும். அந்த விழாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டே முன்பிருந்தே இதற்காக அரச அனுசரணை வழங்கப்படுகிறது. இன்றைய உபசம்பதா நிகழ்வும் அரசாங்க அனுசரணையுடன் நடைபெறுகிறது. இலங்கையில் உபசம்பதா நிகழ்வு இல்லாத காலமும் இருந்தது. அப்போது, பிக்குகளின் தலையீட்டுடன் சியம் நிக்காயவில் முதலாவது உபசம்பதா நிகழ்வு அரச அனுசரணையுடன் நடத்தப்பட்டது.

மீண்டும் அந்த முறைமை இல்லாது போயிருந்த வேளையில், மியன்மாரின் உதவியுடன் அமரபுர நிக்காயவில் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து அரச அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது. நீண்டகாலமாக பேணப்பட்ட இறக்குமதி பொருளாதாரக் கொள்கையினால் அந்த நிலைமையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

ஆனால் மற்றைய அனைத்து தேரவாத பௌத்த நாடுகளும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்தன.

எனவே நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும். நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானவை" எனத் தெரிவித்தார்.

நீதி மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உரையாற்றுகையில், "ஒழுக்கம் இல்லாவிட்டால் சாசனம் அழிந்துவிடும் என்பது போல, ஒழுக்கம் இல்லாத நாடும் சரிந்துவிடும். அதனால் புத்த தர்மத்தின் முன்னுதாரணம் நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக அவசியமானதாகக் காணப்படுகிறது.



இலங்கையில் உபசம்பதா இல்லாத காலத்தில் தாய்லாந்தில் இருந்து அதனைக் கொண்டு வருவதற்காக இந்நாட்டுப் பிக்குகள் மூன்று தடவை தாய்லாந்து செல்ல வேண்டியிருந்தது. பல இன்னல்களுக்கு மத்தியில் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லப்பட்ட இந்த உபசம்பதா முறைமையை பாதுகாக்க மகா சங்கத்தினர் பாடுபட்டனர்" என்று தெரிவித்தார்.

வண. கந்துனே அஸ்ஸாஜி மகாநாயக்க தேரர், அமரபுர நிக்காய ஆரியவங்ச சத்தம்ம பீடத்தின் மகாநாயக்கர் குருநாகல் ரிதிகம ரப்படகல்ல விகாரையின் விகாராதிபதி எகொடமுல்லே அமரமொழி மகா நாயக்க தேரர், வண. வல்பொல விமலஞான அனுநாயக்க தேரர், கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, சம்பத் அத்துகோரள, கயந்த கருணாதிலக்க, ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு*

# இலங்கையில் முதன்முறையாக கறுவா அபிவிருத்திக்காக புதிய திணைக்களம்

## பிரதான அலுவலகம் காலி கரந்தெனியவில் ஜனாதிபதியினால் திறந்துவைப்பு

## சரியான பொருளாதார முறையின் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லாவிட்டால் பெற்ற வெற்றிகளை இழக்க நேரிடும்

சரியான பொருளாதார முறை மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லாவிட்டால் நாட்டுக்கு கிடைத்த வெற்றிகளை இழக்க நேரிடும் எனவும், நாட்டின் பொருளாதாரத்தை சீரழிக்க சிலர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அந்தப் பொய்களில் சிக்கினால் நாடு மீண்டும் நிரந்தரமாக பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொள்ளும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டினார்.

காலி, கரந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தை நேற்றுமுன்தினம் (10) பிற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.





இந்த நாட்டில் முதல் தடவையாக கறுவா அபிவிருத்தி திணைக்களம் என்ற புதிய திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நடைமுறைப்படுத்தும் வகையில் அதன் பிரதான அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது. கறுவா கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பத்தாண்டு கால வரைபடம் மற்றும் கறுவாச் செய்கை தொடர்பில் தயாரிக்கப்பட்ட 'கறுவா கையேடு' தொழில்நுட்ப பிரசுரமும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட கறுவா தொழில் முயற்சியாளர்களுக்கு GAP மற்றும் GI சான்றிதழ்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டன. தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "'200 ஆண்டுகளுக்குப் பிறகு கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதன்படி, நாட்டில் கறுவாச் செய்கையை மேம்படுத்தும் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டில் மீண்டும் கறுவாச் செய்கையை அபிவிருத்தி செய்வது இத்திணைக்களத்தின் பொறுப்பாகும். முதலில் கறுவா உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அங்கு, ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் அதிகபட்ச உற்பத்தியைப் பெற வேண்டும். மேலும், குறைந்த தரத்திலான கறுவாவுக்குப் பதிலாக உயர்தரத்திலான கறுவா வகைகளை வளர்க்க வேண்டும். மேலும், கறுவா பயிரிடும் நிலப்பரப்பை அதிகரிக்க வேண்டும். அரசாங்கம் புதிய காணிகளை வழங்குவதற்கும் அவர்களின் நிலத்தில் ஏனைய பயிர்களுடன் கறுவாவைப் பயிரிடுவதற்கும் திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் கறுவா உற்பத்தியை மூன்று முதல் நான்கு மடங்கு வரை அதிகரிக்கலாம்.

மேலும் கறுவா விற்பனையை அதிகரிக்க வேண்டும். விற்பனை இல்லாமல் உற்பத்தியை அதிகரிப்பதில் எந்தப் பயனும் இல்லை. எனவே, விற்பனையை அதிகரிக்கத் தேவையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்க முடியும். நிறுவனங்கள் அந்தப் பொறுப்பை ஏற்குமானால் அரசாங்கம் அவர்களுக்கு ஒத்துழைக்க எதிர்பார்க்கிறது. எனவே, புதிய சந்தை வாய்ப்புகளைப்பெற்று முன்னேற வேண்டும். கரந்தெனிய பிரதேச கறுவா அபிவிருத்தி நிலையமாக இந்த நிறுவனத்தை மாற்ற எதிர்பார்த்துள்ளோம். பழைய முறைப்படி அன்றி நவீன முறைப்படி இந்த விவகாரங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

இறக்குமதிப் பொருளாதாரத்தில் நீடித்ததுதான் நமது நாடு வங்குரோத்தடைவதற்கு முக்கிய காரணமாகும். இறக்குமதிக்காக பெரிய அளவில் கடன் வாங்கினோம். சரியான பொருளாதாரக் கொள்கைகளால், இன்று நாம் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட முடிந்தது. அத்துடன் நாம் செலுத்த வேண்டிய கடனில் இருந்து சுமார் 08 பில்லியன் டொலர்கள் குறைக்கப்பட்டு 2043 ஆம் ஆண்டு வரை கடனை செலுத்த காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு நாம் செல்லவில்லை என்றால் இன்னும் 15 வருடங்களில் நமது நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். அப்படியானால், நாம் விரைவில் ஒரு புதிய பொருளாதாரக் கட்டமைப்புக்கு செல்ல வேண்டும். அங்கு ஏற்றுமதி பொருளாதாரம் மூலம் அந்நிய செலாவணியை ஈட்ட வேண்டும்.

அன்று நாம் உலகிற்கே கறுவாவை கொடுத்தோம். இப்போது நாம் அந்த நிலைமைக்குத் திரும்ப வேண்டும். அக்காலத்தில் புத்தளத்திலிருந்து ஹம்பாந்தோட்டை வரை கறுவா பயிரிடப்பட்டது. அந்தச் செயற்பாடுகளை திட்டமிட்ட அடிப்படையில் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். மேலும், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் புதிய முதலீடுகளைப் பெறவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டில் நிலவிய நிலைமையைச் சொல்லத் தேவையில்லை. இந்த நாட்டை மீட்க முடியாது என்று சிலர் கூறினர். நான் பேராசையில் ஆட்சிக்கு வந்தாக சிலர் கூறினர். எப்படியோ நாம் நாட்டை மீட்டு விட்டோம். நாம் சரியான பாதையில் செல்லாவிட்டால், இந்த வெற்றி நம் கையிலிருந்து நழுவக்கூடும். இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான வழியை நாம் இப்போது காட்டியுள்ளோம். ஒவ்வொரு நபர்களும் வெவ்வேறு விடயங்களைச் சொல்கிறார்கள். பல்வேறு சுவர்க்கலோக வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் நாட்டின் வெற்றியை எவ்வாறு பாதுகாத்து முன்னேறுவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். எனவே இன்னும் 10 வருடங்கள் இந்த சரியான பாதையில் சென்றால் எந்த பிரச்சினையும் இல்லாமல் அபிவிருத்தி அடைய வாய்ப்பு இருக்கிறது" எனத் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன:

"கறுவா அதிகம் பயிரிடப்படும் பிரதேசத்தில் கறுவா அபிவிருத்தி திணைக்களத்தை நிறுவியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். உலக சந்தையில் இலங்கை கறுவாவுக்கு தனித்துவமான இடம் உண்டு. மெக்சிகோ மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இலங்கை கறுவாவுக்கு அதிக கேள்வி உள்ளது. அதில் பெரும்பாலான கறுவா அமெரிக்காவிற்கு மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இலங்கை கறுவாவுக்கு அதிக பெறுமதியைப்பெற்றுக் கொடுக்க வேண்டும்."

விவசாய மற்றும் தோட்டக்கலை அமைச்சர் மஹிந்த அமரவீர:

"கைத்தொழில் அமைச்சின் கீழ் வரக்கூடிய நிறுவனமாக தென்மாகாணத்தில் நிறுவப்பட்ட முதலாவது திணைக்களமாக கறுவா அபிவிருத்தி திணைக்களம் வரலாற்றில் இடம்பிடிக்கிறது. கறுவா பயிற்செய்கைக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப அறிவை வழங்க இந்த திணைக்களம் பணியாற்றும். புதிய பயிற்செய்கை நிலங்களை வழங்கி கறுவாப் பயிற்செய்கையை விரிவுபடுத்த எதிர்பார்க்கிறோம். இதன் ஊடாக அதிக அந்நியச் செலாவணியை ஈட்டும் வாய்ப்பு உள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உரம் இல்லாமல் விவசாயிகள் வயல்களை விட்டு நெடுஞ்சாலைக்கு வந்தனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் வெளிநாட்டு உறவுகளை அடிப்படையாக கொண்டு உரம் கொண்டு வர நடவடிக்கை எடுத்தார். அந்த வேலைத் திட்டத்தின் காரணமாகவே இன்று இலங்கையின் பாவனைக்குத் தேவையான அனைத்து அரிசியையும் உற்பத்தி செய்ய முடிந்துள்ளது. மொத்தத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கையின் பொருளாதாரத்தை சிறந்த பாதைக்கு கொண்டு வர முடிந்தது."




இராஜாங்க அமைச்சர்களான மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, டி.பி.ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, சம்பத் அத்துகோரள மற்றும் பிரதேச மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு*

# ஆசூரா நோன்பின் மகத்துவம்

இஸ்லாத்தில் நான்கு மாதங்கள் புனிதமானவையாகும். இதனை அல் குர்ஆனும் நபிமொழிகளும் எடுத்தியம்பியுள்ளன. அந்த வகையில் அல் குர்ஆன், 'அல்லாஹ்விடம் நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை, வானங்கள் மற்றும் பூமியைப் படைக்கப்பட்ட நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் பன்னிரண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு புனிதமானவை. இதுதான் நேரான மார்க்கம். இவைகளில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்து கொள்ளாதீர்கள். இணைவைப்போர் உங்கள் அனைவருடனும் போர் புரிவது போன்று நீங்களும் அவர்கள் அனைவருடனும் போர் புரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியாளர்களுடன் இருக்கின்றான் என்பதனை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்'. (09:36)

அதேநேரம், நபி (ஸல் அவர்கள், 'வானங்களையும் பூமியையும் படைத்தது முதல் காலம் சுழன்று கொண்டிருக்கின்றது. ஒரு வருடத்தில் பன்னிரெண்டு மாதங்கள் உள்ளன. அவற்றில் நான்கு புனிதமானவை. அதிலும் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக வருகின்ற துல் கஃதா, துல் ஹிஜ்ஜா, முஹர்ரம் மாதங்களாகும். அடுத்தது ஜமாதுல் ஊலாவுக்கும் ஷஃபானுக்கும் மத்தியில் இருக்கின்ற ரஜப் மாதமும் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

அதனால் இஸ்லாம் விலக்கி, தடுத்துள்ள விடயங்களிலிருந்து முற்று முழுதாக தவிர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக புனித மாதங்களில் பேணுதலாக இருக்க வேண்டும். ஹரத்தின் எல்லைகளின் புனிதத்துவத்தை மீறி பாவம் செய்தால் எவ்வாறு பன்மடங்கு பாவம் கிடைக்குமோ அதே போன்று புனித மாதங்களில் பாவம் செய்வதால் பன்மடங்கு பாவங்கள் கிடைக்கப்பெறும். அதேபோன்று இம்மாதங்களில் நன்மை செய்வது பல மடங்கு நன்மைகளையும் ஈட்டித்தரும்.

உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித்தோழர்களை ஒன்று சேர்த்து எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். அதனடிப்படையில் பலரும் பல மாதங்களை குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பதை நபிகளார் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாளை அடிப்படையாக வைத்து என்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்பவே இஸ்லாத்தின் முதல் மாதமாக முஹர்ரம் விளங்குகிறது.

அல்லாஹ்தஆலா மூஸா (அலை) அவர்களை கொடுங்கோல் ஆட்சியாளனாகிய பிர்அவ்னிடமிருந்து காப்பாற்றியது இந்தப் புனித மாதத்தில் தான். இம்மாத்தில் ஏராளமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.



குறிப்பாக நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் முஹர்ரம் மாதத்தின் ஆசூரா தினத்தில் நோன்பு நோற்பதை கண்டார்கள். அதனால் அவர்களிடத்தில் நீங்கள் நோற்கின்ற இந்த நோன்பு எந்த நாள் என்று அன்னார் வினவினார்கள். அதற்கு அவர்கள் 'இது ஒரு புனிதமான நாள். இதில் அல்லாஹ் மூஸா (அலை) அவர்களையும் அவர்களது சமுதாயத்தினரையும் பிர்அவ்னிடமிருந்து காப்பாற்றினான்.

மேலும் ஃபிர்அவ்னையும் அவனது கூட்டத்தினரையும் அவன் கடலில் மூழ்கடித்தான். அதனால் மூஸா (அலை), அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் முகமாக அந்நாளில் நோன்பு நோற்றார்கள். ஆகையால் நாங்களும் நோன்பு நோற்கின்றோம்' என்றார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், மூஸாவை பின்பற்றுவதற்கு உங்களை விட நாமே தகுதியானவர்கள் என்று கூறி, நபி (ஸல்) அவர்களும் நோன்பு நோற்று பிறரையும் நோன்பு நோற்க ஏவினார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'ரமழான் மாத நோன்புக்கு பின் சிறந்த நோன்பு முஹர்ரம் மாத நோன்பாகும். கடமையான தொழுகைக்குப் பின் சிறந்த தொழுகை இரவுத் தொழுகையாகும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

இந்த நபிமொழிகள் முஹர்ரம் மாதத்தில் நோற்கின்ற நோன்புகளுக்கு பல நன்மைகள் உள்ளன என்பதனை எடுத்தியம்புகிறது.

இதனை 'ரமழானுக்கு பின்னர் சிறந்த நோன்பு முஹர்ரம் மாதத்தில் நோற்கும் நோன்பு' என்ற வரிகள் தெளிவுபடுத்துகிறது. அதனால் வாராந்தம் நோற்கப்படக்கூடிய திங்கள், வியாழன் நோன்புகள், அதே போன்று மாதாந்தம் நோற்கக்கூடிய 13, 14, 15 அய்யாமுல் பீழ் (வெள்ளை தினங்கள்), அதே போன்று அய்யாமுஸ்ஸூத் (கருப்புத் தினங்கள்) 27, 28, 29 நோற்கக்கூடிய நோன்புகளை நோற்று நபி (ஸல்) அவர்கள் ரமழானுக்குப் பின்னர் சிறந்த நோன்பு என்று சொல்லப்பட்ட சிறப்பை பெற முயல வேண்டும்.

ஆசூரா நோன்பு பற்றி இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, இந்நாளை (ஆசூரா தினத்தை) தவிர வேறு எந்த நாளிலும் நோன்பு நோற்பதை நபி (ஸல்) அவர்கள் சிறப்பாக கருதி தேடியதாக நான் அறியவில்லை என உபைதுல்லா இப்னு அபி யஸீத் (ரழி) அவர்களிடம் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

முஹர்ரம் மாதத்தில் நபிகளார் செய்துவந்த, ஏவியவற்றில் ஆசூரா நோன்பு முக்கியமானதாகும். ஆசூரா என்பது பிறை கணிப்பீட்டின் படி முஹர்ரம் மாதத்தின் பத்தாவது நாளாகும். முஸ்லிம்கள் அனைத்து விடயங்களிலும் யூதர்களுக்கு மாற்றமாக தங்களது நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. யூதர்களும் ஆசூரா நோன்பை நோற்று வந்ததனால் அவர்களுக்கு மாற்றமாக ஒன்பதாவது நாளும் நோற்க வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். 'வருகின்ற வருடம் நான் இருந்தால் முஹர்ரம் ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன்' என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

உபரியான வணக்கங்களுக்கு இஸ்லாம் சில சிறப்புக்களை வைத்திருப்பதை போன்று ஆசூரா நோன்பும் பல சிறப்புக்களை கொண்டிருப்பதாக நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள். இந்நாளில் நோன்பு நோற்பது முந்தைய வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையுமென்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள், 'ஆசூரா நோன்பு அதற்கு முந்தைய வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையும் என்று நான் கருதுகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

முந்தைய வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையும் என்பதன் பொருள் சிறு பாவங்களையே இது குறிக்கின்றது. மாறாக பெரும் பாவங்களை அல்ல. பெரும் பாவங்கள் செய்தவர்களின் குற்றங்களுக்கு பரிகாரமாக அமைவது தௌபாவாகும்.

ஆசூரா நோன்பை நபிகளார் நோற்று வந்தார்கள். அத்தோடு யூதர்களுக்கு மாற்றம் செய்வதற்காக ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்க வேண்டும் என்று கூறினார்கள். இதனடிப்படையில் பத்தாவது நாளோடு ஒன்பதாவது நாளும் சேர்த்து நோன்பு நோற்பதே சிறந்ததாகும். இதற்கே அதிகமான ஆதாரங்களும் உள்ளன. முடியாவிட்டால் பத்து, பதினோராவது நாட்கள் நோன்பு நோற்று யூதர்களுக்கு மாற்றமாக செயற்பட வேண்டும். இவ்விரு முறைகளிலும் ஒருவருக்கு நோன்பு நோற்க முடியாவிட்டால் பத்தாவது நாள் மாத்திரமாவது நோன்பு நோற்றுக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் புனிதப்படுத்திய இம்மாதத்தின் புனிதத் தன்மையை பேணி, இம்மாதத்தில் அதிகமதிகம் நன்மைகளை செய்து, சுன்னத்தான நோன்பாகிய ஆசூரா நோன்பையும் நோற்று நபி(ஸல்) அவர்கள் கூறிய நற்கூலியை அடைய நம் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரியட்டும்.

**மௌலவி எம்.யூ,எம் வாலிஹ்**
(அல் அஸ்ஹரி) வெலிகம

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# பொறாமை கொள்வதை தவிர்ப்போம்

பொறாமை மனித இனத்தை ஆட்டிப்படைக்கக் கூடியதாகும். பிறர் நன்றாக வாழ்ந்தால், மகிழ்ச்சியாக இருந்தால், வசதி வாய்ப்புகளோடு சுகமான வாழ்க்கையை அனுபவித்தால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒருவரது நிறைவான வாழ்வுக்கு காரணம் அல்லாஹ் அவருக்கு வழங்கியுள்ள அருட்கொடைகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருட்கொடைகளை பெறும் அளவுக்கு அவரது இறையச்சம், வணக்க வழிபாடுகள், நற்சிந்தனை, நற்செயல்கள் அமைந்திருப்பதே இதற்கான காரணமாகும்.

அதனால் நாமும் இறையச்சத்துடன் வாழ்ந்து, நற்செயல்கள் செய்து இறைவனின் திருப்பொருத்தத்தை பெற வேண்டும் என்ற விருப்பத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு பதிலாக அந்த மனிதர் மேல் பொறாமை கொள்வது நல்லதல்ல. `அவருக்கு மட்டும் ஏன் இந்த சிறப்பான வாழ்வு கிடைத்துள்ளது' என்று வெறுப்பை வளர்க்கலாகாது. அந்த வெறுப்பு பகை உணர்வை உருவாக்கும்.

உலக வாழ்க்கையில் மக்களிடம் காணப்படும் போட்டி, பொறாமை காரணமாகத்தான் பல்வேறு மோதல்களும், பிரச்சினைகளும், கருத்து வேறுபாடுகளும் தோன்றுகின்றன. ஒரு மனிதன் இன்னொரு மனிதன் மீது பொறாமை கொண்டால் அது அவனையே அழிக்கிறது. பொறாமை குணம் அவனது மனதில் தங்கி கோபத்தையும், குரோதத்தையும் வளர்க்கிறது. இது அவனது உடல் நலத்துக்கே தீங்காக முடிகிறது.பொறாமை குணம் இருக்கும் இடத்தில் அமைதியும், சாந்தியும் இருப்பதில்லை. அது மனிதனை தீய வழியில் தள்ளிவிடுகிறது. இதனால் அவன் பாவங்களை செய்யவும், தவறான வழியில் நடக்கவும் செய்கிறான்.

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள், 'பொறாமை கொள்வது நன்மைகள் அனைத்தையும் தின்று விடும், நெருப்பு விறகை தின்பதைப் போன்று என்று குறிப்பிட்டுள்ளார்கள். (நபிமொழி) ஒரு தடவை அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள், 'நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சபையில் அமர்ந்திருந்தோம். அப்பொழுது 'சுவர்க்கத்திற்கு தகுதியானவர் ஒருவர் வருவார்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நாங்கள் பார்த்தோம், மதீனாவாசிகளில் ஒரு மனிதர் தொழுகைக்கு முன் தன்னை சுத்தப்படுத்திக் கொண்டு (ஒளூ செய்து கொண்டு) தன் தாடியில் தண்ணீர் சொட்ட



தனது இரு காலணிகளையும் வலது கையில் கொண்டு வந்தார்.

மறுநாளும் அதே மாதிரி சொன்னார்கள். அவரே வந்தார். மூன்றாம் நாளும் அவ்வாறே சொன்னார்கள். அவரே வந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த அவையை விட்டு சென்ற பிறகு அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள் அவரை பின்தொடர்ந்து அவருடைய வீட்டிற்கே சென்று விட்டார்கள். அவரிடம் சொன்னார்கள், `நான் என் தந்தையிடம் கோபித்துக் கொண்டு வந்துள்ளேன். தங்களுடைய இல்லத்தில் தங்குவதற்கு அனுமதி தாருங்கள்' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் `தாராளமாக தங்கிக் கொள்ளுங்களேன்' என்றார். அதற்கேற்ப அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள் மூன்று நாள் அவருடைய வீட்டில் தங்கினார்கள். அதைப் பற்றி சொல்லும் பொழுது `அவரை இரவு நேரத்தில் நான் கண்காணித்தேன். அவர் விழித்திருந்து வணக்கம் புரிவதை நான் காணவில்லை. தூக்கத்தில் புரண்டு படுக்கும் பொழுது மட்டும் அல்லாஹ்வை திக்ரு செய்வதை நான் கண்டேன். காலையில் பஜ்ரு நேரம் வந்தவுடன் பர்ளை நிறைவேற்றுகிறார். வேறு எந்த பெரிய வணக்கமும் இல்லை.

இதை நான் குறைத்து மதிப்பிட்டு விட்டு, 'எனக்கும் என் தந்தைக்கும் மத்தியில் எந்தவித கருத்து வேறுபாடுமில்லை, ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களை சுவனவாசி என்று கூறினார்கள்.

தங்களிடம் என்ன தான் அமல் இருக்கின்றது என்பதை பார்ப்பதற்காகவும், அதை நான் பின்பற்றலாம் என்ற எண்ணத்திலும் தான் வந்தேன். ஆனால் தங்களிடம் எந்த ஒரு பெரிய வணக்கத்தையும் நான் காணவில்லை. விஷயம் அவ்வாறு இருக்க, பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களை சுவர்க்கவாசி என்று எப்படி கூறினார்கள்? என்று தெரியவில்லையே' என்று கூறிவிட்டு புறப்படலானேன். பின்னால் இருந்து என்னை அவர் அழைத்தார். அப்போது அவர் சொன்னார் 'நான் யாரின் மீதும் குரோதமோ, பொறாமையையோ கொள்ளமாட்டேன். யாருக்கு எதை கொடுக்க இறைவன் நாடியிருக்கிறானோ அதை அவன் கொடுக்கிறான். நாம் ஏன் பொறாமை கொள்ள வேண்டும்' என்றார். உடனே அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள், 'ஆம், இது தான் தங்களை சுவனவாசியாக ஆக்கிவிட்டது'. அவர் தான் சஃதிப்னு அபி வக்காஸ் என்ற நபித்தோழர் ஆவார். (நபிமொழி)

இந்த சம்பவம் அடுத்தவர் மீது பொறாமை கொள்ளாமல் இருந்தாலே சுவனம் கிடைக்கும் என்பதை உணர்த்துகிறது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள்: "பகைமை கொள்ளாதீர்கள். பொறாமை கொள்ளாதீர்கள். புறக்கணிக்காதீர்கள். சகோதரர்களாக, அல்லாஹ்வின் அடிமைகளாக வாழுங்கள். ஒரு முஸ்லிம் தனது சகோதரரை மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்து ஒதுக்கிட வேண்டாம்' என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி) ஆகவே இஸ்லாம் வெறுக்கும் பொறாமை பண்பைச் தவிர்த்துக் கொள்வோம். அதன் ஊடாக ஈருலகிலும் சுபீட்சம் பெற்றுக் கொள்வோம்.

**மின்ஸார் இப்றாஹீம்**

# இறை நம்பிக்கையின் ஒரு பகுதி:

## சுத்தம்

'சுத்தம் சுகம் தரும்' என்பது நாம் அறியாத ஒன்றல்ல. அது ஈமான் எனும் இறை நம்பிக்கையின் ஒரு பகுதி' என்று நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

அதனால் மனிதன் கடைபிடிக்க வேண்டிய கட்டாயக் கடமைகளில் தூய்மையும் ஒன்று என்பது தெளிவாகிறது. சுத்தம் என்பது நாம் கவனம் செலுத்தாமல் விட்டுவிட்ட ஒன்று. நமது உணவு, உடை, உடல், இருப்பிடம் என யாவற்றிலும் நாம் தூய்மையை நன்கு கடைபிடிக்க வேண்டும். இறை நம்பிக்கை என்பது வெறும் மனதளவிலான நம்பிக்கை மட்டுமல்ல. அது செயலளவிலானதும் கூட என்பதையே அந்நபிமொழி நமக்கு நன்கு சுட்டிக்காட்டுகிறது.



இதனால் தான், நாம் சாப்பிடும் முன் கைகளை தேய்த்துக் கழுவ வேண்டும், சாப்பிட்ட பின்பும் கைகளை கழுவி, வாய் கொப்பளிக்கவும் வேண்டும். தூய்மையான ஆடைகளை அணிய வேண்டும். தினமும் குளிக்க வேண்டும், மலம், சிறுநீர் கழித்த பின் அவ்வுறுப்புக்களையும், கைகளையும் நன்கு தேய்த்து கழுவ வேண்டும். காலணி அணிய வேண்டும், வீடுகளை, வீட்டு வாசலை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும், உறங்கும் முன் படுக்கையை உதறிதட்டிக் கொள்ள வேண்டும் என்பது உள்பட மனிதன் தன் அன்றாட வாழ்வில் தினமும் கடைபிடிக்க வேண்டிய அனைத்து தூய்மைமுறைகள் குறித்தும் இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது. இவை அனைத்தும் அல் குர்ஆனிலும், நபிமொழிகளிலும் இடம்பெற்றுள்ளன.

'மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில், அனுமதிக்கப்பட்டவற்றையும், பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள். ஷைத்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றாதீர்கள் நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவனாவான்". (அல் குர்ஆன் 2:168)

"நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள். நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்". (அல் குர்ஆன் 2:172)

"ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் தொழுங்காலம் உங்களை ஆடைகளால் அழகாக்கிக் கொள்ளுங்கள். உண்ணுங்கள், பருகுங்கள். எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ், அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (அல் குர்ஆன் 7:31)

"உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக. மேலும் அசுத்தத்தை வெறுத்து (ஒதுக்கி) விடுவீராக". (அல் குர்ஆன் 74:4,5)

"(நபியே!) அல்லாஹ் தன் அடியார்களுக்காக அளித்திருக்கும் (ஆடை) அலங்காரத்தையும், நல்ல (மேலான) உணவையும் (ஆகாதவையென்று) தடுப்பவர் யார்?" என்று கேட்டு 'அது இவ்வுலகத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு(ம் ஆகுமானதே! எனினும்) மறுமை நாளில் (அவர்களுக்கு மட்டுமே) சொந்தமானது' என்றும் கூறுங்கள். அறியக்கூடிய மக்களுக்கு (நம்முடைய) வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றோம்". (அல் குர்ஆன் 7:32)

"நம்பிக்கையாளர்களே! நீங்கள் தொழுகைக்குச் சென்றால் (அதற்கு முன்னர்) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரையில் உங்கள் கைகளையும், கணுக்கால்கள் வரையில் உங்கள் இரு பாதங்களையும் கழுவிக்கொள்ளுங்கள். அன்றி, (உங்கள் கையில் நீரைத் தொட்டு) உங்கள் தலையை தடவிக் கொள்ளுங்கள். நீங்கள் முழுக்குளிப்புடையவர்களாக இருந்தால் (கை, கால்களை மட்டும் கழுவினால் போதாது. உடல் முழுவதையும் கழுவி) தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கஷ்டத்தைத் தர அல்லாஹ் விரும்பவில்லை. எனினும், அவன் உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கவும், தன் அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கி வைக்கவுமே விரும்புகின்றான். (இதற்காக) நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவீர்களாக!". (அல் குர்ஆன் 5:6)

இவ்வாறு சுத்தம் பற்றி இஸ்லாம் மிக விரிவாக தெளிவுபடுத்தியுள்ளது. இருந்தும் நாம் தான் பல நேரங்களில் தூய்மையை கடைபிடிப்பதில்லை அல்லது கவனக் குறைவாக இருந்து விடுகிறோம். இதன் விளைவு நம்மை மட்டுமல்ல நம்மைச் சுற்றியிருப்பவர்களையும், நம் சந்ததியினரையும் பாதிக்கிறது என்பது உண்மையே.

'சுத்தம் சோறு போடும், கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி' என்பன போன்ற பழமொழிகள் சுத்தத்தின் அவசியத்தை நமக்கு நன்கு வலியுறுத்துகின்றன. நாம் தூய்மையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தையும், அதற்கான பழக்கத்தையும் குழந்தைப் பருவத்திலிருந்தே ஊட்டி வரவேண்டும். 'தூய்மை தேசம்' என்பது எங்கோ ஒரு மூலையிலுள்ள ஒரு திட்டமல்ல. நமது வீட்டு மூலையை சுத்தம் செய்வதிலிருந்து நாம் தொடங்க வேண்டிய நமக்கான திட்டம் தான் அது.

ஆரோக்கியம் மலர வேண்டுமென்றால் அது கட்டாயம் சுத்தத்திலிருந்து தான் தொடங்கப்பட வேண்டும். நீர் மாசு, நில மாசு, வளிமண்டல மாசு என எல்லாமுமே மாசுபட்டுக் கிடக்கிற போது அவற்றின் மாசுகளை நாம் எப்படி நீக்கப் போகிறோம் என்பது தான் இன்றைக்கு நம் முன்னுள்ள பெரும் சவால்.

**அப்துல்லாஹ்**

# கிழக்கின் குரல்



## வரிசை யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் ஜனாதிபதி ரணில்

### கல்முனையில் ஹரீஸ் எம்.பி.

**அம்பாறை மத்திய தினகரன் நிருபர்**



பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குள் நாடு சிக்கி தவித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் யாரும் நாட்டை முன்கொண்டு செல்ல பின் நின்ற போது தனித்து தைரியமாக முன் வந்து தனது அறிவு முதிர்ச்சி காரணமாக நாட்டில் காணப்பட்ட வரிசை யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவாரென, பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவருமான எச்.எம். எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் கேட்போர்கூடம் உட்பட 3 மாடிகளை கொண்ட பாடசாலை கட்டடத்தொகுதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பவள விழாவை சிறப்பிக்கும் முகமாக ஹரீஸ் எம்.பி.யின் அயராத முயற்சியால் இந்நிர்மாண பணிக்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் நாடு மீண்டு வரும் இன்றைய சூழலில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை செய்து நாட்டின் அவசர அபிவிருத்தி திட்டங்களுக்கும் அவர் உதவி வருகின்றார்.

இவ்வாறான திட்டத்தின் பிரகாரமே ஜனாதிபதியிடம் கலந்துரையாடி பாடசாலை கட்டட நிர்மாணத்துக்கான நிதியை பெற்றுக்கொண்டதாக தெரிவித்தார்.

சுமார் 10.5 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள இந்த கட்டடத்தொகுதிக்கு ஆரம்பக் கட்டமாக 60 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த வேலையை 180 நாட்களுக்குள் முடிவுறுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## நற்பிட்டிமுனை நூலகத்தில் அல் அக்ஸா பாடசாலை மாணவர்கள்



**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனை கரவாகு மேற்கு நற்பிட்டிமுனை பிரதேச நூலகத்துக்கு அல் அக்ஸா மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் நேற்று சென்று நூலகத்தை பார்வையிட்டனர். இந்நூலகத்தின் வாசிப்புபகுதி, உசாத்துணைப்பகுதி, இரவல்பகுதி ஆகியவற்றுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பத்திரிகைகள், சிறுவர் நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பதன் அனுகூலம் தொடர்பாக நூலகர் எஸ்.எம்.ஆர். அமீனுதீனால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது மாணவர்களுக்கு நூலக உதவியாளர்களான எஸ்.என். ஏ.நிஹாறா, பாஹிதா உள்ளிட்ட பலர் தமது பங்களிப்பை வழங்கினர்.

### திருக்கோவில் சித்திரவேலாயுத கோயில் உற்சவம்

## திருவிழா காலத்தில் உணவு விற்பனை நிலையங்களில் விசேட சோதனை



**காரைதீவு குறுப் நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி கோயில் உற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில், திருவிழாக் காலத்தில் கோயில் வளாகத்தில் அமைக்கப்படவுள்ள உணவு விற்பனை நிலையங்களில் விசேட சோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் கடந்த திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அப்பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற போதே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திருவிழாக் காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நலன்புரி சேவைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி கோயில் உற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.நிருபா, திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.மோகனகாந்தன், கோயில் பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மட்டு. பழைய மாவட்ட செயலகத்தில் மீண்டும் வாகன காப்புறுதி சேவை

**மணல்சேனை நிருபர்**

மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் இயங்கி வரும் பழைய மாவட்ட செயலகத்தில் வழங்கப்பட்டு வந்த மோட்டார் வாகன காப்புறுதி சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வழமை போன்று மோட்டார் வாகன காப்புறுதியை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியுமென, மட்டக்களப்பு மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்காலிகமாக கடந்த ஒரு மாத காலம் இந்த காப்புறுதி சேவை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், அச்சேவையை மீண்டும் தொடரும் பொருட்டு புதிய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மோட்டார் வாகன சேவையானது வழமை போன்று பழைய மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்படுவதாகவும், அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிறுவர் பாதுகாப்பு கலந்துரையாடல்



**பாலமுனை விசேட நிருபர்**

கல்முனையில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் வன்முறைகளிலிருந்து சிறுவர்களை பாதுகாத்து பராமரிப்பது தொடர்பாகவும் துறைசார்ந்த அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது பின்வரும் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. அவையாவன,

கல்முனையில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தி அவர்களை பாதுகாத்தல், வன்முறைகளுக்கு உள்ளான சிறுவர்களை பராமரித்து அவர்களுக்கான சேவைகளை திறன்பட வழங்கல், சிறுவர்களின் நலன் கருதி துறை சார்ந்தவர்களை ஒன்றிணைத்து அமைக்கப்பட்ட குழுவை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டி சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தல் மற்றும் அவர்களை பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய உளநல பிரிவுக்கான பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபல் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார்.

சிறுவர்களுடைய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி சகிலா இஸ்ஸடீன் இதன்போது தெரிவித்தார்.

## 'நிதர்சனத்தின் நிழல்' கவிதை நூல் வெளியீடு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று முபீதா அமீன் எழுதிய கன்னிப் படைப்பான 'நிதர்சனத்தின் நிழல்' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் மீரா எஸ்.இஸ்ஸடீன் தலைமையில் ஏட்டுலா கனவாக்கம் அமைப்பால் இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதல் பிரதி நூலாசிரியரால் றஸ்பாஸ் நிறுவன பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக், விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று பிரதேச கலாசார உத்தியோகத்தர் என்.நவப்பிரியா, தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ஏ.றசாக், றஸ்பாஸ் நிறுவன பணிப்பாளர் ஏ.கே. றிப்னாஸ், கலை இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், நூலாசிரியரின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மூதூரில் இரத்ததான முகாம் நாளை

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் தள வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மூதூர் நடுத்தீவு வலுவூட்டல் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மூதூர் தள வைத்தியசாலையின் அனுசரணையுடன் இரத்ததான முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இந்த இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை (13) நடைபெறவுள்ளது. 'உயிர் காக்கும் உயரிய தானம்' எனும் கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ள இந்த இரத்ததான முகாமில் கலந்துகொண்டு, இரத்ததானம் வழங்க முன்வருமாறு, வலுவூட்டல் நலன்புரிச் சங்க நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.






## ஒரே பாடசாலையில் 5 வருடங்களுக்கு மேலாக பணி புரிவோருக்கு இடமாற்றம்

### கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்பமட்ட சேவை மற்றும் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) பகுதி2 சேவைகளில் ஒரே பாடசாலையில் 5 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் அலுவலர்களுக்கு 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்துக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

ஆய்வுகூட உதவியாளர், பாடசாலை பணியாளர், பாடசாலை காவலாளி, விடுதி காப்பாளர், நூலக உதவியாளர் ஆகியோருக்கே இடமாற்றத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய இடமாற்றங்கள் அனைத்தும் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் நியமனம் செய்யப்பட்ட சிற்றூழியர்கள் தொடர்பாக வலயங்களுக்கு இடையிலான மற்றும் வலயத்துக்கு உட்பட்ட இடமாற்றங்கள் மாகாண கல்வி அமைச்சின் இடமாற்ற சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்ற விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர், மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் வழங்கப்படும் ஊழியர்களை பதில் இடமாற்றம் பெற்றவர்கள் வரும்வரை வைத்திருக்காது, உரிய தினத்தில் புதிய பாடசாலையில் கடமையை பொறுப்பேற்கக்கூடிய வகையில் விடுவிப்பதற்கு கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படுவோர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# காத்தான்குடி வரலாற்றில் முதன்முறையாக 100 பேருக்கு ஒரே மேடையில் இன்று கௌரவம்

## முக்கிய அரச பிரமுகர்கள் பங்கேற்பு

வாரவலம் ஊடக வலையமைப்பு இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி காத்தான்குடி பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் 100 துறைசார் பணியாளர்களுக்கு ஒரே மேடையில் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு, வாரவலம் ஊடக வலையமைப்பின் தலைவரும் வாரவலம் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான கவிமாமணி ரீ. எல். ஜவ்பர்கான் தலைமையில் இன்று 12ஆம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய நிகழ்வில் கௌரவம் பெறுவோர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய வேர்கள் எனும் சிறப்பு மலரும் வாரவலம் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு வெளியீடும் வெளியிடப்படவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பிரதம அதிதியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி றவூப் ஹக்கீம், கௌரவ அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எம் எஸ் எஸ் அமீர்அலி உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கனகசிங்கம் உட்பட பலர் சிறப்பு அதிதிகளாகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். வாரவலம் செய்தி பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு மலரின் முதன்மை பிரதியை பிரபல தொழிலதிபரும் முபாறக்ஸ் டெக்ஸ் குறூப் பிரைவேட் லிமிடெட் தலைவருமான கலாநிதி எம் எஸ் எம் முபாரக் பெற்றுக் கொள்வதுடன் சிறப்பு பிரதியை தொழிலதிபரும் சன்சைன் குறூப் பிரைவேட் லிமிடெட் நிறுவன தலைவருமான எஸ் நந்தகுமாரன் பெற்றுக் கொள்கிறார்.

ஆன்மீக அதிதிகளாக சங்கைக்குரிய பொகவந்தலாக ராகுல தேரர், மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீல மதானந்தாஜி மகராஜ், மட்டக்களப்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமா தலைவர் சங்கைக்குரிய மௌலானா மௌலவி எஸ்.எம். அலியார் பலாஹி, மட்டக்களப்பு அம்பாறை மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மேற்படி விழாவில், ஊடக அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், கெப்பிட்டல் டிவி செய்தி பிரிவு பொறுப்பாளர் எம்.நௌஷாத் முஹைதீன், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன நேத்ரா தமிழ் செய்தி பணிப்பாளர் சி பி எம் சியாம், வசந்தம் தொலைக்காட்சியின் செய்தி முகாமையாளர் எம் சித்திக் ஹனிபா மட்டக்களப்பு மாவட்ட தகவல் அதிகாரி எம். ஜீவானந்தம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளத்தின் தலைவர் மீரா இஸ்ஸதீன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.



தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின்

# உள்ளக செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

**பேருவளை விசேட நிருபர்**



தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கை நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் கடந்த 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பத்தரமுல்லை லக்திய மெதுர நீர் வழங்கல் அமைச்சில் நடைபெற்றது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஆவண நடவடிக்கைகள் மற்றும் உள்ளக செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக டிஜிட்டல் செயற்பாட்டு வலையமைப்பு ஒன்றினை அறிமுகப்படுத்துதல் மற்றும் தேசிய ரீதியில் அந்நடவடிக்கையை மிக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, JICA நிறுவனம் மற்றும் Cyclomax International (Pvt) Ltd ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. EDMS (Electronic Document Management System) என அழைக்கப்படும் இந்த டிஜிட்டல் செயற்பாட்டு வலையமைப்பின் ஊடாக தலைமை அலுவலகத்துடன் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 800 பிரிவுகளுக்கு மேற்பட்ட செயற்பாட்டு நிலையங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், இதுவரை அச்சு ஊடகத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட உள்ளக நடவடிக்கைகள் யாவும் டிஜிட்டல் முறையில் கடதாசி பயன்பாடின்றி நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் நிமித்தம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, JICA மற்றும் Cyclomax International (Pvt) Ltd ஆகிய நிறுவனங்கள் 2023 ஒக்டோபர் மாதத்தில் முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. ஆறு மாத காலப்பகுதியில் உரிய கணினி வலையமைப்பினை தயாரித்து நாடளாவிய ரீதியில் பரந்து விரிந்துள்ள வடிகாலமைப்பு சபையின் சேவை நிலையங்களிலுள்ள 2000 ற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு உரிய பயிற்சியை வழங்கி வலையமைப்பினை இயங்கும் நிலைமைக்கு கொண்டு வர முடிந்துள்ளமையே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வில், அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். நபீல், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க மற்றும் JICA நிறுவனத்தின் பிரதான பிரதிநிதி யாமதா டெஸ்டிதுயா (Yamada Tetsduya), Cyclomax International (Pvt) Ltd வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் திரு. T. பாரதிதாசன் உட்பட அதிகாரிகள் பலரும் பங்குபற்றினர்.

## நகர்வலம்

வசதி குறைந்த மாணவர்களுக்கு

# ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஹம்பாந்தோட்டையில்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் தரம் 01 இலிருந்து 11 வரையிலான வசதி குறைந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. அதன் அடிப்படையில், ஹம்பாந்தோட்டை வலய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று (12) ஹம்பாந்தோட்டை, சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதேச அரசியல் தலைவர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோருடன் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுடன் பெற்றோர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக தற்பொழுது நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலிருந்தும் சகல தரங்களிலும் கல்வி கற்றுவரும் வசதி குறைந்த மாணவர்களுக்கு தடையின்றி கல்வியைத் தொடர்வதற்காக இது பயன்பெறுமென பெற்றோர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர சிவாலயத்தின் தேர்த்திருவிழாவில் கொன்சியூல் ஜெனரல்





டொறன்ரோவில் நேற்று முன்தினம் 10ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சிவாலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவில், டொறன்ரோ இந்து ஆலயத்தின் அழைப்பின் பேரில், கனடாவுக்கான இலங்கையின் கொன்சியூல் ஜெனரல் துஷார ரொட்ரிகோ கலந்துகொண்டார். சிவபெருமான் மற்றும் பார்வதி தேவியின் மீதான இந்துக்களின் ஆழ்ந்த பக்தியின் வெளிப்பாடே இத்திருவிழாவாகும்.

இந்த தேர்த்திருவிழா இலங்கை இந்துக்களின் ஆழமான வேரூன்றிய தனித்துவமான கலாசார விழுமியங்கள், சடங்குகள், நெறிகள், மரபுகள் மற்றும் நடைமுறைகளுடன் அழகாக இணைக்கப்பட்டது. தேர்த்திருவிழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# கொழும்பு லயன்ஸ் கழக 35ஆவது ஒன்றுகூடல்



கொழும்பு லயன்ஸ் கழகம், அதன் 35ஆவது கழக ஒன்றுகூடலை கடந்த 6ஆம் திகதியன்று கொழும்பு 7, லயன்ஸ் செயல்பாட்டு மையத்தில் நடத்தியது.

முதல் துணை மாவட்ட ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்ட லயன் சசிகுமார் (SCA PMJF PMAF) மற்றும் அவரது துணைவியார் அபிராமி சஷிகுமார் (PMJF PMAF) ஆகியோர் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். 2024/2025க்கான கழகத் தலைவராக லயன் ஜே என் புண்ணியலிங்கம் நியமிக்கப்பட்டார்.



மறைந்த தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனின் அஞ்சலிக்கூட்டம் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்து, செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, சிரேஷ்ட உபதலைவர் அசோக்குமார் ஐயம் பிள்ளை, உபதலைவர் ரொபட் நிக்சன், சட்டச்செயலாளர் பவதாரணி ராஜசிங்கம் உட்பட கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## காக்கைதீவு மீன்சந்தையில் பழுந்தடைந்த இறால்கள் மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் காக்கைதீவு மீன் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுந்தடைந்த இறால்களை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காக்கைதீவு சந்தையில் பழுதடைந்த மீன் மற்றும் இறால்கள் விற்பனை செய்யப்படுவதாக ஆனைக்கோட்டை பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தைக்கு சென்று திடீர் சோதனை நடவடிக்கைளை முன்னெடுக்கப்பட்டது.

## வடக்கின் உதயம்



எட்டியாந்தோட்டை பணவில தோட்டத்தில் கடந்த மாதமளவில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. தீ விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன் 5 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. இவர்களுக்கான உணவுப்பொதிகள், மாற்றுஉடைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை லைக்கா ஞானம் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து வழங்கி வைத்தனர். **(படம்:சாவகச்சேரி விசேட நிருபர்)**

ஜனாதிபதியின் திட்டத்துக்கமைய

# வவுனியாவில் மக்கள் சபை தெளிவூட்டல் செயலமர்வு

**வவுனியா விசேட நிருபர்**



ஜனாதிபதியின் திட்டத்துக்கமைய மக்கள் சபை (ஜனசபாவா) யை நிறுவுதல் தொடர்பான செயலமர்வொன்று வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கிராம மட்டத்தில் நிலைபேண் அபிவிருத்தியை, மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கும் பொருட்டு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் மக்கள் சபையை நிறுவுதல் தொடர்பான முன்னோடி செயற்றிட்டத்தை தேசிய மக்கள் சபை செயலகம் முன்னெடுத்துள்ளது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகளுக்கு மக்கள் சபை தொடர்பாக தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாக செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் வவுனியா மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வி.முகுந்தன் மற்றும் கணக்காளர் கே.சிவதர்சன் ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டு தெளிவுப்படுத்தியிருந்தனர்.

அத்துடன், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம மட்ட அமைப்புக்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினரும், ஆசிரியருமான கி.வசந்தரூபன் வளவாளராக கலந்து கொண்டு தெளிவுபடுத்தியிருந்தார்.

# பருத்தித்துறை நகரசபை முன்னாள் தவிசாளர் உயிரிழப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**



யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் தவிசாளர் வேலுப்பிள்ளை நவரத்தினராசா நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது புளியம் பொக்கணைப் வீதியில் அமைக்கப்பட்ட பாதுகாப்பற்ற சமிக்ஞை வீதித்தடையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகிய நிலையில் அவர் கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 4:00 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இவர் பருத்தித்துறை நகரசபையில் இறுதியாக சில மாதங்கள் நகரபிதாவாக கடமையாற்றியிருந்தார்.

## திருமுறிகண்டியில் கோர விபத்து; ஒருவர் உயிரிழப்பு, மூவர் காயம்

**மாங்குளம் குரூப் நிருபர்**

திருமுறிகண்டி பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ9 வீதியில் திருமுறிகண்டிக்கும் கொக்காவில் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெளிநாடு ஒன்றிலிருந்து வருகை தந்தவர்களை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அழைத்து பயணித்துக்கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனமொன்று ஏ 9 வீதியின் 241 ஆவது கிலோமீற்றருக்கும் 242 ஆவது கிலோமீற்றருக்கும் இடைப்பட்ட பகுதியில் முன்னே சென்றுக் கொண்டிருந்த பாரவூர்தி ஒன்றுடன் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

# ஜனாதிபதி செயலகத்தால் 257 அபிவிருத்தி திட்டங்களுக்கு ரூ.47 மில்லியன் நிதி ஒதுக்கீடு

**கோப்பாய் குறூப் நிருபர்**

ஜனாதிபதியின் விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் 257 திட்டங்களுக்கு ஜனாதிபதி செயலகத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கு 11 பிரதேச செயலகப்பிரிவுகளில் 146 திட்டங்களுக்கு ரூ.47 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 14 வேலைத் திட்டங்கள் இதுவரை நிறைவுபெற்றுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு 13 பிரதேச செயலகப்பிரிவுகளில் ரூ.21.45 மில்லியன் நிதி 97 திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 9 வேலைத்திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளன.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு 14 திட்டங்களுக்கு ரூ.25 மில்லியன் நிதி 4 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைத்திட்டங்கள் விரைந்து விரைவாக நிறைவுசெய்யப்படுமென யாழ்.மாவட்ட பதில் மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.





திருகோணமலை ஸ்ரீவிசாலாட்சி சமேத விஸ்வநாத பெருமான் கோயில் பிரமோற்சவ தேர் திருவிழா நேற்று காலை மிகச் சிறப்பாக நடைபெற்றதுடன், இதில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர். படம்: (திருகோணமலை தினகரன் நிருபர்)

# வாழைச்சேனை பிள்ளையார் ஆலய தேரோட்டம்

கிழக்கிலங்கையில் பழைமை வாய்ந்த ஆலயமான வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீகைலாய பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவ பெருவிழாவின் தேரோட்டம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமான தேரோட்டம் வாழைச்சேனை பேச்சியம்மன் ஆலய வீதி, சேர்மன் கனகரெத்தினம் வீதி, பிரதான வீதி, விபுலானந்தர் வீதி மற்றும் கல்குடா வீதி வழியாக ஆலயத்தை சென்றடைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாம்பழ திருவிழா, புதன்கிழமை வேட்டை திருவிழா நடைபெற்று நேற்று தேர் திருவிழா நடைபெற்றது. இன்று வெள்ளிக்கிழமை பாசிக்குடா வங்கக் கடலில் தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுறும்.



உற்சவ பூஜைகள் யாவும் மஹோற்சவ கால பிரதம குரு ஆகம பிரிவினா, பிரதிஸ்டா சாகரம் வாமதேவ சிவாச்சாரியார், ஆர்ச்சார்ய பூஷணம் சிவஸ்ரீ சபா பாஸ்கர குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீகைலாய பிள்ளையார் ஆலயம் சிறந்த வரலாற்றை கொண்ட ஆலயமாகும். இங்குள்ள மூல விக்கிரகம் கைலாய மலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கற்களால் உருவாக்கப்பட்டதாகும். (ந.குகதர்சன்)

# அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களுக்கு செயலமர்வு

**கிண்ணியா தினகரன் நிருபர்**



திருகோணமலை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான செயலமர்வு அண்மையில் நடைபெற்றது.

கிண்ணியா மத்திய கல்லூரி கேட்போர் கூடம் மற்றும் கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இச்செயலமர்வு நடைபெற்றது.

இதில் 200 அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன், அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளன பிரதிநிதிகளுடன் முஸ்லிம் கலாசார திணைக்கள பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருகோணமலை அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளன தலைவர் அஷ்ஷெய்க் எம்.வை.எம்.ஹதிய்யதுல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் தேசிய அஹதிய்யா சம்மேளனத் தலைவர் அல்ஹாஜ் எம்.ஆர்.எம்.சறூக் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

# கதிர்காம யாத்திரிகர்களுக்கு இலவச மருத்துவ முகாம்



**ஒலுவில் விசேட நிருபர்**

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து கடந்த திங்கட்கிழமை இலவச மருத்துவ முகாம்களை நடத்தின.

உகந்தை மற்றும் குமண இடங்களில் இம்மருத்துவ முகாம்கள் நடைபெற்றன.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற இம்மருத்துவ முகாமில் 1,000 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், ஆயுர்வேத மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இம்மருத்துவ முகாமில் ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு தமது சேவையை வழங்கினர்.

இதன்போது 2,000 பாத யாத்திரிகர்களுக்கு தாக சாந்திக்கான குளிர்பானமும் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைய கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர், சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரின் அறிவுறுத்தலின் கீழ் இம்மருத்துவ சேவை வழங்கப்பட்டது.

# அட்டாளைச்சேனையில் காணி பிரச்சினைகளுக்கு நடமாடும் சேவை

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரதான கேட்போர் கூடத்தில் காணி பிரச்சினைகளுக்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நாடு முழுவதும் 20 இலட்சம் பூரண அளிப்பு பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவையே அட்டாளைச்சேனையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவைக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.டி.எம்.இர்பான் தலைமை தாங்கியதுடன், அவர் வருகை தந்த பொதுமக்களுக்கு பூரண அளிப்பு தொடர்பான முழுமையான விழிப்புணர்வையும் வழங்கினார்.



இதனைத் தொடர்ந்து நடமாடும் சேவையில் கலந்துகொண்ட பயனாளிகளின் பொருத்தமான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதற்கான துரித வேலைத்திட்டம் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடமாடும் சேவையில் காணி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.ரியாத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜே.தேவானந்தன் மற்றும் காணிப் பிரிவு உத்தியோகத்தர்களாகிய பலரும் கலந்து கொண்டு பொது மக்களுக்கு தமது சேவையை வழங்கினர்.

# உயரம் பாய்தலில் முதலாமிடம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவன் சாம்பசிவம் சுஜேஸ் முதலிடம் பெற்றுள்ளார்.

14 வயது ஆண்களுக்கான உயரம் பாய்தலில் இம்மாணவன், வலய மட்டத்தில் முதலாமிடம் பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவாகியுள்ளார். இவர் கடந்த 2023ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மாகாண மட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில் பரீட்சையில்

# சித்தியடைந்த மாணவருக்கு நினைவுச்சின்னம் அன்பளிப்பு

**மருதமுனை தினகரன் விசேட நிருபர்**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி நினைவுச்சின்னங்களும் காசோலைகளும் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய திட்டத்தில் 2023ஆம் ஆண்டு இணைந்து கொண்டவர்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவர்களுக்கு இவை வழங்கி வைக்கப்பட்டன.



ஓய்வூதிய திட்டத்தில் 5,000 ரூபா பெறுமதியான காசோலை மற்றும் நினைவுச்சின்னம் ஆகியன இம்மாணவர்களுக்கு நிந்தவூர் பிரதேச செயலக செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப்பின் தலைமையில் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

# பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் கல்வி வலயத்திலுள்ள மூன்று பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நூலகங்களுக்கு இலவசமாக நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

கந்தளாய் அல் தாரிக் கல்லூரி நூலகத்துக்கான நூல்கள் அக்கல்லூரி அதிபர் எம்.ஏ.முஹம்மட் கியாஸிடமும் பேராறு பரமேஸ்வரா கல்லூரி நூலகத்துக்கான நூல்கள் அதிபர் என்.சதீஷ்குமாரிடமும் அக்ரபோதி தேசிய பாடசாலை நூலகத்துக்கான நூல்கள் பிரதி அதிபர் ஆர்.ஜி.அமித் சாந்தாவிடமும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்ற தலைவர் அமதோரு அமரஜீவ, செயலாளர் மனு சங்க காரியவசம், எம்.எச்.யூசுப், ஏ.எஸ்.எம்.தானிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாணவர்களின் நன்மை கருதி ஆய்வுகூட உபகரணம் வழங்கல்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று ஸாஹிறா வித்தியாலயத்துக்கு ஆய்வுகூட உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை பிரதி ஆணையாளர் டொக்டர் எம்.ஏ.நபீலால் இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது நுணுக்குக்காட்டி உட்பட விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் விசேட கல்விப் பிரிவு மாணவர்களின் ஆரோக்கியத்தை கருத்திற்கொண்டு நிறை போசனை பிஸ்கட்டுகளும் மேற்படி பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸிடம் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், வைத்திய அதிகாரிகள், சுகாதார துறையினர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர்களுக்கு மாணவர் நன்றி கூறும் பெருவிழா



**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றி கடந்த 2022ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், தமக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் அக்கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களை பாராட்டி கௌரவித்தனர்.

இம்மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சாதனையாளர்களை கௌரவித்தல்' வரலாற்று முக்கியத்துவம் மிக்க விழா கடந்த சனிக்கிழமை அக்கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ.றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

பற்றிமா கல்லூரியின் பழைய மாணவியும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் அக்கல்லூரியின் பழைய மாணவர்களான டொக்டர் மஹாலிங்கம் லட்சியன், பொறியியலாளர் எம்.கிரிதரன், சட்டத்தரணி ரவீந்திரன் சுஜீதா ஆகியோர் நட்சத்திர அதிதிகளாக கலந்து கொண்டனர். கல்லூரி பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளென பெருந்திரளானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்பித்த மற்றும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அதிதிகளால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை இம்மாணவர்களும் அதிதிகளால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# பதில் பிரதேச செயலாளராக கடமை பொறுப்பேற்பு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

பொத்துவில் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக எம்.எம்.ஆஷிக் நேற்று முன்தினம் புதன்கிழமை பொத்துவில் பிரதேச செயலகத்தில் தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொத்துவில் பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில், உதவி பிரதேச செயலாளர் எம்.ராமக்குட்டி, உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் ஏற்பாட்டில்

# களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு மூன்று மாடி கட்டடம்

## அடிக்கல் நாட்டு விழாவில் மேல் மாகான ஆளுநர் பங்கேற்பு

**(பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)**

களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் நீண்டகால தேவையாக இருந்த மூன்று மாடிக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழா புதன்கிழமை (10) கல்லூரி அதிபர் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியின் ஏற்பாட்டில் இந்தக் கட்டட தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, மேல் மாகாண ஆளுநர் ஏயார்வைஸ் மார்ஷல் ரொஷான் குணதிலக்க, கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க, பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

மேற்படி கட்டட தொகுதி கேட்போர்கூடம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடம் என்பவற்றை உள்ளடக்கிய மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியாக அமையவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# அமைச்சர் பந்துல குணவர்த்தன பேருவளை தொகுதிக்கு விஜயம்

## வீதி திறப்பு விழாவிலும் பங்கேற்பு





போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன எதிர்வரும் 21ஆம் திகதி பேருவளை தேர்தல் தொகுதிக்கு விஜயம் செய்கிறார். பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் அழைப்பில் பேருவளை தொகுதிக்கு விஜயம் செய்யும் அமைச்சருக்கு பிரதேச மக்களால் மகத்தான வரவேற்பளிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் பேருவளை பிரதேச சபை, நகர சபை பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் வேண்டுகோளில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ள 06க்கும் மேற்பட்ட காபட் வீதிகளை பொதுமக்கள் பாவனைக்காக அமைச்சர் திறந்து வைக்கவுள்ளார். மேலும் பல அபிவிருத்தி திட்டங்களையும் பேருவளை தொகுதியில் ஆரம்பித்து வைக்கவுள்ளதோடு பேருவளை நகர சபை, பிரதேச சபை பகுதிகளின் முக்கிய தேவைகள் குறித்தும் பொதுமக்களுடன் விசேட சந்திப்புகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் மர்ஜான் பளீல் எம்.பி மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு ஆனந்தா கல்லூரி பழைய மாணவர் அமைப்பின் 'ஆனந்தா நடை பவனி 2024'



**ருஸைக் பாரூக்**

கொழும்பு, ஆனந்தா கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த 'ஆனந்தா நடை பவனி 2024' அணிவகுப்பு 'இலங்கை தாய்க்கு சேவை செய்ய கல்வி மற்றும் அதிகாரம் கொடுங்கள்' என்ற தொனிப்பொருளில் கல்லூரியின் அதிபர் டி.எம்.எல்.பி. திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

ஆனந்தா நடை பவனி 2024 என்பது பழைய மாணவர்கள் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் நிதி திரட்டும் நிகழ்வாகும். ஆனந்தா நடை பயணம் ஆனந்த கல்லூரி வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி விஹார மஹாதேவி பூங்காவின் திறந்தவெளி அரங்கு சென்றடைந்தது. வண்ணமயமான மிதவைகள் மற்றும் கவர்ச்சியான கார்களுடன் மேலே பறந்து செல்லும் இலங்கை விமானப் படை ஹெலிகொப்டர்கள் அணிவகுத்து மரியாதை செலுத்தியது.




பாதுகாப்பு செயலாளர் ஜி.டி.எச். ஜெனரல் கமல் குணரத்ன, முன்னாள் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய, பழைய மாணவர் சங்க தலைவர் பேராசிரியர் அதுல களுஆராச்சி, இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உட்பட பெருமளவிலான பழைய மாணவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

# "ஆஷூரா முபாரகா 2024" பிரசங்க நிகழ்வுகள் தலைநகர் கொழும்பில்

## 15,000 தாவூதி போரா சமூகத்தினர் இலங்கை வருகை

தாவூதி போரா சமூகத்தின் 2024ஆம் ஆண்டுக்கான ஆஷூரா முபாரகா நிகழ்வுகள் பாகிஸ்தானின் கராச்சியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த நிகழ்வின் ஒளிபரப்பு மத்திய நிலையமாக கொழும்பில் அமைந்துள்ள போரா நிலையம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



தொடர்ச்சியாக 10 நாட்களுக்கு பல்வேறு தொனிப்பொருளின் கீழ் நடைபெறவுள்ள இந்த ஆன்மீக பிரசங்க நிகழ்வுக்கு உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு போரா சமூக நிலையங்களும் தங்களது ஆன்மீக பிரசங்க நிகழ்வுகளுடன் இணைந்து கொண்டாடுகின்றனர்.

இதில் மிகப்பெரிய ஆன்மீக பிரசங்க நிகழ்வு உலகளாவிய தாவூதி போரா சமூகத்தின் தலைவரான சங்கைக்குரிய சையத்னா முஃபத்தல் சைபுதீன் (Holiness Syedna Mufaddal Saifuddin) அவர்களது தலைமையில் நடைபெறவுள்ளது. தாவூதி போரா சமூக முன்னோர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி, சையத்னா சைஃபுதீன் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் ஆஷூரா முபாரகா நிகழ்வை நடத்துவதற்கான இடத்தை தெரிவு செய்வார்.

கொழும்பில் நடைபெறுகின்ற போரா ஆன்மீக மாநாடு தொடர்பில் அதன் திட்ட முகாமைத்துவக்குழு உறுப்பினர் Mufaddal Zainuddin கருத்து தெரிவிக்கையில், "ஆஷூரா முபாரகா சொற்பொழிவுகளில் கலந்துகொள்ள உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் எங்கள் நாட்டுக்கு வருகைதந்துள்ள அனைத்து தாவூதி போரா விருந்தினர்களையும் நாங்கள் முழுமனதுடன் வரவேற்கிறோம்.

இந்த ஆண்டுக்கான ஆஷூரா முபாரகா சபைகளை நடத்துவதற்கான வரவேற்பு நகரமாக பாகிஸ்தானின் கராச்சியை தாவூதி போரா சமூகத்தின் தலைவரான சையித் முஃபத்தல் சைபுதீன் தேர்வு செய்துள்ளார். எவ்வாறாயினும், ஆஷூரா முபாரகா பிரசங்க நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்புக்கான மத்திய நிலையமாக கொழும்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எங்களுக்கு கிடைத்த அதிர்ஷ்டம். அத்துடன், இந்த நிகழ்விற்காக 15,000க்கும் மேற்பட்ட தாவூதி போரா விருந்தினர்களை வரவேற்க மிகப்பெரிய ஆதரவும் அனுமதியும் வழங்கிய அரசாங்க அதிகாரிகள் மற்றும் உள்ளூர் அமைப்புகளுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின்

# காத்திரமான உதவிகளுக்கு மக்கள் காங்கிரஸ் பாராட்டு



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்களை ஆராய்வது தொடர்பில், மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு இடையில் (10) இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது, கடினமான காலங்களில் இந்தியா இலங்கைக்கு செய்த உதவிகளுக்காக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் தமது நன்றிகளை தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அமைத்துக்கொடுத்த 50,000 வீடுகள் மற்றும் மலையகத்துக்கு வழங்கிய 10,000 வீடுகள் தொடர்பிலும் இங்கு பிரஸ்தாபித்த ரிஷாட், இதுவரை எந்தவொரு நாடும் இவ்வாறான உதவிகளை செய்திருக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், அயல்நாடான இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்திய அவர், நெருக்கடியான காலங்களின் போது இலங்கைக்கு வழங்கிய மனிதாபிமான உதவிகள் போன்று, இனியும் உதவ வேண்டியதன் கடப்பாட்டையும் எடுத்துரைத்தார்.

அதேபோன்று, வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக இரண்டு நாடுகளின் மீனவர்களுக்கு இடையில் ஏற்பட்டு வரும் சர்ச்சைகள் குறித்து சுட்டிக்காட்டிய அவர், இலங்கை கடல் வளத்தை இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் வகைதொகையின்றி அள்ளிச் செல்வதன் பாதிப்புகள் குறித்தும் தமது கவலையை வெளியிட்டார். எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவர எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பிலும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, இலங்கையின் அனைத்து மாவட்டப் பாடசாலைகளின் மேம்பாட்டுக்காகவும் இந்தியா பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இற்றைவரை 200 மில்லியன் டொலர் வரையிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமைய சுட்டிக்காட்டிய ரிஷாட், இது தொடர்பில், தமது கட்சியின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

# சட்டவிரோத பறவைகள், விலங்குகளுடன் கடற்படையினரால் ஐவர் கைது

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



சட்டவிரோதமான முறையில் பறவைகள் மற்றும் ஊர்வனவற்றை மீன்பிடி இழுவைப் படகு மூலம் கடல் வழியாக எடுத்துச் சென்ற சந்தேக நபர்கள் ஐவர் தென்கடல் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் 34 முதல் 67 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், இவர்கள் கொச்சிக்கடை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த விஷேட தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த இழுவை மீன்பிடி படகினை சோதனைக்கு உட்படுத்திய போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 13 மலைப்பாம்புகள், உடும்பு ஒன்று, ஆமை ஒன்று மற்றும் மூன்று கிளிகள் என்பன மிகவும் பாதுகாப்பான முறையில் கொண்டுவரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்போது, குறித்த குறித்த மீன்பிடி இழுவை படகில் பயணித்த ஐவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர்கள் எடுத்து வந்த ஊர்வன மற்றும் பறவைகள் என்பனவற்றை பறிமுதல் செய்த கடற்படையினர் சந்தேக நபர்கள் பயணித்த இழுவை மீன்பிடி படகினையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், சட்டவிரோதமாக இழுவை மீன்பிடி படகில் கொண்டு வரப்பட்ட விலங்குகளை பரிசோதித்த வனவிலங்கு பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், குறித்த விலங்குகள் இலங்கைக்கு சொந்தமனவை அல்ல என உறுதிப்படுத்தியுள்ளனர்.

# பண்ணிசை சான்றிதழ் கற்கை நெறி விண்ணப்பம் கோரல்

**(கோப்பாய் குறுப் நிருபர்)**

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துக் கற்கைகள் நிறுவகத்தின், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையத்தின் ஊடாக முன்னெடுக்கும் பண்ணிசை சான்றிதழ் கற்கை நெறியின் இணைய வழிக் கற்கைநெறி மூன்றாம் அணிப்பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது வாட்ஸப் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பிராந்திய அலுவலகம், 'குருகுலம்' ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு 0776776249 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்புகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தென்னை பயிர்ச்செய்கைக்கு

# பாதிப்பை ஏற்படுத்தும் 'வெள்ளை ஈ' தாக்கம்

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

தென்னை பயிர்ச்செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வெள்ளை 'ஈ' யின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக அவற்றை வேட்டையாடும் இனம் ஒன்று விடுவிக்கப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்காமல் உயிரியல் ரீதியாக கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

அநுராதபுரம் மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளான சாலியபுர, மிகிந்தலை, ஹிதோகம, மக இலுப்பல்லம ஆகிய பிரிவுகளில் வெண்ணிற ஈயை வேட்டையாடுபவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது வெள்ளை ஈ பெருகுவதை அழிக்கிறது என்றும் வேட்டையாடுபவர்கள் சுமார் ஒரு மாத காலத்தில் பெருகும் தன்மையை கொண்டுள்ளனர் என்றும், இதன் காரணமாக, மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமான நிலையை எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை ஈ பாதிப்பு காரணமாக மேற்படி மாவட்டத்தில் சுமார் 30% வரை விளைச்சல் குறைந்துள்ளதால் இதற்குரிய பரிகாரமாக வேட்டையாடும் " என்கார்சியா குவாடலூபே, கனோருவா பெலாட்டி" என்ற இனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றி தோல்விக்கு ஏற்ப, மாவட்டம் முழுவதும் இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேட்டையாடும் உயிரணுக்கள் மற்றும் வேட்டையாடும் செல்கள் விடுவிக்கப்பட்டு, வெள்ளை ஈ சேதம் குறித்தும் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டதோடு, இதில் 50க்கும் மேற்பட்ட தென்னந்தோப்பு உரிமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விசேட அறிவித்தல்

### மக்கள் வங்கி ஓய்வூதியச் சங்கம்

**35ம் வருட மகாசபைக் கூட்டம் - 2024.07.30**

மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் 35 ஆம் வருட மகாசபைக் கூட்டம் 2024 ஜூலை 30 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 இற்கு சுகததாச உள்ளக விளையாட்டரங்கு வளாகத்தில் பிரதான மண்டபத்தில் நடைபெறுமென இத்தால் அறிவித்துக்கொள்கின்றோம்.

தற்போது காணப்படும் தபால் வேலைநிறுத்தம் காரணமாக இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுவதுடன் , கூட்டத்திற்கு அழைக்கும் அறிவித்தல் சகல அங்கத்தவர்களுக்கு தபாலிடப்பட்டுள்ளதாகவும் அறிவித்துக்கொள்கின்றோம்.

**தமித்த லீலாரத்ன,**
**பொதுச் செயலாளர்**

**சீ. ரணதீர**
**தலைவர்**

**2024.07.10**

**மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம்**
**இல. 21, நவம் மாவத்த,**
**கொழும்பு - 02**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**குறிப்பு இல : 4/1/Acquisition/Electricity Cable/111**

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/7/2020/ஏச்டபிள்யூ/292**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 29 பெப்ரவரி 2024 ஆம் திகதிய 2373/35 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : வடமேல் மாகாணம் |
| மாவட்டம் | : குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : மல்லவபிட்டிய |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 717, பள்ளேகற்றுவன |
| கிராமத்தின் பெயர் | : பள்ளேகற்றுவன |
| வரைபட இல. | : கடஸ்ரல் வடைபட இல. 420206, வலய இல.07, தாள் இல.02 |
| துண்டு இல. | : 01 |
| விஸ்தீரணம் | : 0.0196 ஹெக்டயார் |

**டபிள்யூ.பீ.சி.என். பத்திரண,**
**பிரதேச செயலாளர் மற்றும்**
**சுவீகரித்தல் அதிகாரி,**
**மல்லவபிட்டிய,**

**பிரதேச செயலகம்,**
**மல்லவபிட்டிய.**
**திகதி - 14.06.2024.**

## இலங்கை புகையிரத சேவைகள்

### பெறுகை அறிவித்தல்

**12 எண்ணிக்கையான 1 in 12 CMS V Crossing of EN 45 E1 Rail Section வழங்குவதற்கான பெறுகை**

SRS/F.7973

இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்) தலைவர், **12 எண்ணிக்கையான 1 in 12 CMS V Crossing of EN 45 E1 Rail Section** வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் தங்களது விலைமனுக்களை அற்றோனித் தத்துவ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம்.

02. 2024-09-06ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும்.

03. 10,700.00 ரூபா (பத்தாயிரத்த எழுநூறு ரூபா) அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2024-09-05ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் (இலங்கை நேரம்) இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. விலைமனுதாரர்கள் 420,000.00 ரூபா அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணய தொகைக்கான பிணை முறியை அவர்களின் விலைக்கோரலின் ஒரு பகுதியாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. இலங்கை, இலங்கை புகையிரத சேவைகளின் (பெறுகைகள்) பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கோரப்படுகிறார்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ கீழ்க் குறிப்பிடப்பட்டவருக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு, (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10,**
**இலங்கை.**

07. விலைமனு ஆவணங்களை இலங்கை புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தொடர்புகொள்ளவும்:
தொலைபேசி: 94(11)2438078, 94(11)2436818 அல்லது 0114600209
தொலைநகல்: 94(11)2432044
மின்னஞ்சல்: srs.slr@gmail.com / tender2@railway.gov.lk
இணையதளம்: www.railway.gov.lk

**Ref. No. SRS/F.7973**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்)**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

## கேள்வி அறிவித்தல்

### தேசிய வைத்தியசாலை – கண்டி

கண்டி தேசிய வைத்தியசாலையில் பின்வரும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. 2024-07-12ஆம் திகதி மு.ப. 09.00 மணி முதல் 2024-08-01ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 4000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் கேள்வி ஆவணங்களை வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இரு நகல்களில் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-08-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் தலைமை கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்யலாம். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விகள் 2024-08-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் ஒப்பந்தக்காரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ் (PCA 3) கட்டாயமாகும்.

| | வேலைகள் | அடிப்படை மதிப்பீட்டுச் செலவு (மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தகைமை | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை முறித் தொகை ரூபா | கால எல்லை |
| 01 | Repairing of Main Kitchen at NTS | 0.84 | 60 நாட்கள் | C 9/C8 | 15,000.00 | 2024.10.17 |
| 02 | Construction of Retaining wall at Hanthana Nurses Quarters | 2.42 | 90 நாட்கள் | C 8/C7 | 43,500.00 | 2024.10.31 |
| 03 | Repairing of Roof In Wash Room Area At Ward No 11/12 | 0.40 | 30 நாட்கள் | C 9/C8 | 7,200.00 | 2024.10.17 |
| 04 | Repairing & Colour washing Of Cardiology Building | 10.99 | 90 நாட்கள் | C 6/C5 | 192,500.00 | 2024.11.14 |
| 05 | Renovation Of Hanthana Doctors Quarters No 01 | 10.94 | 90 நாட்கள் | C 6/C5 | 191,500.00 | 2024.11.14 |
| 06 | Repairing & Colour Washing Of Suwapiyasa Auditorium | 0.74 | 45 நாட்கள் | C 9/C8 | 13,000.00 | 2024.10.17 |
| 07 | Repairing Staircase & Colour Washing Of Paying Ward, Ward 29 Access Area | 0.88 | 60 நாட்கள் | C 9/C8 | 15,500.00 | 2024.10.17 |
| 08 | Repairing Of NTS Principal's Quarters | 0.97 | 45 நாட்கள் | C 9/C8 | 17,000.00 | 2024.10.17 |
| 09 | Repairing Roof Gutters At Main Nurses Quarters | 1.39 | 45 நாட்கள் | C 9/C8 | 24,500.00 | 2024.10.17 |
| 10 | Renovation Of Cardiology X-Ray Unit | 1.92 | 90 நாட்கள் | C 9/C8 | 34,000.00 | 2024.10.17 |
| 11 | Renovation Of Hanthana Doctors Quarters No 02 | 9.65 | 90 நாட்கள் | C 7/C6 | 169,000.00 | 2024.11.14 |

கேள்விப் படிவத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை,கண்டி.**

The Trusted Market place
for Buying & Selling



adz.lk
it's what you want

It's Simple & Fast
POST YOUR AD
1. Visit www.adz.lk
2. Log In/ Register
3. Select Category
4. Enter Details
5. Upload Photos
6. Pay
7. Publish




Visit www.adz.lk

WE ACCEPT

Contact Us:-
- 011 2 429 369 | - 077 7 270 067
- 077 7 270 845 | - adzsuo@lakehouse.lk

## சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்

வேலைவாய்ப்பு

**128**

**டயர்கள், டியூப்புகள்**
**விற்பனைக்கு**

டயர் டியூப் - வெளிநாட்டிலிருந்து டயர் தருவிப்போர் - JCB, மோட்டர் கிரேடர், பெகோ, போக்லிப்ட், செலினிட்டர் - 600 x 9 - 700 x 12 ஆர்பிடெக் டயர் நிரப்பும் போது தேவைப்படும். 700 x 1670 - 16 x 100 x 20 பஸ் உரிமையாளர்களுக்கு விசேட விலை 135, கிரவுன் டயர், கொழும்பு - 14. 077 - 3134060 044401

**312**

**வெற்றிடங்கள்**
**தொழில் நுட்பம்**

சுத்திகரிப்பு ஆண்/ பெண் ஊழியர் வெற்றிடங்கள். 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் இலவசம். சீருடை இலவசம். கவர்ச்சியான சம்பளத்துடன் மேலதிக நேர கொடுப்பனவுகள். சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் வேலைகள் பற்றிய அனுபவம் மற்றும் கடும் நம்பிக்கை, ஆர்வம் உள்ள உங்களுக்கு கல்வித் தகைமைகள் முக்கியமில்லை. அழையுங்கள் தொ.பே. இலக்கம் - 0766845349. (நாட்டின் எப்பாகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.) 046170

**Repeat Your Ad For Better Offers**

OBSERVER adz | வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

Gampaha - 033 22 23 464
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

Wattala - 011 2 937 989
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

Nilpanagoda - 077 8 627 321
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

Wattala - 011 2 932 511
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

Kochchikade - 031 22 78 359
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

Batuwatta - 071 8 921 271
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

Dunagaha - 077 3 517 752
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

Ja-Ela - 011 2 947 379
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

Negombo - 071 480 43 55
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

Katunayake - 077 4 115 998
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

Kandana - 011 2 233 651
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

Minuwangoda - 011 2 297 881
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

Katana - 031 2 241 687
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

Ja-Ela - 071 8 571 713
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

Kotugda - 011 2 290 815
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

Sunday Observer adz | தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**வீதி பராமரிப்பிற்காக வேலைகளை சமர்ப்பிப்பதற்காக**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**(IFB No.: RDA/EE/MO/2024/01)**

மேலேயுள்ள IFB இலக்கத்தின் கீழ் வீதி பராமரிப்பு வேலைக்காக (01) தொழிலாளர் வழங்கல் (2) Back-hoe Loader வழங்கல் ஆகியவற்றிற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக பிபிலை நிறைவேற்று பொறியியலாளரின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.07.12 ஆம் திகதியிலிருந்து 2024.07.29 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ இன் இணைய பக்கத்தை பார்வையிடும்படி அல்லது 0552265427 என்ற இலக்கத்தினூடாக அழைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**நிறைவேற்று பொறியியலாளர் (பிபிலை)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**



## பகிரங்க தங்க நகை ஏலவிற்பனை

ராகல/ வலபனே/ கீர்த்திபண்டாரபுர/ முங்வத்த/ மத்துரட்ட/ ஹைபொரஸ்ட/ மஹகுருகல/ எமஸ்ட/ உடபுஸல்லாவ/ தெரிபெஹெ/ நில்தண்டாஹின்ன ஆகிய கிராமிய வங்கிகளில் 2022.05.01 முதல் 2023.05.31 வரை அடகு வைக்கப்பட்டு, இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் 2024.07.27 மற்றும் 28ம் திகதிகளில் வ/ப - நவவலபனே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையக கூட்ட மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**

**தொ.பே.இலக்கம் : 052 - 2279205**
**052 - 2279638**


**1964 இலக்கம் 28 கொண்ட காணி கையகப்படுத்தும் (திருத்தங்கள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு காணி கையகப்படுத்தும் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.**

குறிப்பு இலக்கம் : WAB/LND/09/03

இங்கு பின்வரும் அட்டவணையில் விவரம் கொண்ட காணியை அரசாங்கத்திற்கு கையகப்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கப்படும். மேலதிக விபரங்களுக்காக இலக்கம்.2383/08 கொண்ட 2024/05/06 திகதியிட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | காலி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | வந்துரம்ப |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | இலக்கம் 190, பன்வில |
| வரைப்பட இலக்கம் | : | கா.அ.ப.இல.810457 வலய இலக்கம் 07 தாள் இலக்கம் 01 |
| துண்டு இலக்கம் | : | 01 |
| காணியின் அளவு | : | 0.0479 ஹெக்டயார் |
| காணி அமைந்துள்ள ஊர் | : | வந்துரம்ப |
| காணியின் பெயர் | : | பன்விலஹேன இல்லாவிடில் ஹேனகந்தவத்த |

**நிஹாரா மெலனி வெத்தசிங்ஹ**
**பிரதேச செயலாளர்**
**வந்துரம்ப.**

முகவரி :- பிரதேச செயலகம், வந்துரம்ப, காலி

திகதி :- 2024.07.04


The Housewives' companion
Classifieds on
Daily News


NSB

# தேசிய சேமிப்பு வங்கி

## மீட்கப்படாத அடகுப்பொருள் ஏலவிற்பனை : 2024 ஜூலை மற்றும் ஆகஸ்ட்

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 2023 மே 31 ஆம் திகதி வரை (அத்தினம் அடங்கலாக) அடகு வைக்கப்பட்டு ஆனால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களுக்கு முன் மீட்கப்படாத மற்றும் அடகினைப் புதுப்பித்துக் கொள்ளப்படாத தங்க ஆபரணங்களை பின்வரும் தினங்களில் குறித்த ஏலவிற்பனை நிலையங்களில் காலை 09.00 மணி முதல் ஏலத்தில் விடப்படும்.

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.07.25 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.07.27**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 30, பார்க் வீதி, பண்டாரவளை | பண்டாரவளை |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88, கொடுக்கொடல்லை வீதி, கண்டி | கண்டி, முள்கம்பளை, கண்டி அஞ்சல் கிளை, கண்டி 2ம் கிளை, கண்டி சிட்டி சென்டர், ரிகில்லகஸ்கட, கடுகஸ்தோட்ட, அலவத்துகொட, கலகெதர, திகன, வத்தேகம |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 32, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி | நாவலப்பிட்டி, கினிகத்ஹேன |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, லோவர் கிங் வீதி, பதுளை | பதுளை, ஹாலிஎல, பஸ்ஸர, வெலிமட |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 26, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை | மாத்தறை, கெகனதுரை, வெலிகம, மாத்தறை 2ம் கிளை, திக்வெல்ல, தெவிநுவர |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52, ஹொரண வீதி, பாணந்துறை | பாணந்துறை, வாத்துவ, பண்டாரகம, களுத்துறை, அலுத்கம, பேருவளை, மத்துகம, களுத்துறை 2ம் கிளை, ஹொரண, இங்கிரிய, கிரிஎல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 130, ப்ரன்ட் வீதி, கொழும்பு - 11 | புறக்கோட்டை கிளை, மாளிகாவத்த, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், சிட்டி பிளஸ், நாரஹேன்பிட்டி, வெல்லம்பிட்டிய, முல்லேரியா, பொரள்ள |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி | இரத்தினபுரி, குருவிட்ட, நிவித்திகலை |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88/88A, கினிகத்ஹேன வீதி, யட்டியாந்தோட்டை | யட்டியாந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய, தெரணியக்கல |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 98, கம்பஹா வீதி, கிரிந்திவெல | கிரிந்திவெல, பூகொட, வெலிவேரிய |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, அமரதுங்க கட்டிடம், டி. எஸ். சேனநாயக்க வீதி, அம்பாறை | அம்பாறை, அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை, தம்பிலுவில், அம்பாறை 2ம் கிளை, உஹன |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 139, வெல்லவாய வீதி, மொனராகல | மொனராகல, பிபிலை, புத்தள, சியம்பலாண்டுவ, படல்கும்புர வெல்லவாய |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, புகையிரத நிலையம் முன், A9 வீதி, கொடிகாமம் | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, பி.டப்ளியூ.டி. வீதி, முல்லைத்தீவு | முல்லைத்தீவு, மல்லாவி |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 15, கொழும்பு வீதி, வென்னப்புவ | வென்னப்புவ, மாரவில, தன்கொட்டுவ, நாத்தாண்டிய |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 21, மரதன்கடவெல வீதி, கெக்கிராவ | கெக்கிராவ, கலென்பிதுனுவெவ, கல்னேவ |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 93, இரத்தினபுர வீதி, பதுரலிய | பதுரலிய, புலத்சின்ஹல, கலவான |
| 18 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | களுபோவில, தெல்கந்த, பொரலஸ்கமுவ, நுகேகொட, பிட்டக்கோட்ட, நாவல, கிருலப்பென நகர கிளை, உலக வர்த்தக மைய கிளை, ராஜகிரிய |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.07.25 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.07.28**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 445, மாத்தளை வீதி, தம்புல்ல | தம்புல்ல, நாஉல, கலேவெல |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 341, கொழும்பு வீதி, பேராதெனிய | பேராதெனிய, பிலிமதலாவ, தெல்தோட்ட |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 24, பார்க் வீதி, நுவரெலியா | நுவரெலியா, றாகல |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 96, டி.சி. வணிகசேகர மாவத்தை, அக்குரஸ்ஸ | அக்குரஸ்ஸ, மொரவக்க, கம்புருபிட்டிய, தெனியாய, நெலுவ |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 379, கண்டி வீதி, கேகாலை | கேகாலை, வரக்காப்பொல, ரம்புக்கன, கேகாலை 2ம் கிளை |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, கண்டி வீதி, மாவனல்ல | மாவனல்ல, அரநாயக்க |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 342, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல | மொரட்டுமுல்ல, கட்டுபெத்த, புவக்கரம்ப, பிலியந்தல, பிலியந்தல 2ம் கிளை, கஹத்துடுவ |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 430/10, இஹல கரகஹமுன, கண்டி வீதி, கடவத்த | கடவத்த, கிரிபத்கொட, களனி, ராகம, கனேமுல்ல, மாகொல, கடுவெல, தெல்கொட |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய கடைத்தொகுதி, நிட்டம்புவ | நிட்டம்புவ, வெயாங்கொட, மீரிகம |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 116, 116A பஸார் வீதி, மட்டக்களப்பு | மட்டக்களப்பு, ஆரயம்பதி, செங்கலடி, வாழைச்சேனை |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 292, மட்டக்களப்பு வீதி, பலகைமோல் சந்தி, கதுருவெல | கதுருவெல, ஹிங்குராங்கொட, மெதிரிகிரிய |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 136, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, இன்னர் சேர்குளர் வீதி, வவுனியா | வவுனியா |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 14, கண்டி வீதி, குருணாகல் | குருணாகல், மெல்சிரிபுர, ரிதீகம, பொல்பித்திகம, மாவத்தகம, இப்பாகமுவ, குருணாகல் 2ம் கிளை |

| | | |
|---|---|---|
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 591/1, புதிய நகரம், அநுராதபுரம் | அநுராதபுரம், நொச்சியாகம, அநுராதபுரம் 2ம் கிளை, எப்பாவல |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | கல்கிஸ்ஸ, தெஹிவளை, கொள்ளுப்பிட்டி 2ம் கிளை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்த தலைமை அலுவலகக் கிளை, மொரட்டுவ |
| 17 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, ஹைலெவல் வீதி, ஹோமாகம | ஹோமாகம, மீகொடை, கொட்டாவ, மஹரகம, பத்தரமுல்ல, அத்துருகிரிய, தலவத்துக்கொட, மாலபே, ஹன்வெல்ல |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.08.01 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.08.03**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 3/5 டி.பி. பானபொக்க வீதி, கம்பொள | கம்பொள, கெலிஓயா, புஸ்ஸல்லாவ |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 114, நுவரெலியா வீதி, தலவாக்கல | தலவாக்கல, பூண்டுலோயா, ஹட்டன் |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 20, கொழும்பு வீதி, கலுவெல்ல வீதி, காலி | காலி, காலி 2ம் கிளை, உடுகம, பத்தேகம, கராப்பிட்டிய, ஹிக்கடுவ, ஹபராதுவ, இமதுவ, யக்கலமுல்ல, அஹங்கம |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 4, வந்துரப்ப வீதி, அம்பலாந்தோட்ட | அம்பலாந்தோட்ட, அங்குணகொலபெலஸ்ஸ, சூரியவெவ, ஹம்பாந்தோட்ட, திஸ்ஸமஹாராம, கதிர்காமம் |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய நகரம், எம்பிலிப்பிட்டிய | எம்பிலிப்பிட்டிய, கொடக்கவெல |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 12, கொழும்பு வீதி, கம்பஹா | கம்பஹா, யக்கல, கம்பஹா 2ம் கிளை, மினுவான்கொட, திவுலப்பிட்டிய |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி | களுவாஞ்சிக்குடி, கல்முனை, பெரியகல்லாறு, பலுகாமம் |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52/1 மருதம் கட்டிடம், கொடிக்காமம் வீதி, நெல்லியடி | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 16, வாழ்வுதயம் கொம்பிளக்ஸ், தலைமன்னார் வீதி, மன்னார் | மன்னார், வன்காலை |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 161, பிரதான வீதி, குளியாப்பிட்டி | குளியாப்பிட்டி, நாரம்மல, ஹெட்டிப்பொல, பன்னல |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, குருணாகல் வீதி, சிலாபம் | சிலாபம், மாதம்பே, பிங்கிரிய |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 66, பிரதான வீதி, அலவ்வ | அலவ்வ, பொல்கஹவெல, கிரியுல்ல |

**மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2024.08.01 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.08.04**

| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
|---|---|---|
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 39, 40, புதிய நகரம், கண்டி வீதி, மஹியங்கன | மஹியங்கன |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 147, திருகோணமலை வீதி, மாத்தளை | மாத்தளை |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 341, காலி வீதி, அம்பலாங்கொடை | அம்பலாங்கொடை, ஊரகஸ்மன்ஹந்திய, பிட்டிகல, எல்பிட்டிய |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 55, பெலியத்த வீதி, ஹக்மன | ஹக்மன, பெலியத்த, தங்கல்ல, வலஸ்முல்ல, வீரக்கெட்டிய, மித்தெனிய, ஊருபொக்க, தெய்யந்தர, கட்டுவன |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 57/1, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவெல | அவிசாவெல, ருவன்வெல்ல, எஹெலியகொட |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 71/A, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொட | பலாங்கொட, கஹவத்தை, பெல்மடுல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, அவரிவத்த, கட்டுநாயக்க (பஸ் நிலையம் முன்பாக) | கட்டுநாயக்க, ரத்தொலுகம, நீர்கொழும்பு, கொச்சிக்கடை |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 257, நீர்கொழும்பு வீதி, வத்தளை | வத்தளை, பேலியகொட, மஹபாகே, ஜாஎல, கந்தானை |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 5, பிரதான வீதி, திருகோணமலை | திருகோணமலை, கந்தளாய் |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 496, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் 2ம் கிளை, ஊர்காவற்துறை (கய்ட்ஸ்), திருநெல்வேலி, கோப்பாய் |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, அநுராதபுர வீதி, கஹடகஸ்திகிலிய | கஹடகஸ்திகிலிய, கெபித்திக்கொல்லாவ, ஹொரவப்பொத்தான, மதவாச்சி |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 07, பிரதான வீதி, கல்கமுவ | கல்கமுவ, மாஹோ, தம்புத்தேகம |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 1/10, பழைய வைத்தியசாலை வீதி, நிக்கவெரட்டிய | நிக்கவெரட்டிய, புத்தளம், ஆணமடுவ, வாரியப்பொல |

எவ்வித தொடர் அறிவித்தல்களுமின்றி அடகு ஏலவிற்பனையை இரத்துச் செய்வதற்கோ, கூட்டிணைப்பதற்கோ அல்லது பிற்போடுவதற்கோ வங்கிக்கு சகல உரித்துமுண்டு.

**ஒப்பமிட்டவர் / பிரதிப் பொது முகாமையாளர்**
**(செயற்பாடுகள்)**

**தேசிய சேமிப்பு வங்கி**
**தலைமை அலுவலகம், கொழும்பு 03.**
**தொலைபேசி : 2573008-11, நீடிப்பு இல. 441, 533, பெக்ஸ்: 2574018**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | கேள்வி பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6591(EL) | 04 Numbers of Regulateurs Europa Viking 35 Digital Governor Controllers | 200,000.00 | 3,500.00 | 2024.08.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6596(MP) | 08 Nos. Trolley Wheels of 50T ZPMC STS Crane at JCT | 48,000.00 | 1,000.00 | 2024.08.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/24/ PT/08/013 | 01 No. Scanner A2 Flatbed – color | 30,000.00 | 1,000.00 | 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/07/055 | Turbo Chargers for Mercedes Benz Engine | 45,000.00 | 1,000.00 | 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/ PT/17/054 | GI Pipe Heavy Duty | 40,000.00 | 1,000.00 | 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்படவிரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச்சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜுலை 12 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் மூடும் திகதிக்கு முன்னைய நாள் வரையும் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

---

# வரையறுக்கப்பட்ட புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## 2024.06.30ம் திகதியுடன் முடிவுறும் வாக்குரிமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியல் மற்றும் 2024.06.30ம் திகதிக்கு அங்கத்தவர் பெயர் பட்டியலைக் காட்சிப்படுத்தல்

வரையறுக்கப்பட்ட புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2024.06.30ம் திகதியுடன் முடிவுறுத்தப்படும் முழுமையான வாக்குரிமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியல் (2023.06.30) வரை அங்கத்துவம் உடைய மற்றும் 2024.06.30ம் திகதிக்கு அங்கத்துவ பெயர் பட்டியல் 2023.07.11 முதல் 2023.07.25 வரையான காலத்திற்குள் கீழக்காணும் இடத்தில் காட்சிப்படுத்தப்படும். அதன் பிரகாரம், அங்கத்துவம் பெற்றுள்ள சகலரினதும் பெயர்கள் அவ் அங்கத்துவ பெயர் பட்டியலுக்கு சேர்க்கப்பட்டிருப்பதுடன், அங்கு உங்களது பெயர், அங்கத்துவ இலக்கம், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என பரீட்சித்து பார்த்து அங்கு ஏதேனும் திருத்தங்கள், மேன் முறையீடுகள் அல்லது எதிர்ப்புகள் இருப்பின் அது பற்றி எழுத்து மூலம் செயலாளர், வ.ப. புத்தளம் பலநோக்குக்கு கூட்டுறவுச் சங்கம், மஸ்ஜித் வீதி, புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். அத்திருத்தங்கள், மேன் முறையீடுகள் மற்றும் எதிர்ப்புகள், 2024.07.11 முதல் 2024.07.25 வரை ஏற்கப்படும். அக்காலத்திற்குள் திருத்தங்கள், மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாதவிடத்து, அவ் ஆவணங்கள் சரியான ஆவணங்களாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேலும் அறிவிக்கிறேன்.

| பிரதேச அலுவலக இல. | பிரதேச அலுவலகம் | காட்சிப்படுத்தப்படும் இடம் | பிரதேச அலுவலக இல. | பிரதேச அலுவலகம் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகர இல. 1 | புத்தளம் கோப்சிட்டி கிளை | 8 | பாலாவி | பாலாவி கிராமிய வங்கி |
| 2 | நகர இல.2 | புத்தளம் கிராமிய வங்கி | 9 | அட்டவில்லு | கல்லடி கிராமிய வங்கி |
| 3 | வட்டக்கன்டல் | வனாத்தவில்லு கிராமிய வங்கி | 10 | பொத்துவில்லு | பொத்துவில்லு கிராமிய வங்கி |
| 4 | விஜயபுர | வனாத்தவில்லு கிராமிய வங்கி | 11 | சிரம்பியடி | சிரம்பியடி கிராமிய வங்கி |
| 5 | வனாத்தவில்லு | வனாத்தவில்லு கிராமிய வங்கி | 12 | கல்லடி | கல்லடி பட்டய கோப்சிட்டி கிளை கிராமிய வங்கி |
| 6 | எலுவன்குளம் | எலுவன்குளம் கிராமிய வங்கி | 13 | மொனரவெவ | வனாத்தவில்லு கிராமிய வங்கி |
| 7 | காரைதீவு | வனாத்தவில்லு கிராமிய வங்கி | 14 | மானவேரி | சிரம்பியடி கிராமிய வங்கி |

சங்கத்தின் சகல பிரதேசங்களுக்கும் சொந்தமான அங்கத்துவ பெயர் பட்டியல்களின் பிரதிகள் காட்சிப்படுத்தலுக்காக மேற்படி இடங்களுக்கு மேலதிகமாக சங்க தலைமையகத்திலும் காட்சிப்படுத்தலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

**செயலாளர்,**
**வ/ப புத்தளம் ப.நோ.கூ.சங்கம்**
**மஸ்ஜித் வீதி, புத்தளம்**
**தொலைபேசி - 0322265270**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

### இலங்கை போக்குவரத்து சபைக்கு டாட்டா என்ஜின் மற்றும் கியர் பொக்ஸ் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை வழங்கல்

Procurement No.: MT/04/09/04/MT/607

01. 2024.08.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் டாட்டா என்ஜின் மற்றும் கியர்பொக்ஸ் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத்தலைவர் பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.07.12 ஆம் திகதியிலிருந்து 2024.08.06 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 40,000 ரூபாவை செலுத்துவதன் மூலம், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைப் பிரிவின் பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| Description | Bid Security (Rs) |
|---|---|
| Supply of Tata Engine & Gear Box spares for SLTB for a year on 30 days credit basis | for Bids offering spare parts to a total value of<br>Rs. 200,000,000/= or less - 2.0Mn<br>Over Rs.200,000,001/= - 3.0Mn |

02. டாட்டா என்ஜின் மற்றும் கியர்பொக்ஸ் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் ஏக நியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/ தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் டாட்டா என்ஜின் மற்றும் கியர் பொக்ஸ் பதிவு பெற்ற உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியோர் மாத்திரமே இந்த விலைமனுவின் கீழ் உதிரிப்பாகங்களுக்கான விலைமனுக்களை முன்வைப்பதற்கான தகுதியை பெற்றுக்கொள்வர்.
03. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக இறக்குமதி செய்வதற்கான உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் ஆதாரம் இல்லாத முன்வைப்புக்கள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்கள் எனின் முன்வைக்கப்பட்ட உதிரிகள் முகாமையாளரினால் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதற்கான பதிவு அல்லது ஆவணச் சான்று இல்லாவிடில் அவைகள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.
04. கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் 2024.07.25 ஆம் திகதியன்று மு.ப.11 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
05. எந்தவொரு விலைமனுதாரரின் முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களுக்கமைவாக இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. விலைமனுக்கள் 2024.11.07 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் முன்வைக்கப்பட்டுள்ள விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து மீதமாகவுள்ள ஒரு வருட காலத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்கள் 2024.12.07 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் இபோச இன் முதல் எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பப்படாததும் நிபந்தனையற்றதுமான உத்தரவாத அடிப்படையில் அமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தேவைப்படுத்தப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
08. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
09. விலைமனுக்கள் இரு பிரதிகளில் பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 7 ஆம் மாடியின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இந்த நோக்கத்திற்காக பராமரிக்கப்படும் விலைமனுப் பெட்டியில் 2024.08.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில்/ தூதஞ்சல் சேவையில் மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் “Bid for supply of Tata Engine & Gear Box spares for SLTB" என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 07 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,தலைவர்,**
**அமைச்சுபெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**07 ஆம் மாடி, ‘‘செத்சிரிபாய”, II ஆம் கட்டம்,ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**விசாரணைகள் : பிரதான பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056204, 011 2588457**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

### இலங்கை போக்குவரத்து சபைக்கு வடிகட்டிகள் மற்றும் எரிபொருள் இன்ஜெக்சன் பம்பிகளுக்கான உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை வழங்கல்

Procurement No.: MT/04/09/04/MT/606

01. 2024.08.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் வடிகட்டிகள் மற்றும் எரிபொருள் இன்ஜெக்சன் பம்பிகளுக்கான உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத்தலைவர் பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.07.12 ஆம் திகதியிலிருந்து 2024.08.05 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 40,000 ரூபாவை செலுத்துவதன் மூலம், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைப் பிரிவின் பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| Description | Bid Security (Rs) |
|---|---|
| Supply of spare for fuel Injection Pumps for SLTB for a year on 30 days credit basis | for Bids offering spare parts to a total value of<br>Rs. 200,000,000/= or less - 2.0Mn<br>Rs.200,000,001/= to 300, 000,000/= - 3.0Mn<br>Over Rs.300,000,001/= - 4.5Mn |

02. வடிகட்டிகள் மற்றும் எரிபொருள் இன்ஜெக்சன் பம்பிகளுக்கான உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் ஏக நியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/ தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பதிவு பெற்ற உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியோர் மாத்திரமே இந்த விலைமனுவின் கீழ் உதிரிப்பாகங்களுக்கான விலைமனுக்களை முன்வைப்பதற்கான தகுதியை பெற்றுக்கொள்வர்.
03. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக இறக்குமதி செய்வதற்கான உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் ஆதாரம் இல்லாத முன்வைப்புக்கள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்கள் இபோச இன் தொழில்நுட்பத்திற்கான பிரதி பொது முகாமையாளரினால் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதற்கான பதிவு அல்லது ஆவணச் சான்று இல்லாவிடில் அவைகள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.
04. கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் 2024.07.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
05. எந்தவொரு விலைமனுதாரரின் முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களுக்கமைவாக இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. விலைமனுக்கள் 2024.11.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் முன்வைக்கப்பட்டுள்ள விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து மீதமாகவுள்ள ஒரு வருடத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்கள் 2024.12.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் இபோச இன் முதல் எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பப்படாததும் நிபந்தனையற்றதுமான உத்தரவாத அடிப்படையில் அமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தேவைப்படுத்தப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
08. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
09. விலைமனுக்கள் இரு பிரதிகளில் பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 7 ஆம் மாடியின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இந்த நோக்கத்திற்காக பராமரிக்கப்படும் விலைமனுப் பெட்டியில் 2024.08.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில்/ தூதஞ்சல் சேவையில் மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் “Bid for the supply of spare parts for fuel injection pumps for SLTB" என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 07 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்**
**அமைச்சுபெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**07 ஆம் மாடி, ‘‘செத்சிரிபாய”, II ஆம் கட்டம்,ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**விசாரணைகள் : பிரதான பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056204.**
**தொலைபேசி/தொலைநகல்: 011 2588457தொலைநகல்: 011**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

## கேள்விப் பத்திர அறிவித்தல்

நாரம்மல கள்ளுத் தவறணையின் 2025 வருடத்திற்கான கேள்விப்பத்திரம் 2024. ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி மு.ப.10.30 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறேன். மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2024,06.07ம் திகதி 2388 இலக்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**எம்.ஆர்.எம். இம்ரான்**
**பிரதேச செயலாளர்,**
**நாரம்மல.**

**2024.06.14**
**பிரதேச செயலகம், நாரம்மல.**

## கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவு

கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் தொடர்பான கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கண்டி வட்டபுளுவ இல.01 கள்ளு தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு 2024/2025 குத்தகைக்கு விற்றல் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் 2024.08.13 ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
2. கண்டி - கொழும்பு வீதியில் இல.01 பிறநாட்டு குடிவகை தவறணைகளை சிறப்புரிமைகளை வாங்குவதற்கு 2024/2025 குத்தகைக்கு விற்றல் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் 2024.08.13 ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்காக 2024.07.05 ஆம் திகதி இலக்கம் 2,392 கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கெசட் பத்திரத்தை பார்க்கவும்.

## மாகாண கல்வித் திணைக்களம்
## வடமேல் மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வகுப்பறை தளபாடங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

**செயற்றிட்டத்தின் பெயர் (PSDG)**

பின்வரும் 1ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வகுப்பறை தளபாடங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாகாண கல்விப் பணிப்பாளரின் (வடமேல் மாகாணம்) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

**அட்டவணை 01**

| தொகுதி (Lot) | உருப்படி இல. | விபரங்கள் | எண்ணிக்கை (அலகுகள்) | விலைக் கோரல் பிணை முறி இல.ரூ. | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | நிதி வளம் | மதிப்பிடும் முறை |
|---|---|---|---|---|---|---|---|
| | வகுப்பறைத் தளபாடங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | | | | | | |
| 01. | i. | குழந்தை கதிரைகள் | 350 | | 3,500.00 | | முழு அளவு உருப்படிக்கும் விலைக் கோருதல் வேண்டும். ஒவ்வொரு உருப்படியும் வெவ்வேறாக மதிப்பிடப்படும் |
| | ii | குழந்தை மேசைகள் | 235 | | | | |
| | iii | சிறுவர் மேசைகள் | 672 | | | | |
| | iv | சிறுவர் கதிரைகள் | 675 | | | | |
| | v | மத்திம அளவு மேசைகள் | 90 | | | | |
| | vi | மத்திம அளவு கதிரைகள் | 90 | | | | |
| | vii | ஆசிரியர் மேசைகள் | 25 | | | | |
| | viii | ஆசிரியர் கதிரைகள் | 19 | | | | |

02. ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நாள் முதல் அறுபது (60) நாட்களுக்குள் ஒப்பந்தத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடாத்தப்படும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களம் (வடமேல் மாகாணம்), பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி/தொலைநகல் இலக்கம் 037-2222422) மற்றும் மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை)

05. தகைமைத் தேவைப்படுத்தல்களில் உள்ளடங்குபவை:

(i) கடந்த மூன்று வருடங்களில் இதனையொத்த பொருட்களை வழங்குவதில் பின்வருமாறான ஆகக்குறைந்த நிதிப் புரள்வுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். (2021-2023)

| தொகுதி இல. | 01 |
|---|---|
| சராசரி புரள்வு | ரூபா 6 மில்லியன் |

(ii) தேவைப்படும் பொருட்களை வழங்குவதில் ஆகக்குறைந்தது 3 வருட கடந்தகால அனுபவம்.

(iii) விலைமனுதாரர் தொழில்நுட்ப தகைமை மற்றும் தேர்ச்சி பெற்ற பணியாட்களுள்ள வேலைத்தளத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

06. 1ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை மாகாண கல்விப் பணிப்பாளரிடம் செலுத்திய பின்னர், பின்வரும் 8ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 2024 ஜூலை 12ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப்பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

பின்வரும் 7ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் (வமேமா) 2024 ஜூலை 26ஆம் திகதி 2ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**அட்டவணை 02**

| தொகுதி இல. | 01 |
|---|---|
| நேரம் | 9.15 மணி |

07. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வகுப்பறை தளபாடங்களை வழங்குதல், விநியோகிப்பதற்கான விலைமனு" என குறிப்பிட்டு 2024 ஆகஸ்ட் 02ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் "கேள்விப் பெட்டியில்" உள்ளிடல் வேண்டும். 2024 ஆகஸ்ட் 02ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024 ஆகஸ்ட் 02ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடியதும் உடனடியாகத் திறக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விலைமனுக்களும் "விலைமனுப் பிணையொன்றுடன்" இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த பெறுகை தொடர்பான எல்லா மாற்றங்களும் எமது இணையதளத்தில் குறிப்பிடப்படும்.

08. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு :

**J.A.M.P. ஜயதிலக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**

**தொலைபேசி : 037-2222422 / 037-2220221**
**தொலைநகல் இலக்கம் : 037-2222422**
**இணையதள முகவரி : www.nwpedu.lk**

**திகதி: 2024-07-12.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## இலங்கை இராணுவம்

## கேள்வி அறிவித்தல்

1. இலங்கை இராணுவத்திற்குரித்தான 06 டிரக் வாகனங்கள், ஒரு அம்பியூலன்ஸ் வாகனத்திற்கான தகர வேலை மற்றும் நிறப்பூச்சு வேலைகள் மற்றும் ஒரு பிரீசர் கொள்கலன் பெட்டிக்கான முழுமையான திருத்தவேலைகளை மேற்கொள்வதற்காக தகைமை வாய்ந்த உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

2. சகல தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-13ஆம் திகதி வரையான வேலை நாட்களில் ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் வாகனத் தரிப்பிட இடப்பரப்பில் கேள்விகள் திறக்கப்படும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். சகல கேள்விகளும் ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் கேள்விகள் திறக்கப்படும் பிரிவில் 2024-08-14ஆம் திகதி 1100 மணித்தியாலத்தில் திறக்கப்படும்.

3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் www.promise.lk மற்றும் www.army.lk எனும் இணைதளங்களுக்குப் பிரவேசித்து தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

**அ. மின்சாரம் மற்றும் இயந்திர பொறியியல் பணிப்பாளர் சபை,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர.**
**தொலைபேசி இலக்கங்கள்: 0113070478, 0114051843**

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர.**

## பெறுகை அறிவித்தல்

## பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம், சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி

01. பின்வரும் வேலை விடயங்களுக்காக பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-08-06ஆம் திகதி வரையில் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து வெவ்வேறான வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | நிறைவேற்றுப் பொறியிய லாளர் அதிகாரப் பிரதேசம் | வேலை விடயம் | பதிவுத் தரம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | ஒப்பந்த வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | இரத்தினபுரி | சபரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியின் A பகுதியில் மழை நீர் குழாய், நீர் வடிந்து செல்லும் குழாயை அமைத்தல் மற்றும் நிறப்பூச்சு வேலைகளை செய்தல் | C8/C7 | 3,000.00 | 36,000.00 | 3.52 |
| 02 | | சபரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியின் C பகுதியில் மழை நீர் குழாய், நீர் வடிந்து செல்லும் குழாயை அமைத்தல் மற்றும் நிறப்பூச்சு வேலைகளை செய்தல் | C7/C6 | 3,000.00 | 77,000.00 | 7.62 |
| 03 | | புஸ்ஸெல்ல முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் ஐந்து மாடி தங்கும் விடுதிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகளை (02ஆம் கட்டம்) நிறைவு செய்தல் | C4 அல்லது அதற்கு மேல் | 12,500.00 | 750,000.00 | 74.71 |
| 04 | | புஸ்ஸெல்ல முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் படலை அருகிலிருந்து அலுவலகம் வரையான பழுதடைந்துள்ள வீதியை சீரமைத்தல் | C7/C6 | 3,000.00 | 54,000.00 | 5.32 |

02. இந்த விலைக்கோரல்கள் போட்டி ரீதியான பெறுகை செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்த ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி 5 மில்லியன் ரூபாவுக்கும் குறைவாக உள்ளதால் 04/2016 (i) மற்றும் 04/2016(iii) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைகளின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் முன்னுரிமை மற்றும் சபரகமுவ மாகாண நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் பதிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விலைமனுதாரர்கள் தெரிவு இடம்பெறும் என்பதுடன் 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட வேலைகளுக்கு இந்த நிதிச் சுற்றறிக்கை ஏற்புடையதல்ல.

03. வேலை விடயங்களுக்கு இயைபான விலைக்கோரல் ஆவணங்களை 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-05ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்குறிப்பிடப்பட்ட வகையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

04. சகல விலைமனுதாரர்களும் பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு மீளளிக்கப்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) பெயரில் விலைக்கோரல் பிணை முறியொன்றை அல்லது பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை குறித்த விலைக்கோரல் ஆவணத்தின் மூலப்பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. மேற்கூறிய நிர்மாணம் தொடர்பான விபரங்களை பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் 045-2225310, 045-2226618)

06. சித்திகரமான விலைமனுதாரருக்கு ஒப்பந்தத்தைக் கையளிப்பதானது அவரின் பதிவுப் பெறுமதிக்கு வரையறுக்கப்படும். விலைமனுவை முழுமையாக அல்லது பகுதியை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. விலைமனுக்களை இரு பிரதிகளில் 2024-08-06ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் நேரடியாகக் கொண்டுவந்து உள்ளிடலாம் பெறுகைக் குழுவின் தலைவர், பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலக முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிச் சமர்ப்பிக்கலாம். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வெவ்வேறான உறைகளில் இட்டு அவைகளை மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

08. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்தவுடன் 2024-08-06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**பெறுகைக் குழு,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்,**
**சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி.**
**2024-07-12.**

### கைத்தொழில் அமைச்சு
## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்
## விலைமனுக்கள் சமர்ப்பித்தலை நீடித்தல்

**கொக்கிலாயில் உள்ள முழுமையான கனரக கனிப்பொருளை வேறாக்கும் பொறித்தொகுதியை நிறுவுவதற்கு செயற்றிட்ட முன்மொழிவுகள் மற்றும் செயற்றிட்ட வியாபார திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசகரொருவரைத் தெரிவு செய்தல்**

**கேள்வி இல. LMSL/SUP/CPCD/01/2024**

மேற்கூறிய விடயம் தொடர்பாக 2024 ஜூன் 16ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தை இது குறிக்கின்றது.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்: 2024 ஜூலை 26ஆம் திகதி பி.ப. 2.30 மணி

ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 0112883972/0112883951 அல்லது 2.

**தலைவர்,**
**திணைக்கள ஆலோசகர்கள் பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**321/21, சரண மாவத்தை, இராஜகிரிய.**

## பெயர் மாற்றம்

திருமலை வீதி, கதிரவெளி என்ற முகவரியைச் சேர்ந்த நாங்கள் குடும்பமாக சொந்த விருப்பத்தின் பெயரில் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி கணபதிப்பிள்ளை சோதிலிங்கம் தே.அ.அ.இல: 792781969V என்ற பெயரை கணபதிப்பிள்ளை முஹம்மட் இர்பான் என்றும், எனது மனைவியின் பெயர் தர்மலிங்கம் தர்மேந்தினி தே.அ.அ.இல.: 885621007V என்ற பெயரை தர்மலிங்கம் பாத்திமா சுமையா என்றும், பிள்ளையான தன்ஜெயன் கிருஷ்டினா என்ற பெயரை தன்ஜெயன் பாத்திமா இஸ்னா என மாற்றிக்கொண்டோம் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும், மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பகிரங்க அறிவித்தல் நீதிமன்றக் கட்டளை மற்றும் கலைப்பாளரை நியமித்தல்

**கம்பனியின் பெயர்:** நோர்த் செவன் டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்

**பதிவு இல:** PV90925

**பதிவு அலுவலக முகவரி:** இல.02, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02

**வழக்கு இலக்கம்:** CHC/02/2024/Co

**நீதிமன்றம்:** வர்த்தக உயர் நீதிமன்றம், கொழும்பு

**கலைப்பு கட்டளைத் திகதி:** 2024 ஏப்ரல் 03

**கலைப்பாளர் நியமனக் கட்டளை:** 2024 ஜூன் 27

**கலைப்பாளர் நியமனத் திகதி:** 2024 ஜூன் 27

**கலைப்பாளரின் பெயர்:** கெடவா கந்தகே சுதத் குமார்

**கலைப்பாளரின் முகவரி:** இல.46, லும்பினி மாவத்த தளுகம, களனி

**கலைப்பாளரின் அலுவலக முகவரி:** 3ம் மாடி, யதாமா கட்டிடம் இல. 142, காலி வீதி கொழும்பு - 03

## மாகாண இறைவரித் திணைக்களம் – தென் மாகாணம்
## விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

60 **Kva** மின்பிறப்பாக்கியொன்றை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகோரல்களை தென் மாகாண, மாகாண இறைவரித் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| விளக்கம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை (ரூபா) |
|---|---|---|---|
| 60 KVA மின்பிறப்பாக்கி | 01 | 7,500.00 | 100,000.00 |

1. 2024.07.12 ஆம் திகதியிலிருந்து 2024.07.31 ஆம் திகதி வரையும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் காலி, வக்வெல்ல வீதி, 30 ஆம் இலக்கத்திலுள்ள தென் மாகாண, மாகாண இறைவரி திணைக்கள கணக்கிடல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படும் மேலதிக விபரங்களை 091-2234194/0912233098 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்.
2. விலைமனுக்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் ஒப்பந்தத்தை வழங்கும் தகைமைக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இது தொடர்பாக, தற்போது செயற்பாட்டிலுள்ள சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் விலைமனு ஆவணங்கள் ஆகியன விலைமனுக்களை மதிப்பீடு செய்யும் வேளையில் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படும்.
3. விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணையானது இலங்கையிலுள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து ''ஆணையாளர், மாகாண இறைவரித் திணைக்களம்,தென் மாகாணம்'' என்ற பெயரில் வழங்கப்பட்டதாகவும் 2024.07.31 ஆம் திகதியிலிருந்து 2024.10.31 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தயாரிக்கப்பட்டு அவ்வாறே அடையாளமிடப்பட்டு இவ்விரு பிரதிகளும் தனித்தனியான உறைகளில் அடக்கம் செய்யப்பட்டு அவ்விரு உறைகளும் தனியொரு உறையில் உட்சேர்க்கப்பட்டு, முத்திரைக்குறி பொறிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2024.07.31 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு பெற்றுக் கொள்ளும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் ''தலைவர், பெறுகைக் குழு, மாகாண இறைவரித் திணைக்களம், இல. 30, வக்வெல்ல வீதி, காலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாகாண இறைவரித் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமாக பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் 2024.07.31 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தில் தலைவரின் முன்னிலையில் அல்லது அவரினால் நியமனஞ் செய்யப்பட்ட சட்டபூர்வமாக அதிகாரம் பெற்றவர் அல்லது அவரின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற நபரின் முன்னிலையில் அல்லது அவரது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளில் ஒருவர் சமுகமளிக்கலாம்.
7. விலைமனுக்கள் 2024.10.18 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. 2024.07.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
9. குறைபாடுகளுள்ள விலைமனுக்கள் மற்றும் விலைமனுப் படிவங்களை பெற்ற பின்னர் விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் கேள்விகோரல்கள் நிராகரிக்கப்படுவதுடன் இயைபுடைய கேள்விப் பிணை வைப்புக்கள் கையகப்படுத்தப்படும். இந்த பெறுகைக்கான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண இறைவரித் திணைக்களம்,**
**இல.: 30, வக்வெல்ல வீதி, காலி.**
**10.07.2024.**

www.adz.lk
it's what you want

## சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் – மேல் மாகாணம்
## விலைமனுக்களுக்கான அழைத்தல்
### மேல் மாகாணத்திலுள்ள மருத்துவ நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கல்

1. பின்வரும் அம்சங்களுக்காக கொழும்பு-10, மாளிகாவத்த செயலக கட்டிடத்திலுள்ள சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வதுடன், விலைமனுக்கள் 2024.08.02 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்படும்.

| Bid Ref. No. | Name of the Bid | Non-Refundable Bid Fee (Rs) | Pre-Bid Date & Time |
|---|---|---|---|
| WP/PD/PRO/02/03/ECG Machine, Exercise/2024 | Procurement of ECG Machine, Exercise – DGH Gampaha | 3,500.00 | 19.07.2024 (10.00 am – 10.30 am) |
| WP/PD/PRO/02/04/ Anesthetic Workstation/2024 | Procurement of Anesthetic Workstation – DGH Avissawella | 3,500.00 | 19.07.2024 (10.30 am – 11.00 am) |
| WP/PD/PRO/02/05/ Laparoscopy/2024 | Procurement of Advanced Video Laparoscopy System | 13,000.00 | 19.07.2024 (11.00 am – 11.30 am) |

2. **2024.07.12 ஆம் திகதியிலிருந்து 2024.08.01 ஆம் திகதி வரையும்** வழமையான வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. **2024.08.02 ஆம் திகதியன்று** கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் (மேல் மாகாணம்) அலுவலகத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட மூடும் நேரத்தின் பின்னர், விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
4. விலைமனுக்கோரல் ஆவணங்கள் உபகரணங்களின் தயாரிப்பாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கே வழங்கப்படும். இந்த கோரிக்கைக்கு சான்று பகரும் ஆவணங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை கோரும் வேளையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மூடும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் (மேல் மாகாணம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
6. விலைமனு ஆவணத்தின் மூலப்பிரதி மற்றும் அதனது பிரதியானது தனித்தனியாக முத்திரையிடப்பட்டு தனியொரு தபாலுறையில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு தொடர்பெண் எழுதப்படல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களுக்கு, மேல் மாகாண சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொடர்பு இலக்கம்: 011-2437154 மற்றும் 011-2434852.

**மருத்துவர் (திருமதி)**
**தம்மிக்கா ஜயலத்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் (மேல் மாகாணம்),**
**மாளிகாவத்த,**
**கொழும்பு-10.**

### இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமை மற்றும் இயலுமை உடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியிலான கேள்விகோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவத்தின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (கேள்வி திறக்கப்படும் நாள் முதல்) |
|---|---|---|---|---|---|
| WL/02/09/SAFE/2024 | Firearms safes | 20 | 2500.00 | 60000.00 | 90 நாட்கள் |
| | Executive safe with stand | 01 | | | |

01. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை திணைக்களத்தின் உதவி நிதிப் பணிப்பாளர் (0112-871537) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2024-07-12ஆம் திகதி முதல் 2024-08-02ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பத்தரமுல்லை, வனசீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
02. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2024-07-12ஆம் திகதி முதல் 2024-08-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையில் கடிதத் தலைப்பில் எழுத்துமூலமான கோரிக்கை சகிதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் லொட் இலக்கத்திற்குரித்தான உபகரணங்கள் மற்றும் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024-08-02ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் என்பதுடன் கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
04. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புக்கூற மாட்டார்.
05. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் அல்லது எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்லை.**

### Ministry of Education
## Vocational Training Authority of Sri Lanka
VTA
## Procurement Notice
### Calling of Quotations for Double Cabs under Operational Leasing

The Chairman, Procurement Committee, Vocational Training Authority of Sri Lanka (VTA) Invites Sealed Bids from Authorized Agents for **Supplying of two Double Cabs for VTA** under Operational Leasing Facility

| No | Bid No | Description | Engine Capacity | No of Items | Non-refundable fee |
|---|---|---|---|---|---|
| 01 | VTA/PROC/SERVICE/T F/SM/2024/07 | Double Cab | 2300cc - 2500cc | 2 Nos. | Rs.3500.00 |

1. Common Conditions
   - Accidental repairs, full insurance and all other maintenance cost need to be borne by the leaser. A same kind of vehicle should be provided in repairing time beyond 24 hours and also a vehicle needs to be given even the repair takes less than 24 hours, if customer is needed.
   - The leaser should have a vehicle pool with more than 10 vehicles and needs to be registered with central bank of Sri Lanka as a financial company that provides branded vehicle on rental basis in Sri Lanka.
   - Minimum monthly running distance will be 3000Km.
2. Bidding documents can be obtained from the Procurement unit of the VTA by submitting a written application to the Chairman, Vocational Training Authority of Sri Lanka from 12.07.2024 to 25.07.2024 between 9.00 am to 3.00 pm on working days upon payment a non-refundable fee as mentioned in above table. The method of payment should be in cash.
3. Bidders should mention on the top left corner of the envelope the Contract Reference file name, Sealed Bids shall be delivered by registered post to the Chairman, Procurement Committee Vocational Training Authority of Sri Lanka, "Nipunatha Piyasa", 4th Floor, 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05 to reach on or before at 10.30 am on 26.07.2024 or can be deposited in the Tender box kept at the Procurement Unit of the VTA on or before 10.30 am on 26.07.2024 Bids will be opened immediately after closing of the Bids and late bids will be rejected.
4. Bidders or their authorized representatives can be present at the bid opening.
5. The bid shall be accompanied by a Bid Security (On demand guarantee) in the foam of Bank Guarantee from recognized commercial bank registered in Sri Lanka issued in favour of **Chairman, Vocational training Authority of Sri Lanka, "Nipunatha Piyasa", 4th Floor, 354/2, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05**. Amount of bid security is Rs. 2% of contract value and Validity of the bid security is 110 days from the date of bid opening.
6. Any further clarification with regard to the Procurement can be obtained from the Procurement Unit prior to the closing date.
7. Broaches and Catalogs should be forwarded along with the Bids.
8. Pre Bid meeting will be held on 19.07.2024 at 10.30 am at the Conference Hall of the 05th Floor "Nipunatha Piyasa" building Premises. All Bidders should be attended for pre-bid meeting.

Chairman
Procurement Committee
Vocational Training Authority of Sri Lanka,
"Nipunatha Piyasa"4th Floor, 354/2, Elvitigala Mawatha,
Narahenpita,
Colombo 05.
Tel : 011-2596516/17, 071-9476753

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch Acc. No. 000000377

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| கடனிலக்கம் மற்றும் தலைப்பு | 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இலக்கம் | தலைப்பு |
| MOH/STHRD/SB/E36 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மின்சார ஆய்வுகூட உபகரணங்கள் -2 என்பனத் பெறுகை ('பொருட்கள்') |
| MOH/STHRD/SB/E69 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான தரவு கையகப்படுத்தல் மற்றும் சிக்னல் செயலாக்க உபகரணங்களின் பெறுகை ('பொருட்கள்') |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி 10:00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ. அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்கான ("பொருட்கள்") தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். ஒப்பந்தம் கையளிக்கப்படும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 90 நாட்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகை செயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விபரங்கள் | கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக்குறைந்தது 2 ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் இல. ரூபா | கடந்த மூன்று வருடங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆக்ககுறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு இல. ரூபா |
|---|---|---|
| **MOE/STHRD/E36** | | |
| Lot 1- Laboratory Coin Cell Assembly Equipment Productioy Line and Testing Equipment | 6,849,120.00 | 17,122,800.00 |
| Lot 2- Laboratory equipment | 1,826,432.00 | 4,566,080.00 |
| Lot 3 - Solar project testing items | 1,249,664.00 | 3,124,160.00 |
| Lot 4 - spin coater | 1,922,560.00 | 4,806,400.00 |
| Lot 5 - Electrical project equipment | 1,321,760.00 | 3,304,400.00 |
| Lot 6 - industrial sensor training system | 3,124,160.00 | 7,810,400.00 |
| Lot 7 - Solar PV training system | 2,042,720.00 | 5,106,800.00 |
| **MOE/STHRD/SB/E69** | | |
| Lot 1-Software and Computers | 7,709,824.00 | 19,274,560.00 |
| Lot 2-Desktop computers | 7,656,652.80 | 19,141,632.00 |
| Lot 3-Uninterruptible Power Supplies | 744,396.80 | 1,860,992.00 |
| Lot 4-Smartboard 86" | 1,860,992.00 | 4,652,480.00 |
| Lot 5-Sensor Kits | 1,595,136.00 | 3,987,840.00 |
| Lot 6-Electronic Workstation Equipment | 3,987,840.00 | 9,969,600.00 |
| Lot 7-Camera Equipment and Image Acquisition Hardware | 3,190,272.00 | 7,975,680.00 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அதிகாரி,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**தொழில்நுட்பவியல் பீடம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**

**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: pasb-sthrd@mohe.gov.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் மேற்கூறப்பட்ட பெறுகை இலக்கங்களில் குறிப்பிடப்படும் விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2024 ஜுலை 13ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப் பிணையின் மூலப்பிரதியுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

**பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**STHRDP செயற்றிட்டம், தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.**

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடப்படல் வேண்டும்.


| ஒப்பந்த இலக்கம் | தலைப்பு |
|---|---|
| MOH/STHRD/SB/E36: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மின்சார ஆய்வுகூட உபகரணங்கள்-2 என்பதன் பெறுகை (''பொருட்கள்'') |
| MOH/STHRD/SB/E69: | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - தொழில்நுட்பவியல் பீடத்திற்கான தரவு கையகப்படுத்துதல் மற்றும் சிக்னல் செயலாக்க உபகரணங்களின் பெறுகை (''பொருட்கள்'') |

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**

திகதி: 2024-07-12.




# ஊவா மாகாண சபை

## பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை நிறைவு செய்வதற்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் ICTAD (CIDA) பதிவைப் பெற்றுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியில் கேள்விக்கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

நிதி அமைச்சின் 4/2016(iii) சுற்றுநிருபத்தின் பிரகாரம் கேள்வி வழங்கப்படும்போது பிராந்திய முன்னுரிமை வழங்கப்படும்.

கேள்விகளைச் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் கேள்விதாரர்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத மற்றும் மீளளிக்கப்படும் கட்டணத்தை பதுளை, ரத்வத்த மாவத்தையில் அமைந்துள்ள மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி அந்த அலுவலகத்தில் பெறுகை மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ICTAD (CIDA) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளாகவில்லை என்பதற்கான சான்று ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறிக்குப் பதிலாக அதன் இரு மடங்கு பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 60 நாட்கள் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றை மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளரின் பெயரில் பெற்று கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பிக்கலாம். இயைபுடைய நிபந்தனைகள் பெறுகை மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வித் தொகையைக் கொண்ட வேலைகளுக்கு கேள்விதாரரால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களிலான கேள்விப் படிவங்களை 2024-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாகாண விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, ரத்வத்த மாவத்தை, பதுளை எனும் முகவரியைக் குறிப்பிட்டு மாகாண விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நகல்பிரதிகள் மூலப்பிரதியின் புகைப்படப் பிரதிகளாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் கேள்விதாரரின் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல்** | **- 2024-07-10ஆம் திகதி முதல் 2024-07-30ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை மற்றும் 2024.07.31ஆம் திகதி ந.ப 12.00 வரை** |
| **கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல்** | **- 2024-07-31ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை** |
| **கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல்** | **- 2024-07-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு** |

கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். இதன்பொருட்டு தேவைப்படும் மேலதிக விபரங்களை பதுளை, ரத்வத்த மாவத்தையில் அமைந்துள்ள மாகாண விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகத்தில் அல்லது 055-2222311 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

கேள்விகளை கையளிக்கும் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு கொண்டுள்ளது.

| தொடர் இல. | கைத்தொழிலின் பெயர் | இக்டாட் பழைய/ புதிய வகைப் படுத்தல் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை ரூபா | மீளளிக்கப் படாத தொகை ரூபா | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|
| BOR 1 | முட்டைக்கருக்கட்டல் அலகை நிர்மாணித்தல் | C6 மற்றும் C5 | 249,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| BOR 2 | கருக்கட்டல் சேவல் இல்லம் (40'X20') புளொக் 1/2/3 நிர்மாணித்தல் | C6 மற்றும் C5 | 183,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| BOR 3 | கருக்கட்டல் சேவல் இல்லம் (40'X20') புளொக் 4/5/6 நிர்மாணித்தல் | C6 மற்றும் C5 | 183,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| BOR 4 | கோழிக் குஞ்சுகள் இல்லத்தை நிர்மாணித்தல் (50'X20') புளொக் 1 மற்றும் 2 | C6 மற்றும் C5 | 128,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| BOR 5 | சேவல் குஞ்சுகள் இல்லத்தை நிர்மாணித்தல் (80'X20') புளொக் 1 மற்றும் 2 | C6 மற்றும் C5 | 206,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| BOR 6 | அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | C6 மற்றும் C5 | 206,000.00 | 5000.00 | 120 நாட்கள் |

**ஜே.எம்.யூ.கே. ஜயசேக்கர,**
**செயலாளர் / பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும்**
**நன்னீர் மீன்பிடி விவகார அமைச்சு,**
**ரத்வத்த மாவத்தை, பதுளை.**
**2024-07-10**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு

### கிழக்கு மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு கொள்வனவு செய்யப்படவுள்ள வைத்தியசாலை உபகரணங்கள் மற்றும் தளபாடங்களுக்காக, மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் பெறுகைக் குழு முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

| தொ. இல. | குறிப்பீட்டிலக்கம் | தேவையான பொருட்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BT/RDHS/FH/PO/PSSP/FUR/01 | Office Table | 14 | 1,000.00 |
| | | Revolving Chair | 14 | |
| | | Executive Chair | 02 | |
| | | Steel Cupboard | 08 | |
| | | Glass Cupboard | 08 | |
| | | Conference Table | 01 | |
| | | Dining Table Plastic | 01 | |
| | | Dining Chair Plastic | 10 | |
| | | File Self | 03 | |
| 02 | BT/RDHS/FH/PO/PSSP/MEQ/02 | Vaccine Trolley | 02 | 1,000.00 |
| | | Bathroom Scale | 13 | |
| | | Thermometer | 29 | |
| | | Height Board | 04 | |
| | | Spring Balance | 03 | |
| | | BP Box | 09 | |

**விலைக்கோரல் நிபந்தனைகள்:**

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள தகுதியுள்ள எந்தவொரு விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் 2024-07-12ஆம் திகதியிலிருந்து 2024-07-25ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் இவ்வலுவலகத்தின் கணக்கிடல் கிளையிலிருந்து விலைமனு விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம்.

- மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்று.
- மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தின் பெயரில் மட்டக்களப்பு சுப்பர் தரக் கிளை இல. 012 இலங்கை வங்கி 0002699216 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது ICTAD தரம் C9/C8
- முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்தம் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டு முகவர்களாக நியமித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.

1. முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை 2024-07-26ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம், மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முடிவுறுத்தப்படும் நேரம் முடிந்தவுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலக கேட்போர்கூடத்தில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இரண்டு தனித்தனியான உறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என உள்ளிட்டு முத்திரைக் குறியிடப்பட்டு உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "குறிப்பீட்டிலக்கம்" குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பெறுமதியின் 2% விலைமனுப்பிணைத் தொகையாக அனைத்து விலைமனுக்களுடன் இணைக்கப்படல் வேண்டும். முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு விலைமனுப்பிணைத் தொகை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
4. 065-2222997 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மட்டக்களப்பு.**

2024.07.12.

Daily News Classifieds, the Housewives' companion

# கேள்விக்கோரல் அழைப்பு

## மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

### சப்ரகமுவ மாகாண சபை

**01) வீதிப் பராமரிப்பு விடயங்கள்**

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண வீதி மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**02) கணனி துணைப்பாகங்கள் வழங்குதல்**

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண வீதி அமைச்சிற்கு மற்றும் விளையாட்டுத் திணைக்களத்திற்கு தேவையான கணனிகளை வழங்குவதற்காக தகைமையுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்வி தாரர்களிடமிருந்து சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

- o மேலதிக விபரங்களை www.sg.gov.lk இணையதளத்திற்குள் உள்ள நிறுவனங்களுக்கு சென்று அங்குள்ள மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- o இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை மாகாண வீதி அமைச்சிற்கு வருகைதந்து அல்லது தொ.பே.இல. 045 - 2223154 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவையான ஒருவருக்கு இலவசமாக வாரத்தின் வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- o 2024.08.05 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.
- o 2024.08.06 மு.ப. 10.30 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி 045 - 2223154**

2024.07.12ம் திகதி

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள் மற்றும் செய்திகள் அமைச்சு

### தென் மாகாண சபை

தக்ஷின ஜன மெஹெவர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக 4000 பாடசாலைப் பைகள் மற்றும் பின்வரும் அளவுகளிலான புத்தகங்கள் மற்றும் பேனைகளைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து பின்வரும் விபரக்குறிப்புகளின் பிரகாரம் தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**உருப்படி 01 - 4000 பாடசாலைப் பைகள்**

| தொ. இல. | Minimum Height X Length X Width | 17' X 13.5' X 6' | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| 01 | Minimum Pocket With one Large Pocket | 2 | 50000.00 |
| 02 | Minimum Side Pocket | 2 இரு புறமும் Pocket 02 Air Mesh இட்டு முடிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். | |
| 03 | Zipper Size | NO: 08 Two Side | |
| 04 | Belt | Hard Belt<br>3' அகலமான கழுத்துப் பட்டி இருத்தல் வேண்டும் என்பதுடன்<br>8 mm Cussion செய்யப்பட்டிருத்தல் வேண்டும். | |
| 05 | Materials | 0.45 mm PVC Gucci 900 D or above ஆக இருத்தல் வேண்டும். | |
| 06 | Colour | Black | |
| 07 | Warranty | 1 Years | |
| 08 | Accessories | No. 01 Quality | |
| 09 | ஒரு அங்குலத்திற்கு குறைந்தபட்சம் 5 தையல் இருத்தல் வேண்டும். | | |
| 10 | தையல் இடைவெளி 1cm இருத்தல் வேண்டும். | | |
| 11 | உட்புறம் முழுமையாக 210 or above , Fabric இட்டு லைனிங் செய்திருத்தல் வேண்டும். | | |
| 12 | Bar, செய்திருத்தல் வேண்டும். | | |
| 13 | குஷன் செய்யப்பட்ட 7' அளவான Handle ஒன்று இருத்தல் வேண்டும். | | |
| 14 | பையின் பின்புறம் தையல் இடைவெளியைத் தவிர்த்து 5mm குஷனில் padding செய்திருத்தல் வேண்டும். | | |
| 15 | பையின் முன்புறம் ''தென் மாகாண சபை'' என எம்போஸ் செய்திருத்தல் வேண்டும். | | |

**உருப்படி 02 - புத்தகம் மற்றும் பேனை**

| தொ. இல. | உருப்படி | விபரக்குறிப்பு | தேவையான அளவு | 2024-07-18ஆம் திகதியில் வழங்கக் கூடிய அளவு | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | 120 பக்க CR ஒற்றை ரூல் கொப்பி | 210 × 297 (+ - 2 mm)<br>வெளிப்புற உறை லெமினேடிங் இன்றி 300 gsm<br>உட்புற பக்கங்கள் 60 gsm | 20000 | | 50000.00 |
| 02 | 120 பக்க ஒற்றை ரூல் அப்பியாசக் கொப்பி | 148 × 210 (+ - 2 mm)<br>வெளிப்புற உறை லெமினேடிங் இன்றி 300 gsm<br>உட்புற பக்கங்கள் 60 gsm | 20000 | | |
| 03 | நீல நிற பேனை | 0.5 mm | 24000 | | |
| 04 | சிவப்பு நிற பேனை | 0.5 mm | 8000 | | |
| 05 | கறுப்பு நிற பேனை | 0.5 mm | 16000 | | |
| | மொத்தப் பெறுமதி | | | | |

02. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-07-15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், தென் மாகாண கல்வி அமைச்சு, தக்ஷினபாய, லபுதுவ, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து பிரதான கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பைகளுக்கான விலைமனுக்கள் மற்றும் புத்தகம் மற்றும் பேனைகளுக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
03. விலைமனுக்கள் 2024-07-15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரின் தலைமையில் அமைச்சில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
04. 01ஆம் உருப்படி மற்றும் 02ஆம் உருப்படிகளுக்காக 2024-07-15ஆம் திகதி முதல் 2024-10-31ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில், தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் இலங்கை வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 50,000.00 ரூபா வீதம் விலைக்கோரல் பிணை முறி அல்லது கல்வி அமைச்சின் கணக்கிடல் பிரிவிற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (01ஆம் உருப்படி மற்றும் 02ஆம் உருப்படிகளுக்காக வெவ்வேறான விலைக்கோரல் பிணை முறியொன்றை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்) காசோலை அல்லது வங்கிப் பிணையாக சமர்ப்பிக்கப்படும் வங்கிப் பிணை முறி நிராகரிக்கப்படும்.
05. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 77 நாட்களாகும்.
06. உங்களின் விலைமனுக்களுடன் வழங்குவதற்கு உத்தேசித்துள்ள பையின் அல்லது புத்தகம் மற்றும் பேனையின் மாதிரியை (SAMPLE) சமர்ப்பித்தல் கட்டாயமாகும் என்பதுடன் அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.
07. உங்களால் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அந்த விலைமனு ஆவணங்களுடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழ், அனுபவம் மற்றும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிகள் (SAMPLE) விபரக்குறிப்புகளுக்கு இணக்கமானவை என்பதற்கான சான்றொன்றை உங்கள் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. கட்டளையிடப்பட்டு 03 நாட்களுக்குள் (2024-07-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்) இந்த பைகள் மற்றும் புத்தகம் மற்றும் பேனைகளை எங்களால் பெயரிடப்படும் தென் மாகாணத்தின் எந்தவொரு இடத்திற்கும் இலவசமாகப் போக்குவரத்து செய்யக்கூடியதாகவிருத்தல் வேண்டும். பகுதியாகக் கொள்வனவு செய்வது கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் 03 நாட்களுக்குள் (2024-07-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்) உங்களால் வழங்கக்கூடிய பைகள் மற்றும் புத்தகம், பேனைகளின் அளவிற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகின்றது.
09. குறைபாடுகளுடனான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இந்த பெறுகை தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

**ரஞ்சித் யாபா,**
**பெறுகைக் குழுத் தலைவர்,**
**தென் மாகாண கல்வி அமைச்சு, முதலாம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி.**
**2024-07-11.**
**தொலைபேசி இல. 0912030700 மின்னஞ்சல்: acc.moesp@gmail.com**

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## பாணந்துறை, பதுளை மற்றும் அனுராதபுர ஆகிய இடங்களில் அலுவலக வசதிகள் தேவை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பாணந்துறை, பதுளை மற்றும் அனுராதபுர கிளைகளுக்காக பின்வரும் வசதிகளையுடைய அலுவலக இடப்பரப்பொன்று வாடகைக்கு/ குத்தகைக்கு பெறுவதற்கான தேவைப்பாடொன்று உருவாகியுள்ளது.

| கிளைகள் | சதுர அடி |
|---|---|
| பாணந்துறை | 2600 - 2700 |
| பதுளை | 1700 - 2000 |
| அனுராதபுரம் | 1400 - 1500 |

**தேவைப்படும் வசதிகள்:**

- பிரதான வீதியொன்றிற்கு முகப்பாகவுள்ள தரை மாடியொன்று
- ஆகக் குறைந்தது 4 வாகனங்களுக்கான தரிப்பிடம்
- போதுமானளவு காற்றோட்டத்துடனான தனியான மின்பிறப்பாக்கி அறைக்கான இடப்பரப்பு
- தீ காப்புறுதி மற்றும் மின்சார பொறியியல் சான்றிதழ்
- மாற்றுத்திறனாளிகளுக்காக தனியான உட்புகும் வழி
- நீர், தொலைபேசி, மூன்றுவழி (3 Phase) மின்சாரம், மின்பிறப்பாக்கி மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் அடங்கலான ஏனைய அடிப்படை தேவைப்படுத்தல்கள்.
- அவசர வெளியேறும் வழிகள்
- ஓடு பதிக்கப்பட்ட / கம்பளம் பதிக்கப்பட்ட தரை
- ஆகக் குறைந்தது 25 அடியுள்ள வீதி முகப்பு

2024.08.02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை, சதுர அடியின் எண்ணிக்கை, அங்கீகரிக்கப்பட்ட கட்டிட கிடைப்படம், COC, உறுதி மற்றும் நில அளவை கிடைப்படம் மற்றும் ஏனைய நிபந்தனைகள் அடங்கலான முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அனைத்து விபரங்களையும் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது அதே முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விகள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர் (பெறுகைக் குழு),**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03.**

மேலதிக விபரங்களுக்கு 011-7722879/011-7722784 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக மனித வளங்கள் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் இற்கான பிரதான முகாமையாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03.**


adz Observer / வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Badulla & Nuwaraeliya District

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

ADZ HOTLINE - 011 2 429 369

CALL - 011 2 429 342/ 343


# காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)

## 33 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**குறிப்பு இல: RDA/LA/98/44 (Vol. 01)**

பிரதிப் பணிப்பாளர் பொது (காணி முகாமைத்துவம்) (பதில் கடமையாற்றுபவர்), வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி ஆகிய நான் காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சுவீகரிக்கப்பட்ட காணிக்குரிய நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர் உறுதிப்படுத்தி மற்றும் உரிமை கோருபவர் தோன்றி பெற்றுக்கொள்ள கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கத்தின் கீழ பற்று வைக்கப்பட்டுள்ள தென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | மேல் |
| மாவட்டம் | : | கொழும்பு |
| பிரதேச செயலகம் | : | திம்பிரிகஸ்யாய |
| கிராமத்தின் பெயர் | : | திம்பிரிகஸ்யாய (கொழும்பு மாநகர சபை எல்லைக் குட்பட்ட வட்டார இல. 40 - திம்பிரிகஸ்யாய மற்றும் வட்டார இல. 41 - கிருல்ல) |
| ஆரம்ப வரைபட இல. | : | கொ.8708 |

| துண்டு இல. | காணியின் பெயர் | விஸ்தீரணம் (ஹெக்.) | தொகை (ரூ.) | வழக்கு இல. |
|---|---|---|---|---|
| 132 | வரி மதிப்பீட்டு இல. 472A, திம்பிரிகஸ்யாய வீதி | 0.0004 | 132,000/= | 00008/09/DLA |
| 221 | தெரியவில்லை | 0.0027 | 1,000/= | DLA/04/23 |
| 222 | தெரியவில்லை | 0.0010 | 1,000/= | DLA/03/23 |

**ஏ.டி.சிறிவர்த்தன (சட்டத்தரணி),**
**பிரதிப் பணிப்பாளர் பொது (காணி முகாமைத்துவம்) (பதில் கடமையாற்றுபவர்)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி.**

**காணிப் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**04வது மாடி, " மகாநெகும மஹாமெதுர",**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்தை, பத்தரமுல்லை.**
**11.07.2024**


OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk





# தென் மாகாண சபை - முதலமைச்சு

# பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சபையின் முதலமைச்சு பெறுகைக் குழுத் தலைவரால் கீழ்க்காணும் நிர்மாண வேலை விடயங்களுக்காக திறன் உடைய மற்றும் தகைமைகளைக் கொண்ட கேள்விதாரர்களிடம் இருந்து வேறு வேறாக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலைகள் | மானிய தன்மை | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. (வெட் இன்றி) | தேவைப்படும் பதிவு | கேள்விப் பிணை (ரூ.) | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| **காலி மாவட்டம்** | | | | | | |
| 1. | பெந்தொட்ட மாவட்ட வைத்திய சாலையின் சகல கட்டிடங்களையும் பழுதுபார்த்தல் (வார்ட்சமையலறை, பற் சிகிச்சையகம் மற்றும் அம்பியூலன்ஸ் கராஜ்) மற்றும் தீந்தை பூசுதல் | வரிசை அமைச்சு பெறுகை | 12,139,466.67 | C6-C5 | 122,000.00 | 4,000.00 |
| 2. | பிட்டிகல மாவட்ட வைத்திய சாலையில் அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் வேலையை பூர்த்தி செய்தல் | | 14,561,454.95 | C6-C5 | 146,000.00 | 5,000.00 |
| 3 | ஓபாத்த மாவட்ட வைத்தியசாலையின் வசதிகளை மேம்படுத்துதல் (வார்ட் கட்டிடங்களை நீடித்தல்) | | 12,564,049.32 | C6-C5 | 126,000.00 | 4,000.00 |
| 4 | பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் மூன்று மாடிக் கட்டிடத்தின் தரைமாடி மற்றும் முதலாம் மாடி வேலையை பூர்த்தி செய்தல் | மாகாண நிலையான வழங்கல் (PSDG) | 16,888,792.50 | C6-C5 | 169,000.00 | 6,000.00 |
| **மாத்தறை மாவட்டம்** | | | | | | |
| 5 | தேனுவல ஆரோக்கியா சுவதா நிலையத்தின் தங்குமிட அலகை நீடித்தல் | | 12,174,916.70 | C6-C5 | 122,000.00 | 4,000.00 |
| **காலி மாவட்டம்** | | | | | | |
| 6 | ஹபராதுவ மாவட்ட வைத்தியசாலையின் சமையலறைக் கூரை, நீர் சேவை மற்றும் கதவுத்தாழ் பழுதுபார்த்தல் | வரிசை அமைச்சு மானியம் | 3,868,890.45 | C8-C7 | 39,000.00 | 1,500.00 |
| 7 | பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் பழைய களஞ்சியத்தை நீடித்தல் | | 5,514,662.84 | C7-C6 | 56,000.00 | 2,500.00 |
| 8 | இமதுவ மாவட்ட வைத்திய சாலையின் பக்கச் சுவர், பிரதான கேட் மற்றும் எல்லை சுவரை நிர்மாணித்தல் | | 5,083,269.30 | C7-C6 | 57,000.00 | 2,500.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் ஊடாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறும் சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபையில் மேற்கூறப்பட்ட வகுதியின் கீழ் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

03. 03/2020ஆம் இலக்க 2020-10-09ஆம் திகதிய மற்றும் 03/2020(i)ஆம் இலக்க 2021.01.11ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைந்த திட்டங்களுக்காக 04/2016(iii)ஆம் இலக்க மற்றும் 2021-02-18ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏற்புடையதாகும் என்பதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA Grade) முன்னுரிமை மற்றும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விலைக்கோரல் மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

04. வேலை முன்மொழிவு 1 மற்றும் 03ஆம் இலக்கங்களுக்கு இயைபான விலைக்கோரல் விண்ணப்பங்களை 2024.07.12ஆம் திகதி முதல் 2024.07.30ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் லபுதுவ, தக்ஷினபாய, தென் மாகாண பிரதான அமைச்சின் திட்டமிடல் பிரிவிலிருந்தும், 6 மற்றும் 8ஆம் இலக்கங்களுக்கு இயைபான விலைக்கோரல் விண்ணப்பங்களை காலி, மாகாலி, தென் மாகாண ஆயுர்வேத திணைக்களத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். தற்போதுள்ள சிரமங்கள் காரணமாக விலைமனுக்களை மின்னஞ்சலில் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் இந்த இலக்கங்களுக்கு வேலை நாட்களில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (பிரதான அமைச்சு - 091-4946620, 091-4946844 / சுகாதார சேவைத் திணைக்களம் 091-2225691, 091 2246739.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட வேலை முன்மொழிவு 1 மற்றும் 05ஆம் இலக்கங்களுக்கு இயைபான விலைமனுக்கள்2024.07.31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், தென் மாகாண பிரதான அமைச்சு, 5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி எனும் முகவரிக்கும், 6 மற்றும் 8ஆம் இலக்கங்களுக்கு இயைபான விலைமனுக்களை மாகாண ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேதத் திணைக்களம், மாகாலி, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. வேலை முன்மொழிவு 1 மற்றும் 05ஆம் இலக்கங்களுக்கு இயைபான விலைமனுக்கள் 2024.07.31ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தென் மாகாண பிரதான அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரின் தலைமையில் அமைச்சிலும், 6 மற்றும் 8ஆம் இலக்கங்களுக்கு இயைபான விலைமனுக்கள் ஆயுர்வேதத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரின் தலைமையில் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திலும் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

07. வேலை முன்மொழிவு 1 மற்றும் 05ஆம் இலக்கங்களுக்கு இயைபாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறியானது இலங்கையின் வர்த்தக வங்கியொன்றில் தென் மாகாண பிரதான அமைச்சின் செயலாளரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட 2024.07.31ஆம் திகதி முதல் 2024.11.12ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்று அல்லது அமைச்சின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் வழங்கப்படும் பணப் பற்றுச்சீட்டை விலைக்கோரல் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். முன்மொழிவு 6 மற்றும் 8ஆம் இலக்கங்களுக்கு இயைபாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறியானது மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் பிணை முறி அல்லது சுகாதார சேவைத் திணைக்களத்தின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைக்கோரல் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

08. விலைமனுக்கள் 77 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

09. சமர்ப்பிக்கப்படும் வேலைகளுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் சமர்ப்பிக்கும் விலைகளை மூடும் வகையில் செலோடேப் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும். அதன் மூலப்பிரதியானது ''மூலப்பிரதி'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நகல்பிரதியில் ''நகல்பிரதி'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுக்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

10. முழுமையற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் விலைக்கோரல் பிணைத் தொகை அரசுரிமையாக்கப்படும். குறித்த விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு கொண்டுள்ளது. இந்த பெறுகை தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண முதல் அமைச்சு,**
**5ஆம் மாடி, தக்ஷினபாய,**
**லபுதுவ, காலி.**

2024.07.12




SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk


## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**எம்பிலிப்பிட்டிய, எல்லேவெவ நீர்த்தேக்கத் திட்டம், குளக்கட்டை நிர்மாணிப்பதற்காக மண் வழங்குவதற்கான பெறுகை**

## தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

1. பின்வரும் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | வழங்கல் விபரங்கள் | எண்ணிக்கை (கியூப்) | விலைக்கோரல் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/2024/017 (மீள் விலைக் கோரல்) | எல்லேவெவ நீர்த்தேக்கத் திட்டம், குளக்கட்டை நிர்மாணிப்பதற்காக மண் வழங்குதல் (அகழ்தல், ஏற்றுதல், போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல் உட்பட) | 25,000 | 750,000.00 |

2. மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500.00 ரூபாவை செலுத்தியதன் பின் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்து கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, 213ஆம் இலக்க அறை, நீர்ப்பாசன பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) 2024-07-12ஆம் திகதி முதல் 2024-08-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் தேவையானால் விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2582677
4. பின்வரும் 02ஆம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் வேலைத் தள விஜயம் இடம்பெறும். இயைபுடைய விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அட்டவணை இல. 02**

| வேலைத் தள விஜயம் | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் |
|---|---|
| திகதி - 2024-07-19 | திகதி - 2024-07-22 |
| நேரம் - மு.ப. 10.00 மணி | நேரம் - மு.ப. 10.30 மணி |
| இடம் - பிரதான வதிவிடப் பொறியியலாளர் அலுவலகம், எல்லேவெவ நீர்த்தேக்கத் திட்டம், நீர்ப்பாசனத் திணைக்களம், பல்லேகம, எம்பிலிப்பிட்டிய. 047-2262310 | இடம் - குழு அறை, 4ஆம் மாடி, நீர்ப்பாசனத் திணைக்களம், இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07. |

5. வழங்குநர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து சகல சட்டபூர்வமான ஒப்புதல்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் சட்டபூர்வமான அனுமதிக்கு ஏற்புடைய வரிகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
6. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024-11-03ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரை) செல்லுபடியாதல் வேண்டும். மேலும் அத்துடன் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு 2024-12-01ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரை) செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் பதிலளிக்காதவை எனக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும்.
7. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-08-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், ஒன்றில் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள (பிரதான நிதியிடல் அலுவலரின்) 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், மேற்கூறிய முகவரியில் உள்ள பிரதான நிதியியல் அதிகாரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-08-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
9. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் விபரங்களை தயவுசெய்து எழுதவும்.
10. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

**2024-07-12ஆம் திகதி.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கண்டி மாநகர சபையின் நீர் வேலைகள் திணைக்களத்திற்குத் தேவையான பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக 2024–08–01ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

1. இதன் பொருட்டு தகைமை வாய்ந்த விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கண்டி மாநகர சபை சிறாப்பர் பிரிவிற்கு பணப் பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் வேண்டுகோள் கடிதம் மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனி பதிவுச் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | உருப்படிகள் | அளவு | எண்ணிக்கை | விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | விலைக்கோரல் பிணை முறி (2024-10-31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில்) | விலைக் கோரல் ஆவணத்தின் விலை (வெட் சகிதம்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | Tapping Machine | Number | 01 | CPC/KMC/FD/S/ PC02/2024/2/13 | ரூபா 20,000.00 | ரூபா 2,360.00 |
| 02 | 400mm Ultra grip Coupling (PN16) | Number | 02 | CPC/KMC/FD/S/ PC02/2024/2/14 | ரூபா 100,000.00 | ரூபா 2,360.00 |
| | 400mm Ultra grip flanged Adopter (PN16) | Number | 02 | | | |
| | 400mm SS liner Saddle (HDPE) | Number | 01 | | | |
| | 110mm dia Double Flanged DI pipe PN16 (Long-6m) | Number | 40 | | | |
| 03 | HDPE மற்றும் DI நீர்க் குழாய்கள் உட்பட துணைப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளல் | | | CPC/KMC/FD/S/ PC02/2024/2/15 | ரூபா 100,000.00 | ரூபா 2,360.00 |

2. மேற்கூறிய சகல பொருட்களுக்காகவும் விலைமனுதாரர் வெவ்வேறான வகையில் மூன்று (03) வருடங்களுக்கு மேற்கூறிய பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக வியாபாரப் பெயர் பதிவுச் சட்டம் அல்லது கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் குறித்த பொருட்களின் உற்பத்தியாளராக இல்லாதபட்சத்தில் விநியோகிப்பதற்கான உற்பத்தியாளரின் அதிகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் கணக்காளர் (வழங்கல்), மாநகர சபை, கண்டி (T.P 0812 232071) (மின்னஞ்சல்: supplieskmc@gmail.com) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-07-12ஆம் திகதி முதல் 2024-07-31ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.45 மணித்தியாலம் வரையில் கணக்காளர் (வழங்கல்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்களை கட்டணம் செலுத்தாமல் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஒவ்வொரு பொருட்களுக்காகவும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2024-07-12ஆம் திகதி முதல் 2024-07-31ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.45 மணித்தியாலம் வரையான காலத்தினுள் ஒவ்வொரு பொருட்களுக்காகவும் வெவவேறாக நிறுவனக் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றை பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்பாக இலங்கை ரூபாயில் வெட் வரி சகிதம் இரண்டாயிரத்து முன்னூற்று அறுபது ரூபா (வெட் சகிதம் 2360.00 ரூபா) கட்டணத்தை மாநகர காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்று சீட்டை வழங்கல் பிரிவிற்குச் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ரொக்கப் பண கொடுப்பனவுகள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.
5. மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை இரு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு ''மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, கண்டி'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பிரதான மாநகர கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2024-08-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024-08-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி மாநகர சபையின் புதிய நகர மண்டபத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 2024-10-31ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கத்திற்கு முன்னால் தரப்பட்டுள்ள வகையில் குறித்த பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை குறித்த விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. விலைக்கோரல் பிணை முறியானது கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி இலங்கை ரூபாயில் இருத்தல் வேண்டும் என்பதுடன் விலைக்கோரல் ஆவணத்தின் IV ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.
9. காரணம் காட்டாமல் கிடைக்கப்பெற்றுள்ள எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மாநகர ஆணையாளருக்கு உரிமை உண்டு.

**ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்க,**
**மாநகர ஆணையாளர்,**
**கண்டி மாநகர சபை, கண்டி.**

2024-07-04.

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 ஜூலை 12 வெள்ளிக்கிழமை

# சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை இலங்கைக்கு மாற்ற வாய்ப்பு

## பாகிஸ்தான் செல்வதில் இந்தியா தயக்கம்



அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு இந்திய அணி பாகிஸ்தான் செல்ல வாய்ப்பு இல்லை என்றும் அந்தத் தொடரை இலங்கை அல்லது டுபாய்க்கு மாற்ற சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலிடம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கோரிக்கை விடுக்கக்கூடும் என்றும் அந்த சபை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியா அணி 2008 ஆம் ஆண்டு தொடக்கம் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டதில்லை என்பதோடு அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியில் இரு அணிகளும் பல அணிகள் பங்கேற்கும் தொடர்களிலேயே எதிர்த்தாடி வருகின்றன.

கடந்த ஆண்டு நடந்த ஆசிய கிண்ணத் தொடரை நடத்தும் உரிமை பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டபோதும், சம்பியனான இந்திய அணி தனது அனைத்துப் போட்டிகளையும் இலங்கையிலேயே ஆடியது.

பாகிஸ்தான் செல்வதற்கு தமது அரசு அனுமதி மறுத்ததாகக் கூறியதை அடுத்தே ஆசிய கிண்ணத் தொடர் கலப்பு வடிவத்தில் இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடத்தப்பட்டது.

இந்நிலையில் எட்டு நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பாகிஸ்தானில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இதற்கான உத்தேச போட்டி அட்டவணையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அண்மையில் வெளியிட்டிருந்தது. இதில் இந்திய அணியின் பயணங்களை மட்டுப்படுத்தும் வகையில் அந்த அணியின் போட்டிகளை லாகூரில் மாத்திரம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இந்தியா மற்றும் இலங்கையுடன் இணைந்து நடத்திய பின்னர் பாகிஸ்தானில் நடைபெறும் முதலாவது பிரதான கிரிக்கெட் தொடராக சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் அமையவுள்ளது.

எவ்வாறாயினும் இந்திய அணி பாகிஸ்தான் செல்வதில் தொடர்ந்து நிச்சயமற்ற சூழல் நீடித்து வருகிறது.

மத்திய அரசு அனுமதி அளித்தால் மாத்திரமே இந்தத் தொடருக்காக இந்திய அணி பாகிஸ்தானுக்கு அனுப்பப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை பிரதித் தலைவர் ராஜீவ் ஷுக்லா குறிப்பிட்டுள்ளார். 'சம்பியன்ஸ் கிண்ணத்தைப் பொறுத்தவரை, இந்திய அரசு எமக்கு எதனைக் கூறுகிறதோ அதனையே நாம் செய்வோம். இந்திய அரசு எமக்கு அனுமதி அளித்தால் மாத்திரமே; நாம் எமது அணியை அனுப்புவோம். எனவே, இந்திய அரசின் முடிவுக்கு அமையவே நாம் செயற்படுவோம்' என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் அடுத்த வாரம் கொழும்பில் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் கூட்டம் நடைபெறவுள்ளது. இதன்போது இது தொடர்பில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு முன்னர் இந்திய அணி இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளிலும் சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிராக மூன்று ஒருநாள் போட்டிகளிலும் ஆடவுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு இலங்கை அணி தகுதி பெறவில்லை என்பதோடு கடைசியாக நடந்த 2017 ஆம் ஆண்டு தொடரில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி நடப்புச் சம்பியனாகவே இம்முறை தொடரில் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயினுடனான இறுதிக்கு இங்கிலாந்து முன்னேற்றம்



ஒலி வட்கின்ஸ் மேலதிக நேரத்தில் பெற்ற அபார கோல் மூலம் நெதர்லாந்துக்கு எதிரான யூரோ கிண்ண அரையிறுதியில் 2–1 என்ற கோல்களால் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி ஸ்பெயினுக்கு எதிரான இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஜெர்மனியின், டோர்ட்முன்டில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது அரையிறுதியில் நெதர்லாந்து அணி 7 ஆவது நிமிடத்திலேயே கோல் பெற்று முன்னிலை அடைந்தபோதும் 18 ஆவது நிமிடத்தில் பெனால்டி உதை மூலம் இங்கிலாந்து பதில்கோல் திருப்பியது.

இந்நிலையில் வெற்றி கோலை பெறுவதற்கு இரு அணிகளும் கடுமையாகப் போராடிய நிலையில் போட்டியின் மேலதிக நேரத்தின் முதல் நிமிடத்திலேயே பந்தை தாழ்வாக உதைத்து கோல் புகுத்திய வட்கின்ஸ் இங்கிலாந்தின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்மூலம் தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் யூரோ கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருக்கும் இங்கிலாந்து அணி 1966இற்கு பின்னர் பிரதான கால்பந்து தொடர் ஒன்றில் சம்பியனாகும் முயற்சியாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பேர்லினில் நடைபெறும் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# சம்பியனானது ஒரியன்ஸ்



**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

கடாண்டுகம யுனைடெட் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கெகிராவ ஒரியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கடாண்டுகம பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (06) நடைபெற்ற இறுதிப் போட்டியில் விஜிதபுர டப்ளியு.சி.சி. அணியை எதிர்கொண்ட ஒரியன்ஸ் 15 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இந்தத் தொடரில் 13 அணிகள் பங்கேற்றிருந்தன.

இதில் தொடர் நாயகன் விருதை ஒரியன்ஸ் அணியின் சமன் வென்றதோடு சிறந்த பந்து வீச்சாளராக ஒரியன்ஸ் அணியின் அக்ரமும் சிறந்த துடுப்பாட்ட வீரராக யுனைடெட் அணியின் சவாஹிரும் தெரிவாகினர்.



## சர்வதேச செய்திகள்

# காசா நகர வீதிகளில் மீட்க முடியாது குவிந்துள்ள உடல்கள்: வெளியேறுவோர் மீது 'ஸ்னைப்பர்' சூடு

## போர் நிறுத்தத்திற்கு மத்தியஸ்தர்கள் தொடர்ந்து முயற்சி

எகிப்து மற்றும் கட்டாரில் இடம்பெற்று வரும் காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு மத்தியிலும் காசா நகரில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் புதிய தாக்குதல்களால் வீதிகளில் மீட்கப்படாது உடல்கள் குவிந்து கிடப்பதாகவும் குடியிருப்பாளர்கள் வீடுகளில் சிக்கி இருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசா நகரில் இஸ்ரேல் ஆரம்பித்திருக்கும் பாரிய தாக்குதல்கள் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறாக அமையும் என்று ஹமாஸ் அமைப்பு எச்சரித்துள்ளது.

போருக்கு முன்னர் காசா மக்கள் தொகையில் கால் பங்குக்கும் அதிகமானவர்கள் வசித்து வந்த காசா நகர், கடந்த ஆண்டு போர் வெடித்து சில வாரங்களிலேயே அழிக்கப்பட்டது. எனினும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது இடிந்த வீடுகளுக்கு திரும்பினர். அவர்களை மீண்டும் வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் தற்போது உத்தரவிட்டுள்ளது.

காசா நகரின் அல் ஹவா மற்றும் சப்ரா பகுதிகளில் உள்ள மக்கள் தமது வீடுகளுக்குள்ளேயே சிக்கியும் கொல்லப்பட்டும் இருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அல் ஹவா மற்றும் ரிமால் பகுதிகளில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அங்குள்ள வீதிகளில் இருந்து சடலங்களை மீட்க முடியாதுள்ளதாகவும் காசா சிவில் அவசர சேவை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் இராணுவம் பெரும் அழிவுகளை மேற்கொண்டு இரண்டு வழிகளைப் பயன்படுத்தி தெற்கை நோக்கி செல்லும்படி அறிவுறுத்திய போதும் காசா நகரின் பல குடியிருப்பாளர்களும் அங்கிருந்து வெளியேற மறுத்து வருகின்றனர். 'நாம் வெளியேறப் போவதில்லை' என்று சிலர் சமூக ஊடகத்தில் பதிவிட்டு வருகின்றனர்.

'நாம் மரணித்தாலும் தெற்கிற்கு செல்ல மாட்டோம். ஒன்பது மாதங்களாக பட்டினி மற்றும் குண்டுகளை நாம் சகித்து வருகிறோம். உயிர்த்தியாகியாக இங்கேயே மரணிக்க நாம் தயாராக இருக்கிறோம்' என்று 30 வயதான முஹமது அலி, ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

அலியின் குடும்பம் நகருக்குள் பல தடவைகள் இடம்பெயர்ந்திருக்கும் நிலையில் உணவு, நீர் மற்றும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

'போர் மீண்டும் ஆரம்பிப்பது போன்று ஆக்கிரமிப்பாளர்கள் காசா நகரத்தின் மீது குண்டுகளை வீசுகின்றனர். விரைவில் போர் நிறுத்தம் ஒன்று வரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அப்படி இல்லாவிட்டால் இறைவனின் நாட்டப்படி நடக்கும்' என்றும் அவர் கூறினார்.

இதேவேளை காசா நகரில் இருந்து வெளியேறும் பொதுமக்கள் மீது இஸ்ரேலிய ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகள் சூடு நடத்துவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசா நகரில் உள்ள யார்முக் அரங்கை கடந்து செல்ல திட்டமிட்டபோதும் இஸ்ரேலிய ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்ட பலஸ்தீனர்களின் உடல்கள் வீதிகளில் இருப்பது பற்றி அறிவுறுத்தப்பட்டதாக பெண் ஒருவர் அல் ஜசீரா செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.



'வீதிகளில் இருக்கும் உடல்களை எடுத்துச் செல்லும்படி துணை மருத்துவர்கள் மற்றும் தீயணைப்புப் படையினரை கேட்கிறோம். இல்லாவிட்டால், அந்த உடல்களை நாய்கள் தின்னும். அந்த உடல்கள் புதைக்கப்பட வேண்டும்' என்று அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அந்த உடல்களை மீட்க முடியாதிருப்பதாக துணை மருத்துவர்கள் குறிப்பிட்டதாக மற்றொருவர் தெரிவித்துள்ளார். 'உடல்களை மீட்கும்படி தமக்கு அறிவுறுத்தல் கிடைக்கவில்லை என்றும் உடல்களை அணுகுபவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காவதாகவும் அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்' என்றார்.

வீதியில் நடந்து செல்பவர்கள் தலையில் சுடப்பட்டதை கண்டதாக பலரும் தெரிவித்துள்ளனர்.

காசா நகரில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு வரும் மக்கள் பெரும் வேதனையை சந்தித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். காசாவின் வடக்கில் சுமார் 300,000க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் இருப்பதாக ஐ.நா கணித்துள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் குறைந்தது 50 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் மூலம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,345 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 88,295 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் காசாவின் கிழக்கு புறநகர் பகுதியான ஷஜையாவில் கடந்த இரண்டு வாரங்களாக புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்ட இஸ்ரேலியப் படை அங்கிருந்து வெளியேறி இருப்பதாக காசா அரச ஊடகம் குறிப்பிட்டுள்ளது. இஸ்ரேலின் இந்தப் படை நடவடிக்கையில் பலர் கொல்லப்பட்டு குடியிருப்பு கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காசாவின் தெற்கு முனையில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் இஸ்ரேலிய டாங்கிகள் கடந்த மே மாதம் தொடக்கம் செயற்பட்டு வரும் நிலையில் நகரின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் வீடுகள் தொடர்ந்து தகர்க்கப்பட்டு வருவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இங்கு ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் சிறிய பலஸ்தீன போராட்டக் குழுக்கள் இஸ்ரேலிய படையுடன் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்கு ரபாவில் உள்ள டெல் அல் சுல்தான் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஒரு குழந்தை உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரபாவில் இருந்து வீசப்பட்ட ஐந்து ரொக்கெட் குண்டுகளை வெற்றிகரமாக இடைமறித்ததாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பு கடந்த வாரம் முக்கியமான விட்டுக்கொடுப்பு ஒன்றை செய்த நிலையில் கட்டார் மற்றும் எகிப்தில் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் முதலில் இணக்கத்தை வெளியிடுவதற்கு முன்னர் போர் நிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கும் சில பணயக்கைதிகளை விடுவிப்பதற்குமே ஹமாஸ் தனது நிபந்தனையில் தளர்வை கொண்டுவந்தது.

எனினும் எந்த ஓர் உடன்படிக்கையும் போரின் தமது நோக்கங்களை நிறைவு செய்வதற்காக போரை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுத்தி வருகிறார். நெதன்யாகுவின் கூட்டணி அரசில் உள்ள தீவிர வலதுசாரிகள், ஹமாஸ் ஒழிக்கப்படும் வரை போரை நிறுத்துவதை எதிர்த்து வருகின்றனர்.

# தேர்தலில் போட்டியிடுவதற்கு பைடனுக்கு வலுக்கும் எதிர்ப்பு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பதவியில் உள்ள ஜனாதிபதி ஜோ பைடன் சிறந்த தேர்வாக இருக்க முடியுமா என்று ஜனநாயகக் கட்சியின் 2 முக்கிய ஆதரவாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பிரதிநிதிகள் சபையின் முன்னாள் சபாநாயகர் நான்சி பெலோசி, ஹொலிவுட் நடிகர் ஜோர்ஜ் குலூனி இருவரும் ஜனாதிபதி தேர்தலில் பைடன் களமிறங்குவது குறித்துக் கவலை தெரிவித்துள்ளனர்.

பைடனின் நீண்டகால ஆதரவாளரான திருமதி பெலோசி, ஜனாதிபதி தேர்தலில் தொடர்ந்து போட்டியிடுவது பற்றி பைடன் துரிதமாக முடிவெடுக்க வேண்டும் என்றார். பைடனுடன் இணைந்து கடந்த மாதம் நிதி திரட்டிய ஹொலிவுட் நட்சத்திரம் குலூனி, தமது ஆதரவை மீட்டுக்கொள்வதாகக் கூறுகிறார்.

2020ஆம் ஆண்டு பார்த்த பைடன் வேறு இப்போது இருக்கும் பைடன் வேறு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

81 வயது பைடன் ஜூன் 27ஆம் திகதி நடைபெற்ற சி.என்.என். தொலைக்காட்சி விவாதத்தில் சரிவரப் பேசாததால் ஜனநாயகக் கட்சியில் சிலர் அவர் தேர்தலில் இருந்து ஒதுங்குவதே நல்லது என்று கருதுகின்றனர்.

# பக்தாதியின் மனைவிக்கு ஈராக்கில் மரண தண்டனை




இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) குழுவின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதியின் முதல் மனைவிக்கு ஈராக் நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்துள்ளது.

உம்மு ஹுதைபா என்று அறியப்படும் அஸ்மா முஹமது என்ற அந்தப் பெண் ஐ.எஸ். உடன் இணைந்து பணியாற்றியது மற்றும் யாசிதி பெண்களை தடுத்து வைத்திருந்ததாக கார்க் குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றங்காணப்பட்டதாக உச்ச நீதிச் சபை தெரிவித்துள்ளது.

பக்தாதியின் பல மனைவிகளில் ஒருவரான உம்மு ஹுதைபா துருக்கியில் பொய்யான அடையாளத்துடன் தங்கியிருந்த நிலையில் 2018 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு இந்த ஆண்டு பெப்ரவரியில் ஈராக்கிற்கு நாடு கடத்தப்பட்டார்.

ஈராக் மற்றும் சிரியாவின் பெரும் பகுதியை கைப்பற்றி தன்னிச்சையாக கலீபத் ஒன்றை அறிவித்த ஐ.எஸ். குழு வீழ்த்தப்பட்ட நிலையில் அதன் தலைவர் பக்தாதி அமெரிக்க சிறப்புப் படையால் 2019 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். ஐ.எஸ். ஆட்சியில் யாசிதி மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்ததோடு அவர்களில் ஆயிரக்கணக்கான ஆண்கள் கொல்லப்பட்ட நிலையில் பெண்கள் பாலியல் அடிமைகளாக பிடிக்கப்பட்டனர்.

# சீனாவில் சமையல் எண்ணெய் கலப்படத்தால் பெரும் சர்ச்சை



எரிபொருள் கொண்டு செல்லும் கொள்கலன்கள் முறையாக சுத்தம் செய்யப்படாது சமையல் எண்ணெய் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்து அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று சீன அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தகவல் சீனாவில் உணவுப் பாதுகாப்பு தொடர்பிலான கவலையை அதிகரிக்கச் செய்துள்ளது. எரிபொருள் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படும் கொள்கலன்கள் சமையல் எண்ணெய் மற்றும் சிரப் வகைகள் போன்ற உணவு உற்பத்திகளை எடுத்துச் செல்வதற்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவை சரியான வகையில் சுத்தம் செய்யப்படுவதில்லை என்றும் அரச செய்தி நிறுவனமான 'பீஜிங் நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

கொள்கலன்களைச் சுத்தம் செய்யாமல் அவ்வாறு சமையல் எண்ணெயைக் கொண்டு செல்லும் நடைமுறையால் செலவு குறைகிறது என்று லொறி ஓட்டுநர்கள் கூறியதாக அந்தச் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கலப்படம் குறித்து இணையவாசிகள் பலரும் கோபத்தை வெளிப்படுத்தினர். விசாரணை வேண்டும் என்றும் அதிகாரிகள் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் சிலர் கூறினர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.